குண்டூசி

முதல்
ஆண்டு மலர்



விலை

ரூ. 1/4/-

Remember!
4037



மிகவும் உயர்தரமான

கவர்ச்சியுள்ள கலர் பிரிண்டிங்

ஒவ்வொரு விதத்திலும் அச்சிடுவதிலுள்ள

சகலவிதமான சேவைகளையும் செய்வோம்

பேபர் அச்சிடுதல், ப்ளாக்குகள்

மூன்று கலரில் - ஹாப்டோன்

- லைன் கட்டுகள் -

•

தந்தி: "PRINTHOUSE".
போன்: 4037
தபால் பெட்டி: 1569

கமர்ஷியல் பிரிண்டிங் & பப்ளிஷிங் ஹவுஸ்

46, அரண்மனைகாரத் தெரு, :: சென்னை-1

தீபாவளி
தினத்தந்தி ராஜதானி
முழுவதும் ஆரம்பமாகிறது...
ஜுபிடரின்
மோகினி
அனைவரும் அன்று கண்டு களிப்பர்........
மீண்டும் மீண்டும் அதையே கண்டானந்திப்பர்
தயாரிப்பு · எம்.சோமசுந்தரம் · டைரக்‌ஷன் · லங்கா சத்யம் · திரைக்கதை · ஏ.எஸ்.ஏ.சாமி · வசனம்-எஸ்.டி.சுந்தரம்
டி.எஸ்.பாலையா · எஸ்.ஜி.ராம்சந்தர் · ஆர்.பாலசுப்ரமணியம் · புளிமூட்டை ராமசாமி · எம்.என்.நம்பியார்.........
வி.என்.ஜானகி · மாதுரி தேவி · எம்.எஸ்.எஸ்.பாக்கியம் · ஆர்.மாலதி · கே.லக்ஷ்மிகாந்தா நர்த்தனம் · லலிதா-பத்மினி

make your show better
THE Shomen makes the best show

குண்டூசி
மலரில் உள்ள
சித்திர
அனுபந்தங்களும்
பல கலர்
படங்களும்
எங்கள்
ஆர்டிஸ்ட்
முகில்
தயார்
செய்தவை.

THE Shomen

CREATIVE-DESIGNERS
60, Luz Church Road,
Madras 4.

134111

எல்லாவித ஜவுளி
தினுசுகளுக்கும்
நம்பிக்கையான
இடம்

சித்ரா
ஸ்டோர்ஸ்
120 சைனா பஜார், சென்னை



ராயல்

சுதர்சன்

சின்னப்பா	டைரக்ஷன்:
கண்ணாம்பா	சுந்தர்ராவ் நட்கர்ணி
யோகமங்களம்	வசனம்:
பி. எஸ். சரோஜா	இளங்கோவன்
டி. எஸ். பாலையா	பாட்டு:
பி. பி. ரெங்காச்சாரி	பாபநாசம் சிவன்

ஸ்டுடியோ: சென்ட்ரல், கோவை

முகில்

RAYAL TALKIE DISTRIBUTORS

ராயல் டாக்கி டிஸ்ட்ரிப்யூட்டர்ஸ் மதுரை, பெஜவாடா, பெங்களூர்

WATCHES · CLOCKS
TIME PIECES · FOUNTAIN PENS
ROLLED GOLD JEWELLERY
GIFT ARTICLES

...MPANY

ESTD 1915
RATTAN BAZAR
— MADRAS —



360

இந்த மலரில்

பட்டை - 2. ஊசி - 1.

1.	தீபாவளி தமாஷ்	சித்திரம்	12
2.	சமர்ப்பணம்	தலையங்கம்.	13
3.	குயில்கள் சம்பாஷணை	ஹாஸ்யச் சித்திரம்	15
4.	பட உலக விந்தை	"வல்லிக்கண்ணன்"	16
5.	எம். கே. டி. பாகவதர்	வாழ்க்கை வர்ணனை	21
6.	ஹாஸ்யச் சித்திரங்கள்	... ...	34
7.	செய்திப் படங்கள்	... ...	39
8.	நவஜீவனம், சுதர்சன்	... ...	42
9.	பிழைக்கும் வழி, சக்ரதாரி	... ...	43
10.	எதிர்பாராத திருமணம் (சிறுகதை)	சு. ரா.	48
11.	நுனிப்புல்	"வெட்டுக்கிளி"	58
12.	சந்தேகம் (சிறுகதை)	பத்ம பாரதி	62
13.	தமயந்தி ஹேர் ஆயில்	ஹாஸ்யச் சித்திரம்	69
14.	புராணப் படங்களுக்கு கன்ட்ரோல்	"மார்ஸ்"	78
15.	குண்டூசியைக் கேளுங்கள்	"குண்டூசி"	82
16.	செய்திப் படங்கள்	... ...	85
17.	புதிய ஹேர் ஆயில்	ஹாஸ்யச் சித்திரம்	96
18.	மோகினி	திரைக் கதை	97
19.	முதல் ஷூட்டிங்	"ஜரா"	104
20.	டி. ஆர். ராஜகுமாரி	வாழ்க்கை வர்ணனை	114
21.	போதும் 11,000 அடி	எஸ். சௌந்தரராஜன்	122

22. இது செய்தி 126

23. நாய்களும், நக்ஷத்திரங்களும் "டைரி பேர்" 132

24. க்யூ வரிசை ஹாஸ்யச் சித்திரம் 133

25. பிரம்மலோகம் படச் செய்திகள் 139

26, குண்டூசி டைரி வருஷக் குறிப்பு 142

பட அநுபந்தம்

1. கண்ணாம்பா இருவர்ணப் படம் 9

2. உதயசங்கர், அமலா தேவி ஆர்ட் படம் 10

3. வி. என். ஜானகி மூவர்ணப் படம் 19

4. பேபி ராஜாமணி ஆர்ட் படம் 20

5. எம். கே. டி. பாகவதர் ஆர்ட் படம் 26

6. பி. எஸ். சரோஜா மூவர்ணப் படம் 30

7. டி. ஏ. மதுரம் மூவர்ணப் படம் 55

8. என். எஸ். கிருஷ்ணன் ஆர்ட் படம் 56

9. ஏ. ஆர். சகுந்தலா இருவர்ணப் படம் 65

10. டி. ஏ. ஜெயலக்ஷ்மி ஆர்ட் படம் 66

11. லலிதா இருவர்ணப் படம் 75

12. டி. ஆர். மஹாலிங்கம் ஆர்ட் படம் 76

13. எம். எஸ். சரோஜினி இருவர்ணப் படம் 101

14. குமாரி கமலா ஆர்ட் படம் 102

15. எம். வி. ராஜம்மா மூவர்ணப் படம் 111

16. டி. ஆர். ராஜகுமாரி ஆர்ட் படம் 112

மானேஜர் :
கே. ராதாகிருஷ்ணன்

சித்திரக்காரர் :
"முகில்"

ஆசிரியர், பிரசுரகர்த்தா :
பி. ஆர். எஸ். கோபால்

அச்சிடுபவர் :
பி. அருணாசலம்

அச்சகம் :

கமர்ஷியல் பிரிண்டிங் அன் பப்ளிஷிங் ஹவுஸ்,

46, அரண்மனைக்காரத் தெரு, சென்னை. 1,

பிரசுராலயம் :

246, தம்புச் செட்டித் தெரு, சென்னை 1.

மங்களகரமான

தீபாவளி வாழ்த்துக்கள்!

எல்லாவிதமான மில் ஜவுளி திணுசுகளுக்கும் நம்பிக்கையான இடம்.

ஸ்ரீ

ராதாகிருஷ்ணா

ஸ்டோர்ஸ்

..மேலகோபுரம்..

..மதுரை..

.முகில்.

கண்ணைக் கவரும் பல ஊர் பட்டு நூல் சேலைகள், மில், வாயில் நாகரீக ஜவுளிகள் பல ரகங்களில் ஏராளமாய் வந்துள்ளன. விலை மிக சரஸம்.

இன்றே

விஜயம் செய்யுங்கள்!

ஸி.என்.எத்திராஜ் & கோ

17 கிடங்குத் தெரு

சென்னை 1

கொலம்பியா
உன்னத வெளியீடு
AVM புரொடக்ஷன்ஸ்
வேதாள உலகம்
பாக்கிப்பாட்டுகள்
கான ஸரஸ்வதி D.K.பட்டம்மாள் பாடிய
GE.6541 {தீராத விளையாட்டுப் பிள்ளை
2 பாகங்கள்
இதர ரிகார்டுகள்
GE.6542
ஆஹா ஆனந்தமானேன்
K. சாரங்கபாணி & பார்ட்டி
ஐய்யய்ய பார்க்க..
GE.6543
சேலார் விழி மாதை
கோபியர் கொஞ்சும்
..............ரமண
GE.6544
சோலையழகினில்..
போதும் போம்....
GE.6545
ஆரா இன்பம் தந்தார்
மதனாங்க சுந்தர..
GE.6547
இரவிலே வந்தான்
ஓடி விளையாடு பாப்பா
GE.6548
பாம்பாட்டி பாடல்கள்
.........2 பாகங்கள்
ஸரஸ்வதி ஸ்டோர்ஸ்..... மதராஸ்-2.

தமிழ்நாடெங்கும்
கூடிய சீக்கிரம் வெளிவருகிறது...
உதயசங்கரின்
கல்பனா
ஜெமினி
ரிலீஸ்
நேத்திரானந்தமான நடனங்களும்
இனிமையான கானங்களும் நிறைந்தது...

தீபாவளி தமாஷ்!

குண்டூசி

ஆண்டு மலர்

ஆசிரியர் பி.ஆர்.எஸ்.கோபால்

சமர்ப்பணம்

குண்டூசி முதல் ஆண்டு மலர் இதோ உங்கள் கையிலிருக்கிறது. இதில் அடங்கியிருக்கும் அழகிய படங்களைப் பார்க்கவும், விஷயங்களைப் படிக்கவும் நீங்கள் மிக மிக ஆவலாயிருப்பீர்கள் என்பது எனக்குத் தெரியும். ஆதலால் உங்களை அதிகம் தாமதிக்கச் செய்யாமல் சில வார்த்தைகளை மட்டும் கூற விரும்புகிறேன்.

சென்ற வருஷம் இதே அக்டோபர் மாதத்தில் குண்டூசியின் முதல் ஊசி வெளிவந்தது. இப்பொழுது உங்கள் கையிலிருக்கும் முதல் ஆண்டு மலருடன் அதை வைத்துப் பார்த்தால், குண்டூசி ஒரு வருஷ காலத்திற்குள் மடுவிலிருந்து ஒரு மலையளவு முன்னேறியிருப்பதைக் காண்பீர்கள். "அவசரக் கோலமாக" முடிந்திருந்த அந்த முதல் ஊசிக்கே நீங்கள் அபரிமிதமான ஆதரவு அளித்ததற்கு, என் எழுத்து மீது உங்களுக்குள்ள அபிமானமும், என்மீதுள்ள நம்பிக்கையும்தான் காரணம் என்பதை நான் அறிவேன். அந்த அபிமானத்திற்கும், நம்பிக்கைக்கும் காணிக்கையாக இந்த முதல் மலரை உங்களிடம் சமர்ப்பிக்கிறேன்.

இந்த மலரைப் பற்றி நீங்கள் மிக நல்ல அபிப்பிராயம் கொள்ளக் கூடும் என்பது எனக்குத் தெரியும். ஆனால், எனக்கென்னவோ இந்த மலர் திருப்தி அளிக்கவில்லை. ஏனென்றால், நான் இந்த மலரைப் பற்றிய எண்ணத்தை விட்டு, அடுத்த மலரை 'எப்படியெல்லாம் பிரமாதமாய் தயாரிக்க வேண்டும்' என்றே இப்பொழுது யோசித்துக் கொண்டிருக்கிறேன். அந்தக் 'கனவு மலரி'ன் முன் இந்த மலர் ஒன்றுமேயில்லை என்று தோன்றுகிறது.

தற்போதைக்கு மட்டும் உங்கள் அபிப்பிராயங்களை நான் ஏற்றுக் கொள்ளுகிறேன்.

சென்ற ஒரு வருஷ காலத்தில் **குண்டூசி** சினிமாப் பத்திரிகை உலகில் ஒரு புரட்சியை உண்டு பண்ணியிருப்பதை இங்கு குறிப்பிட விரும்புகிறேன். தென்னாட்டில் 5,000 பிரதிகள் விநியோகத்துடன் ஆரம்பமான சினிமாப் பத்திரிகை **குண்டூசி** ஒன்றுதான். அதுபோலவே ஒரு வருஷ காலத்திற்குள் பத்தாயிரம் பிரதிகளுக்கு அதிகரித்துள்ள பத்திரிகையும் **குண்டூசி**தான். மேலும் **குண்டூசி** தற்போது தென்னாட்டின் அதிக விநியோகமுள்ள சினிமாப் பத்திரிகை என்பதையும் பெருமையுடன் தெரிவிக்கிறேன்.

இந்த மலரை அழகிய வர்ண ஜ்வலிப்பு மிக்கதாக்குவதற்காக நம் சித்திரக்காரர் "முகில்" எடுத்துக் கொண்டிருக்கும் சிரமம் கொஞ்ச நஞ்சமல்ல. அவருடைய சலியா உழைப்பின் பலனை நீங்கள் ஒவ்வொரு பக்கத்திலும் காணலாம்.

சித்திரக்காரர் "சந்தனு" ஒரு சிறந்த ஹாஸ்யச் சித்திரக்காரர் என்பது முன்பே வாசகர்களுக்குத் தெரியும். அவருடைய சித்திரங்கள் இந்த மலரில் ஹாஸ்ய விருந்தளிக்கின்றன.

நம் நடிக நக்ஷத்திரங்களும் படமுதலாளிகளும் தங்கள் போட்டோக்களை தாராளமாய் கொடுத்து உதவியிருக்கிறார்கள்.

இச் சித்திரங்களையும் போட்டோக்களையும் உயர்ந்த முறையில் துரிதமாய் பிளாக்குகளாக்கிக் கொடுத்தவர்கள் கிளீன் அண்ட் பெர்ல், கமர்ஷியல் பிராஸஸ் ஆகிய இரு ஸ்தாபனங்களுமாகும். இம் மலரை குறித்த காலத்தில் அழகாக அச்சிட்டுக் கொடுத்திருக்கிறார்கள் கமர்ஷியல் அச்சகத்தார். இம்மலர் நன்றாயிருக்கிறது என்று நீங்கள் பாராட்டுவதெல்லாம் மேற்சொன்னவர்களையே சாரும்.

மேற் சொன்னவர்களுக்கும், **குண்டூசி** வாசகர்கள், ஏஜெண்டுகள், விளம்பரதாரர்கள், ஆதரவாளர்கள், ஆகிய அனைவருக்கும் **குண்டூசி**யின் மனமார்ந்த வந்தனத்தையும் தீபாவளி வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.


ஆண்குயில்: அடியே, உன் பாட்டை
நிறுத்து! அதோ இசைக்-
கோகிலம் பாடறாள்; கேட்போம்!

பட

எந் தமிழர் பட மெடுக்கும்
விந்தை தான் என்னென்பேன் !
சந்தையிலே ‘ரேட்’டுயர்ந்த
ஸ்டாருகளைப் பிடித்தடைத்து
‘வெள்ளை’ யோடு ‘கறுப்பு’ப் பணம்
வேண மட்டும் தான் கொடுத்து,
கூடச் சில சிறு நடிகர்
சேர்த்து வைத்துக் கதை தேடி
படமாக்கும் பண்பாடு பெரிதில்லையோ !

‘பஞ்ச மில்லை கதைக்கு இங்கு !
அஞ்சாதீர் !’ என்று சொல்ல
பஞ்சவர்கள் குடும்பக் கதை,
விஞ்சு புகழ் விக்கிரமன்,
வேதாளம், மந்திரிகள்
பாட்டி மார் அளப்புகளும்
கட்டுக் கணக்கில் காத்திருக்கும்.
கூட்டிக் குறைத்தும் மாற்றியும் திரித்தும்
பேரொன்று தீட்டிப் பேச வைத்திடுவார் !

கதைக்குக் கண் ஹறு வச்சு,
உருக் கொடுத்து பேச வைக்க
வசன மென ஒன்றெழுதல்
பிரம்ம வித்தையில்லை. வெகு லேசு !
எதுகை மோனைகளும், கவிதைகளும்

உலக விந்தை

வல்லிக்கண்ணன்

புதுமை யில்லாப் பாதையிலே
பழமொழிகள் பலவும் தூவி
பாட்டும் சில கூட்டி விட்டால்
கிட்டாதோ வெற்றி இங்கு !

குட்டிகள் ஆடும் கட்டம் ;
அட்டை முடி வேந்தர்
தலையாட்ட நடனக் கூத்து,
மொட்டைக் கத்திச் சண்டைகளும்
பாட்டுப் போட்டிகளும்
கட்டுப்பாடின்றிக் கலந்து, பின்னும்
முட்டாள் புருஷன் தன்னை
மிரட்டிடும் முரட்டுப் பெண்ணை
கூட்டியே காமிக் கென்று
காட்டிடும் மேதை தன்னை
வியந்திடா திருக்கலாமோ !

வெள்ளித் திரை யினிலே
துள்ளிடும் படக்கலை தான்
மேல் நாட்டில் மிக நன்ருய்
வளர்ந்தது கண்டு விட்டோம் !
வளர்தல் இங்கு என்ருே ?
என்று கவல்தல் ஏனே !
நிழலாடும் வித்தை தானும் இங்கு
பிழைத்திட வழி மிகச் செய்யும் ;
பழிதனைத் தாங்கிடவோ
விழித்திடாத் தமிழ் நாடுண்டு !

தமிழ்ப் படங்கள் வெளிவரத் தொடங்கியது முதல் எவ்வளவோ கதாநாயகர்கள் தோன்றி யிருக்கிருர்கள். சிலர் விடாப்பிடியாய் இருந்து கொண்டும் இருக்கின்றனா. அப்படி இருந்து கொண்டிருப்பவர்களில், சிலரின் புகழ் சில சமயத்தில் உயர்ந்தும் வேறு சமயத்தில் தாழ்ந்தும் இருப்பதை நாம் காணலாம்.

எஸ். ஜி. கிட்டப்பா காலமானதும், அவர் வகித்த உன்னத ஸ்தானத்தை தியாகராஜ பாகவதர் கைப் பற்றிக் கொண்டு, நாடக மேடையில் இணை இல்லாத் திலகமாய் விளங்கி வந்தார். இந்த சமயத்தில்—அதாவது 1934-ம் வருஷத்தில் பாகவதர் சினிமாவில் ஈடுபட்டார். அன்று முதல இன்று வரையில் பாகவதரின புகழ் எந்தப் படத்தின் மூலமும் மங்கப் போக வில்லே. அவர் நடித்த எந்தப் படமும் தோல்வி யுறறு நஷ்டத்தை உண்டு பண்ணியது என்ற பேச்சும் கிடையாது. அதற்குப் பதில் ஒவ்வொரு படமும் அதற்கு முந்தின படத்தை விட ஒரு படி உயர்ந்ததாகவே இருந்து வந்திருக்கிறது. ஆகவே பாகவதரின் புகழும் படிப்படியாக உயர்ந்து கொண்டே வந்திருக்கிறது.

நாடக மேடையில் எஸ். ஜி. கிட்டப்பா ஒரு சக்ரவர்த்தி போல விளங்கி வந்தார். அதே போல சினிமா உலகில் பாகவதர் ஒரு சக்ரவர்த்தியாக விளங்குகிருர் என்ருல் மிகையாகாது. பாகவதரை அறியாத—அல்லது அவர் நடித்த படத்தைப் பார்க்காத சினிமா ரஸிகன் ஒருவன் கூட இருக்க மாட்டான் என்பது நிச்சயம் பாகவதரின் பெயரும் புகழும் அவ்வளவு விஸ்தாரமாய் பிரசித்தயாகி யிருக்கிறது.

எவ்வளவோ ஆண் குரல்கள் இது வரை 'மைக்' கருவி மூலம் ஒலித்திருக்கின்றன. ஆனல் பாகவதரின் குரலுக்கு இணை அவருடையதுதான். "சினிமாவுக்குக் குரல் எப்படி யிருக்க வேண்டும்? பாட்டுகளை எப்படிப் பாட வேண்டும்?" என்பதற்குப் பேசாமல் பாகவதரின் பாட்டை உதாரணமாய் காட்டி விடலாம். பாகவதர் தமது வாழ்க்கையிலும் தொழிலிலும் வெற்றி பெற்றதற்குக் காரணம், அவருடைய பாட்டுகளே தாம் என்று நான் சொல்லத் தேவை யில்லை.

பாகவதர் ஒரு சாதாரண குடும்பத்தில், விஸ்வ பிராமண ஜாதியில் 1910-ம் வருஷம் மார்ச் மாதம் 1-ந் தேதி யன்று பிறந்தவர். அவரது

ராஜமுக்தி.



தகப்பனாரான கிருஷ்ணமூர்த்தி ஆச்சாரி ஒரு ஷராப் கடையை நடத்தி வந்தார். பாகவதர் கூட திருச்சியிலுள்ள தம் பெரிய இல்லத்திலேயே ஒரு பட்டரையை சில வருஷங்களுக்கு முன் நடத்தி வந்தாராம்.

பாகவதர்தான் குடும்பத்தின் மூத்த பிள்ளை. அவருக்கு இரு தம்பிகளும் மூன்று சகோதரிகளும் இருக்கின்றனர். அவரது தம்பி எம். கே. கோவிந்தராஜ பாகவதரும் பாட்டில் தேர்ச்சி பெற்றவர். அடிக்கடி அவர் கச்சேரிகள் செய்து வருகிறார். மற்றொரு தம்பியான ஷண்முகம் ஜி. டி. ஏ. பாஸ் பண்ணினவர். பாகவதருடன் கூட இருந்து நரேந்திரா பிக்சர்ஸை நிர்வகித்து வருகின்றார். அவரது திருமணத்தை பாகவதர் சமீபத்தில் தான் நடத்தி வைத்தார்.

பாகவதருடைய திருமணம் சினிமாவுக்குவருவதற்கு முன்பேநடந்து விட்டது. அவருக்கு இரு பெண்களும், ஒரு ஆணும பிறந்திருக்கின்றனர். பெண்களுக்கு முறையே 13, 11 வயதும், பையனுக்கு சுமார் 7 வயதும் ஆகிறது. பையன் ரவீந்தரனை பாகவதர் மிகச் செல்லமாக வளர்த்து வருகிறார்.

பாகவதரின் சொந்த ஊர் மாயவரம். ஆனால் சென்ற 30 வருஷ காலமாய் அவரது குடும்பம் திருச்சியில் குடியேறி அங்கேயே வசித்து வருகிறது.

டாகவதர் சிறு வயதில் படிப்பை விட சக்கீதத்திலேயே நிரம்பவும் சிரத்தை காட்டியதால் அவரை அவ்வழியிலேயே விட்டு முன்னுக்கு வரச் செய்ய வேண்டும் எனறு அவரது தகப்பனார் தீர்மானித்தார். அதன் படியே,



பாகவதர் நான்கைந்து வருஷப் படிப்புடன் நிறுத்திக் கொண்டு சங்கீதம் சொல்லிக் கொள்ள ஆரம்பித்தார்.

பாகவதரை சங்கீத வழியிலேயே விட்டு விட அவரது தகப்பனார் தீர்மானித்ததற்கு இரண்டு முக்கிய காரணங்கள் உண்டு. ஒன்று, பாகவதர் தம் தகப்பனாரின் செல்லப் பிள்ளையாக விளங்கியது; இன்னொன்றோ அவரது தகப்பனாரே சங்கீத ஞானமும், அக்கலையில் மிகுந்த பிரேமையும் கொண்டிருந்தது.

இவ்விரண்டு காரணங்களையும் தவிர மூன்றாவதான காரணம் ஒன்றும் இருக்கவே செய்தது. அது தான் பாகவதர் அதி இனிய சாரீரத்தைப் பெற்றிருந்ததாகும். இப்பொழுதே பாகவதரின் குரல் குழலோசை போல் ஒலிக்கிறது என்றால் இன்னும் பால்ய வயதில் அது எப்படி இருந்திருக்க வேண்டும் என்று யூகித்துப் பாருங்களேன்! அவ்வளவு மதுரமான குரலைப் பெற்றிருக்கும் தம் புத்திரன் சங்கீத வழியில் ஈடுபடுவதை எந்தத் தகப்பனார்தான் தடுக்க நினைப்பார் சொல்லுங்கள்? தம் தகப்பனார் தம் யோச

னையை ஆரம்பமாகவே சங்கீதத்தில் பாகவதருக்கிருந்த ஆசை பன்மடங்காகி விட்டது.

பாகவதருக்கு மற்றவர்களைப் போல முதல் குருவைத் தேடிப் போக வேண்டிய அவசியம் ஏற்படவில்லை. அவரது தகப்பனாரே அவருக்கு ஆரம்ப சிக்ஷையைத் தொடங்கி தமிழ் பாட்டுகளைக் கற்றுக் கொடுக்க ஆரம்பித்தார். பிறகு பிடில் சின்னய்யா பிள்ளையிடம் பாகவதர் சிக்ஷை சொல்லிக் கொள்ள அவர் ஏற்பாடு செய்தார். இவை யெல்லாம் பாகவதரின் பனிரண்டாவது வயதில் நிகழ்ந்த சம்பவங்களாகும்.

தென்னிந்திய ரயில்வேயில் ஒரு பெரிய உத்தியோகத்தை வகித்து வந்த ஸ்ரீ. எப். ஜி. நடேசய்யர் (இவர்; "சேவாஸதனம்" படத்தில் நடிப்பவர் தான்) ஒரு கலைப் பித்தர்; திறமை மிக்க நடிகர்—என்ற விஷயம் தென்னிந்திய கலா ரஸிகர்கள் அநேகருக்கும் தெரிந்த விஷயமே. திருச்சி ரஸிக ரஞ்சனி சபை இன்றைய உன்னத நிலையை அடைந்திருப்பதற்கான பூராப் பெருமையும் ஸ்ரீ. ஐயரையே சாரும்.

அவர் உத்தியோக விஷயமாய் மாற்றலாகிப் போகும் ஒவ்வொரு ஊரிலும் பல வாலிபர்களை புதிதாக நடிப்புக் கலையில் ஈடுபடச் செய்து, அமெச்சூர் நாடகங்களை நல்ல முறையில் நடத்திக் காட்டுவது வழக்கமாய் இருந்தது. இதுபோல உற்சாக மூட்டப் பெற்று, நடிகர்களானவர்களில் ஒருவர்தான் தியாகராஜ பாகவதரும்.

ஒரு நாள் பாகவதரும் அவரது தகப்பனாரும் பேட்டை சபையார் நடத்திய நாடகம் ஒன்றுக்குச் சென்றிருந்தனர். அன்றைய நாடகத்தில் பங்கெடுத்துக் கொண்டவர்களின் உன்னத நடிப்புத் திறமையைக் கண்ட பாகவதருக்குத் தாமும் நடிக்க வேண்டுமென்ற ஆசை ஏற்பட்டது. அன்று அவருக்கு ஏற்பட்ட இந்த ஆசைதான் இன்று அவர் நடிப்புத் தொழிலில் ஈடுபட்டிருப்பதற்கான அஸ்திவாரக் கல் ஆகும்.

தமக் கேற்பட்ட இவ்வாசையை (முன்பு சங்கீத ஆசையைத் தெரிவித்தது போல்) தம் தகப்பனாரிடம் தாமே தெரிவிப்பதற்கு பாகவதருக்குத் தைரியம் இருக்கவில்லை. ஆதலால் தம் தகப்பனாரின் நண்பரான ஸ்ரீ. வரதராஜுலு நாயுடு மூலம் தம் விருப்பத்தைத் தகப்பனாரிடம் தெரிவிக்கச்

ஹரிதாஸ்.

அம்பிகாபதி

செய்து அவரது சம்மதத்தையும் பெற்றார்.

பாகவதரை ஸ்ரீ. நாயுடு, ஸ்ரீ. எப். ஜி. நடேசய்யரிடம் அழைத்துச் சென்று சிபார்சு செய்தார். பாகவதரின் சங்கீதத்தைக் கேட்டு மகிழ்ந்த ஸ்ரீ. ஐயர் அவரைத் தம் சபையில் ஒரு நடிகராகச் சேர்த்துக் கொண்டார்.

இந்த சபையின் ஹரிச்சந்திரா நாடகத்தில் பாகவதர் முதன் முதலாக லோகிதாஸன் வேஷத்தில் தோன்றி பாட்டின் மூலம் சபையோரைப் பரவசப்படுத்தினர். இந்த சபையில் கொஞ்ச காலம் அனுபவம் பெற்ற பின் அதிலிருந்து விலகி, திருவையாற்றுக்குச் சென்று அங்கு ராமசாமிப் பத்தர் என்பவரிடம் நாடகப் பாட்டுகளைப் பயின்றார்.

திருவையாற்றின் க்ஷேத்திர மகிமையாயிருக்கும் போலும்—பாகவதர் திருச்சிக்குத் திரும்பியதும், அவருக்கு கச்சேரி செய்வதற்குத் தன்மை லாயக்கு சக்தி கொள்ள வேண்டும் என்ற விருப்பம் ஏற்பட்டது. அதற்கேற்ப அவர் திருநெல்வேலி பொன்னு வையங்காரிடம் சிக்ஷை சொல்லிக் கொண்டார். ஸ்ரீ. ஐயங்காரே பாகவதருக்கு பிடில் வாசித்து பல கச்சேரிகளை நடத்தி வைத்தார்.

ஆனால் பாகவதருக்கு நாடகத்தின் மேல் ஏற்பட்ட மோஹம் மீண்டும் தளிர்விட ஆரம்பித்தது. ஸ்ரீ. நரசிம்ம ஐயர் என்பவரிடம் பாகவதர் சாரங்கதரா, பவளக்கொடி, வள்ளி போன்ற பல பிரபல நாடகங்களில் நடிப்பதற்குக் கற்றுக் கொண்டதோடு, அவரது உதவி மூலமே மேடையிலும் நடிக்க ஆரம்பித்தார்.

மேடை மீதேறிய பாகவதருக்கு அமோகமான ஆதரவு ஏற்பட்டது. ஓய்வு ஒழிவு இன்றி தமிழ் நாடெங்கிலும் பல ஊர்களுக்கும், இலங்கைக்கும் சென்று ஸ்பெஷல் நாடகங்களில் நடித்தார். அது முதல் பாகவதரின் தொழில் லக்ஷியம் ஒரு மனப் போக்காய் அமைந்தது. அது முதலே அவருக்கு அதிர்ஷ்ட காலம் ஆரம்பித்து விட்டது என்று சொல்ல வேண்டும்.

பாகவதர் இன்றைய தினம் பாட்டின் மூலம் சினிமா உலகில் மிகப் பிரபலம் அடைந்திருக்கிறார். அதுபோலவேதான் அன்றும் பாட்டின் மூலம் பாகவதர் நாடக அபிமானிகளின் அபரிமிதமான ஆதரவைப் பெற்று வந்தார். இப்பொழுது பாகவதரின் புதுப் படத்திற்கு டிக்கெட் வாங்குவதற்கு எவ்வளவு கஷ்டமாய் இருக்கிறதோ அதைவிட அதிகக் கஷ்

டமாய் இருந்தது அப்பொழுது. கிட்டப்பாவின் காலத்திற்குப் பிறகு பாகவதரவ்வளவு ஆதரவை வேறு யாரும் பெற வில்லை என்று கூட நான் சொல்லுவேன்.

பாகவதரின் புகழ் நாடக மேடையில் உச்ச ஸ்தானத்தில் இருந்த சமயத்தில்தான் முதன் முதலாகத் தமிழ்ப் படங்கள் தோன்றி, நாடக நடிக நடிகைகளை மளமளவென்று ஸ்வீகரித்துக் கொண்டிருந்தது. பாகவதரும் இந்த ஸ்வீகரிப்பிலிருந்து தப்ப முடியவில்லை.

அந்த சமயத்தில், டைரெக்டர் கே. சுப்ரமண்யம் தம் முதல் தமிழ்ப் படமான பவளக்கொடியை தயாரித்து வந்தார். அவர் காரைக்குடிக்குச் சென்றிருந்த போது பாகவதரின் நாடகத்தைப் பார்த்தார். அவரது இனிய சங்கீதம் சினிமாவிற்கு மிகப் பயன்படும் என்று தோன்றியது அவருக்கு. அதற்கிணங்க அவர் பாகவதரை தம் பவளக்கொடி படத்திற்கு ஒப்பந்தம் செய்து கொண்டார். பாகவதர் அப்படத்தில் (1934-ம் வருஷத்தில்) அர்ஜுனனாக நடித்தார். இப்படம் வெற்றியை அளிக்கவே சினிமா உலகில் பாகவதரின் ஸ்தானம் ஊர்ஜிதமாகி விட்டது. பாகவதரின் பாட்டை பட ரஸிகர்கள் அப்பொழுதிருந்தே புகழத் தொடங்கி விட்டார்கள்.

பாகவதருடன் நாடக மேடையில் நடித்து வந்த எஸ். டி. சுப்புலக்ஷ்மி சினிமா உலகிலும் அவருடன் பிரதம பாகத்தில் தோன்றினார். பவளக்கொடி ஒன்றின் மூலமே இருவரும் நக்ஷத்திரங்களாகி விட்டது குறிப்பிடத்தக்கது.

பவளக்கொடி நல்ல வெற்றியாய் முடியவே கே. சுப்ரமண்யம் இவ்விருவரையும் தாம் டைரெக்ட் செய்த அடுத்த படமான நவீன சாரங்கதராவுக்கும் ஒப்பந்தம் செய்து கொண்டார். படம் வெளியானதும் பாகவதரின் இனிய பாட்டையும், சுப்புலக்ஷ்மியின் சிறந்த நடிப்பையும் மக்கள் வெகுவாகப் பாராட்டினார்கள்.

இவ்விருவரும் அதன் பின்னரும் சேர்ந்தே நடித்து வரவேண்டுமென்று பொது ஜனங்கள் விரும்பினர். ஆனால் அந்தப் பொது ஜன விருப்பம் இது வரை ஈடேறவேயில்லை.

சாரங்கதரா முடிந்ததும் பாகவதர் ஒரு பக்கமும், சுப்ரமண்யம்—சுப்புலக்ஷ்மி இன்னொரு பக்கமும் பிரிந்து சென்று விட்டனர். அதன் பின் பாகவதர் சொந்தப் படக் கம்பெனி ஒன்றையே ஆரம்பித்து சத்தியசீலன்

சிந்தாமணி.

படத்தைத் தயாரித்தார். இந்தப் படம் பிரமாதமான வெற்றியை அளிக்கவில்லை என்றாலும் நஷ்டத்தை உண்டு பண்ணவில்லை. பாகவதரின் புகழையும் அடியோடு கெடுத்து விடவில்லை.

இதன் பிறகு பாகவதர் ராயல் டாக்கீஸாரின் சிந்தாமணி படத்தில் நடித்தார். இப்படம் தமிழ் நாட்டிலும் தமிழர் வசிக்கும் அன்னிய நாட்டிலும் ஒரு பெரும் புரட்சியை உண்டு பண்ணியது. எங்கு திரும்பினாலும் 'மாயப்ரபஞ்சமும்' 'ஞானக் கண்ணு' மாயிருந்தது. இப்படம் அதன் தயாரிப்பாளர்களுக்கு ஒரு பொற் குவியலை அளித்தது. பாகவதருக்கோ இப்படம் புகழை ஒரேயடியாய் குவித்தது.

சிந்தாமணிக்குப் பிறகு அந்தக் காலத்தில் பிரமாதமான வெற்றி பெற்ற படம் அம்பிகாபதியாகும். ஓட்டத்திலும் சிந்தாமணியை அநேகமாக எட்டிப் பிடித்த படம் இது.

இப் படங்களுக்குப் பிறகு பாகவதர் மீண்டும் சொந்தப் படத் தயாரிப்பில ஈடுபட்டார். திருநீலகண்டர் உருவாகி வெளி வந்தது. இப் படத்தில் பாகவதரின் பாட்டுகள் அதற்கு முந்தின படங்கள் எல்லாவற்றையும் விட நன்கு அமைந்துபோயிருந்தது. காலஞ் சென்ற டைரெக்டர் ராஜா சாண்டோவின் முயற்சி காரணமாக பாகவதரின் நடிப்பிலும் ஒரு விசேஷ அபிவிருத்தி காணப்பட்டது.

திருநீலகண்டருக்குப் பின்னர் பாகவதர் நடித்த படம் அசோக்குமார் ஆகும். இப்படத்திலும் பாகவதரின் பாட்டுகள் நன்கு அமைந்திருந்தன. ''உன்னைக் கண்டு மயங்காத'' என்ற பாட்டை பாகவதர் இனிமையாய் பாடுவதையும், அதற்கேற்ப கண்ணம்பா அழகாக ஆடுவதையும் எவ்

''சிவகவி'' படத்தின் ஷூட்டிங் ஆரம்ப விழா. படத்தில் பாகவதர், கிருஷ்ணன், ராஜா சாண்டோ, ஸ்ரீராமுலு நாயுடு முதலியோரைக் காணலாம்.

வளவு தரம் கேட்டாலும், பார்த்தாலும் சலிப்பு ஏற்படாது. கண்ணாம்பாவும் பாகவதரும் சேர்ந்து நடித்த ஒரே படம் அசோக்குமார்தான்.

பக்திமான்களின் வேஷத்தை பாகவதர் பாராட்டத் தக்கபடி நடிக்கக் கூடும் என்ற விஷயம் திருநீலகண்டர் மூலம் முதன் முதல் ஸ்தாபிதம் ஆகிவிடவே, ஸெண்ட்ரல் ஸ்டுடியோக்காரர்கள் பாகவதரை நடிக்கச் செய்து சிவகவி படத்தைத் தயாரிக்க முற்பட்டனர். இப் படத்திற்கு திருநீலகண்டர் புகழ் ராஜா சாண்டோ முதலில் டைரெக்டராக அமர்த்தப் பட்டார். ஆனால் படம் ஓரளவு தயாரான பின் ராஜா சாண்டோவுக்கும், அப் பட முதலாளிகளுக்கும் ஏற்பட்ட மனஸ்தாபம் காரணமாக விலகிப் போய் விட்டார். பிறகு இப்படத்தை ஸ்ரீ. ஸ்ரீராமுலு நாயுடு டைரெக்ட் செய்து முடித்தார்.

சிவகவிக்குப் பின்னர் பாகவதர் பிரசித்தி மிக்க ஹரிதாஸ் படத்தில் நடித்தார். பாகவதரின் பாட்டுகள் அவரது முந்தின படங்கள் எல்லாவற்றையும் காட்டிலும் நன்ருய் அமைந்திருந்தன. சங்கீதத்தில் மற்றவர்களுக்கு கிட்டாத ஸ்தானத்தை பாகவதர் இப் படத்தின் மூலம் பெற்ருர். அவருடைய சாரீரம் பண்பட்டு பெருக டைந்திருந்தது. ஹரிதாஸ் படத்தில் பாட்டுகள் ஒவ்வொன்றும் ஒரு மணியாக விளங்குகின்றன. ஹரிதாஸின் சங்கீத அம்சத்தோடு கூட இன்னொரு முக்கிய விஷயத்தையும் அவசியம் சொல்லியாக வேண்டும். அதாவது இதுநாள் வரையில் வெளி வந்துள்ள தமிழ்ப் படங்கள் யாவற்றையும் விட ஹரிதாஸ் அதிக வாரங்கள் ஓடியிருக்கிறது. சென்னைத் தியேட்டர்களில் இடைவிடாது மொத்தம் 142 வாரங்களுக்கு ஓடிப் புகழ் பெற்றிருக்கிறது. இந்தப் படத்தின் வெற்றிக்கு முக்கிய காரணம், படமும், பாகவதரின் பாட்டுகளும் கச்சிதமாயும் இனிமையாயும் அமைந்திருந்ததுதான். அது மட்டுமல்ல; பாகவதர் வழக்கத்திற்கு மாருக ஒரு புது மாதிரியான பாத்திரத்தை ஏற்றுக் கொண்டு அனாயாசமாக நடித்திருப்பதையும் குறிப்பிட வேண்டும்.

ஹரிதாஸ் வெளி வந்ததும் பாகவதருக்கு [illegible] மௌசு ஒன்றுக்கு நூறு மடங்காய் உயர்ந்து விட்டது. [illegible] அத்தனை பட முதலாளிகளும் பாகவதரையே நடிக்கச் செய்து தம் படத்தைத் தயாரிப்பது என்று ஏக காலத்தில் முடிவு செய்து கொண்டனர். அதன் காரணமாக பாகவதர் ஒரு படத்திற்

ஜெமினி ஸ்டுடியோவின் ஆரம்ப விழாவில், பாகவதர் கலந்து கொண்டார். பேசுபவர் : எஸ். எஸ். வாஸன்.

குப் பெற்று வந்த தொகை ஆயிரக் கணக்கில் இருந்து ஒரு லக்ஷத்திற்கு உயர்ந்தது. ஆனால் அதைப் பற்றி படமுதலாளிகள் லக்ஷியம் செய்யவில்லை லக்ஷம் என்ன கோடி வேண்டுமென்று கேட்டிருந்தால் கூட அந்த சமயத்தில் கொடுத்திருப்பார்கள் போலத் தோன்றியது. ஏககாலத்தில் பத்துப் பட முதலாளிகள் அவரைப் படம்ஒன்றிற்கு லக்ஷ ரூபாய் விதம் கொடுத்து ஒப்பந்தம் செய்து கொண்டனர். அவர்கள் அதோடு மட்டும் நின்றுவிட வில்லை. இத் தொகையில் பெரும் பகுதியை அவர்கள் பாகவதரிடம் அட்வான்ஸாகவே கொடுத்து விட்டதும் குறிப்பிடத் தக்கது.

அந்த சமயத்தில் பட முதலாளிகள் இவ்விதம் அதிக தாராளமாய் நடந்து கொண்டதற்குக் காரணம், படத் தொழிலில் நிலவியிருந்த பண நடமாட்டமும், பாகவதருக்கு அந்த சமயத்தில் இருந்த மௌசுந்தான். ஒரு லக்ஷத்தைக் கொடுத்தால் பல லக்ஷங்களைச் சப்பாதித்து விடலாம் என்று அவர்கள் அபிப்பிராயம் கொண்டிருந்தனர் தமிழ் நாட்டில் முதல் லக்ஷ ரூபாய் நக்ஷத்திரம் பாகவதர் தான். அவருக்கு ஊதியம் அதிகரிக்கவே தான் மற்ற நடிகர்களின் ஊதியமும் அதிகரிக்க ஆரம்பித்தது. ஆரம்பமுதலே பாகவதர் தம் சலியா உழைப்பின் மூலமும், சாமர்த்தியத்தின் மூலமும் இவ்வளவு உன்னத ஸ்தானத்தை அடைந்திரா விட்டால், இதர ஆண் நடிகர்களுக்கு சினிமா உலகில் கிராக்கியே ஏற்பட்டிருக்காது. "சினிமாப் படத்திற்கு ஆண்களே அவசியமில்லை" என்று கூடாம் தமிழ்ப் பட முதலாளிகள் கூறியிருப்பார்கள்.

பாகவதரின் புகழ் உச்ச நிலையை அடைந்த அதே சமயத்தில் அவரது

சில விரோதிகளின் செயல்களும் தீவிரமாயின.

பின்னர், லக்ஷ்மிகாந்தன் கொலையுண்டதும், அது சம்பந்தமாக பாகவதர் 1944-ம் வருஷம் டிசம்பர் மாதம் 27-ந் தேதி கைது செய்யப் பட்டதும், இந்த வழக்கு தென்னாட்டில் மிகுந்த பரபரப்பை உண்டு பண்ணியதும், இவ்வழக்கை புனர் விசாரணை செய்யும் படி ப்ரிவி கௌன்ஸில் உத்தர விட்டதும், அதற்கேற்க சென்னை ஹைகோர்ட் இவ்வழக்கை புனர் விசாரணை செய்து, "பாகவதர் கிருஷ்ணன் முதலானோர் குற்றவாளிகளல்ல" என்று சென்ற வருஷம் ஏப்ரல் மாதம் 21-ந் தேதி விடுவித்ததும் சமீப காலத்தில் நிகழ்ந்த சம்பவங்கள்.

ஒரு நல்ல பாடகரை, நடிகரை, ஒரு "பொன் முட்டையிடும் வாத்தை" இழந்து விட்டதற்காக சினிமா உலகம் இரண்டு வருஷ காலம் வருந்தி வந்தது. ஆதலால் பாகவதர் விடுதலை அடைந்த செய்தி சினிமா உலகத்திற்கும், ஜனங்களுக்கும் பெருத்த சந்தோஷத்தை அளித்தது.

பாகவதர் தாம் விடுதலை அடைவதற்குத் தம் நண்பர்களை விட தெய்வ பலத்தையே பெரிதாக எண்ணி வந்தார். அவரது பக்திக்கு அவரது இஷ்ட தெய்வமான வட பழனியாண்டவன் இரங்கவே செய்தார். ஆதலால் பாகவதர் விடுதலை அடைந்ததும் சந்தோஷகரமான வரவேற்புகளிலும் விருந்துகளிலும் கலந்து கொள்ளாமல் நேராக வட பழனியாண்டவன் சன்னிதானத்திற்குச் சென்றார்.

ஜெயில் வாசம் பாகவதரை ஒரு புது மனிதராகவே மாற்றி விட்டது. ஆடம்பர வாழ்க்கையையும், ஜிலுஜிலுப்பான ஆடை ஆபரணதிகளை வெறுத்து, ஒரு சாதாரண கதர் ஜிப்பா அங்கவஸ்திரம் இவைகளுடன் அவர் இப்போது காட்சி அளிக்கிறார்.

விடுதலை பெற்றதும் பாகவதர் பிறர் கையை எதிர் பார்க்காது தாமே நரேந்திரா பிக்சர்ஸ் என்ற கம்பெனியை ஆரம்பித்து, "ராஜ முக்தி" படத்தைத் தயாரித்து, சில தினங்களுக்கு முன் வெளியிட்டிருக்கிறார். இப்படம் வெளியூர்களில் வெற்றிகரமாக ஓடிக் கொண்டிருப்பதாக கேள்விப்பட்ட நான் மனப்பூர்வமாக சந்தோஷமடைகிறேன்.

உங்கள் மனதிற்கு திருப்தியளிக்கக் கூடிய எல்லாவித

தங்கம், வைர நகைகளுக்கு

பிரசித்தி பெற்ற கடை

சோட்டாபாய் & CO

191, சைனா பஜார், சென்னை.

டெலிபோன் : 3724

கணவன் :—இந்த அறுபது ரூபாய் ஆபீஸ் வேலையில் ஒண்டிண்டிருந்தால் முடியாது. நாம் ரெண்டு பேரும் சினிமாவிலே நடிச்சா நிறைய சம்பாதிக்கலாம். என்ன சொல்றே?

மனைவி :—அது சரிதான்; ஆனால் நமக்கு அழகான முகம் இல்லையே.

கணவன் :—(ஞாபக மறதியாக) அதனால் என்னடி? இரவல் வாங்கிண்டால் போறது.

ஹாஸ்யம் : தேவதாசன், பங்களூர்.
சித்திரம் : "சந்தனு."

"ஓய்! முதல் ஆட்டம் எத்தனை மணிக்கு ஆரம்பிக்கிறது, இந்தத் தியேட்டரில்."

"பக்கத்துத் தியேட்டரில் ஆரம்பிச்சு அஞ்சு நிமிஷத்துக் கெல்லாம்."

"சரி; பக்கத்துத் தியேட்டரில் எப்பொழுது ஆரம்பமோ?"

"இந்தத் தியேட்டரில் ஆரம்பிக்கிறதுக்கு அஞ்சு நிமிஷத்திற்கு முன்னால்!"

ஹாஸ்யம்: 'ஜோஸப்', தூத்துக்குடி.
சித்திரம்: "சந்தனு."



ஆப்ரேடட்டர் : டேடேடே! என்னடா பிலிமை யெல்லாம் வெளியிலே] இழுத்துப் போட்டுட்டே!......

அஸிஸ்டென்ட் : இல்லிங்க, அப்பவே காதலர்கள் பிரிஞ்சாங்களில்லே. இதோ பாருங்க' அவுங்க மறுபடியும் சேர்ந்துடறுங்க!

ஹாஸ்யம், சித்திரம் : "சந்தனு.'



படம் பார்ப்பவர் (ஸ்திரீகளிடம்): எனக்கொன்றும் தொந்தரவில்லை. இந்தப் படத்தை விட உங்கள் பேச்சு ரொம்ப ஸ்வாரஸ்யமாய் இருக்கு. சும்மா பேசுங்கோ, அம்மா!

ஹாஸ்யம், சித்திரம்: "சந்தனு."

Consult

BALU BROS

ARTISTS

Publicity Specialists

2. THAYAR SAHIB ST.,
MOUNT RD, MADRAS. 2.

கிருஷ்ணா பிக்சர்ஸ்
'கிருஷ்ண பக்தி'யில்
டி. ஆர். ராஜகுமாரி.

"மிஸ் மாலினி" மூலம் சினிமா
ரஸிகர்களுக்கு அறிமுகமான
(பிரபல நடிகை புஷ்பவல்லியின்
சகோதரி) சூர்ய பிரபா.



குணவிசேஷ நடிப்பில் பிரசித்தி
பெற்றுள்ள நாகய்யா "சக்ரதாரி"
யில் கோரா கும்பராய் நடிக்கிருர்.





விரைவில் வெளிவர விருக்கும்
'திருமழிசைஆழ்வாரி'ல் நடிக்கும்
திருச்சூர் டி. பிரேமாவதி

உலகம் பூராவிலும் உலவிவர ஏற்
பாடு செய்யப்பட்டிருக்கும் "கல்
பனா" ஹிந்தி நாட்டியப் படத்தில்
உதயசங்கரும், அமலா தேவியும்

வெகு காலமாக திரையுலகிலி
ருந்து மறைந்திருக்கும் தண்ட
பாணி தேசிகர் “திருமழிசை
ஆழ்வாரு”டன் திரும்பிவருகிருர்.

தீபாவளி வாழ்த்துக்கள்!

எமது நண்பர்கள், வாடிக்கைக்காரர்கள் முதலிய அனைவருக்கும் எங்கள் மனமார்ந்த தீபாவளி வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

☆

நியூஸ் - பிரின்ட், மற்றும் எல்லாவிதமான காகிதங்கள், அட்டைகள், உலோகங்கள், சில்லரைச் சாமான்கள் முதலியவை எங்களிடம் கிடைக்கும்.

தங்கள் தேவையைப் பூர்த்தி செய்யத் தயாராய் இருக்கிறோம்.

P.S. நஞ்சப்ப செட்டி & சன்ஸ்

சென்னை விலாஸம்: 2/34 தங்கசாலை, பி. டி. சென்னை.

கோவை விலாஸம்: 206 ஒப்பணக்காரத் தெரு,
கோயமுத்தூர்.

பம்பாய் விலாஸம்: முதல் மாடி, கோர்ட் ஹவுஸ்,
கார்னக் ரோட், தோபிதலாவ், பம்பாய்.

எதிர்பாராத திருமணம்

சு. ரா.

டைரெக்டர் ராமசாமியின் சொந்த வாழ்க்கையைப் பற்றி நேயர்களுக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை. பத்திரிகாசிரியர்கள் 'சினிமா நடிகைகள் எங்கே?' என்று தேடிப் போய், 'அவர்கள் நடித்த படங்கள் எத்தனை? நடிக்காத படங்கள் என்னென்ன?... கலியாணமாகி விட்டதா? ஆகா விட்டால் குழந்தைகள் எவ்வளவு?......' என்றெல்லாம் கேள்வி கேட்டு எழுதுகிறார்களே தவிர, ஸ்டுடியோ சம்பந்தப்பட்ட நபர்களைப் பற்றி எங்கே எழுதுகிறார்கள்?

ஆகவே டைரெக்டர் ராமசாமியைப் பற்றியும் பெரும்பாலானவர்களுக்கு அதிகமாக ஒன்றும் தெரிந்து கொள்ள முடியாமற் போயிற்று.

ராமசாமி சினிமா உலகிலேயே மிகவும் அடக்கமான பேர்வழி. தானுண்டு, தான் 'டைரெக்ட்' செய்யும் படம் உண்டு என்றிருப்பாரே தவிர, மற்றபடி அனாவசிய விளம்பரங்களுக்கு உட்படமாட்டார். மற்ற விஷயங்களிலும் கலந்து கொள்ள மாட்டார். தன் அன்றாட வேலை முடிந்ததும், தான் தங்கி இருக்கும் இடத்துக்குப் போய் விடுவார். படம் முடிந்ததும் ஊருக்குப் போய்விடுவார்.

டைரெக்ஷன் தொழிலில் ஈடுபடாத காலத்தில் அவர் என்ன செய்கிறார், எப்படி வாழ்க்கையை நடத்துகிறார் என்பதெல்லாம் சினிமா உலக ரகசியமாகவே இருந்து வந்தது.

இத்தனைக்கும் டைரெக்டர் ராமசாமி பேரும், புகழும் பெற்றவர்தான். அவரைப் போன்ற உழைப்பாளியைச் சினிமா வட்டாரத்தில் காண முடியாது. சிறந்த கற்பனைத் திறனும், பலவித நூதன கருத்துக்களையும் உடையவர்.

பேசும் பட உலகில் எத்தனையோ புரட்சிகரமான செய்கைகளைச் செய்தார். பட்சிகளையும், மிருகங்களையும் அற்புதமாக நடிக்கச் செய்தார். அதோடு, நடிகர்களையும், நடிகைகளையும் கூடத் தம் தம் பாத்திரங்களுக்கேற்றவாறு நடிக்கச் செய்து பேர் பெற்றார்!

ஏன்? கன்னடக் குயில் கமலம்மாவையும், மலையாள நடிக மன்னன் மேனோனையும் முக்கிய கதா பாத்திரங்களாகவும், இன்னும் பேசப் பாடத் தெரியாத ஆட்களையும் வைத்து ஒரு தமிழ் சமூகப் படத்தைத் தயாரித்தார் என்றால் அவருடைய பெருமையைக் கூற வேறு உதாரணமும் வேண்டுமா என்ன?

டைரெக்டர் ராமசாமி இப்படி ஒரு மாமாங்க காலமாகத் தம் புகழை நிலை நிறுத்தி வந்தார். இந்தப் பத்து, பன்னிரண்டு வருஷ காலத்தில் சினி

மாப் பத்திரிகைகளில் எவ்வளவோ விஷயங்கள் பிரசுரமாகியும், எத்தனையோ கோடானு கோடி வார்த்தைகள் அச்சாகியும், டைரெக்டர் ராமசாமியின் 'டைரெக்டரல்லாத' வாழ்க்கையைப் பற்றி ஒரு வார்த்தையும் வெளியாக வில்லை.

அவர் கடைசியாக 'டைரெக்ட்' செய்த படத்தில் அவர் டைரக்ஷனின் பெருமையைப் பற்றியோ, அவர் அடுத்தபடியாக 'டைரெக்ட்' செய்யப் போகும் படங்களைப் பற்றியோதான் பத்திரிகைகள் எழுதின.

இப்படிப்பட்ட அபூர்வ மனிதரின் வாழ்க்கையிலும் ஒரு அதிசய சம்பவம் நிகழ்ந்தது.

2

ராமசாமிக்குத் தன்னைக் குறித்தே ஆச்சரியம் உண்டாயிற்று. தன்னுடைய செய்கை ஒன்றை எண்ணி அவர் வியந்து கொண்டார். "இந்த வயதில் என் மனதில் இப்படிப்பட்ட எண்ணம் ஏன் தோன்ற வேண்டும்?... வாழ்க்கையில் சுமார் பாதி வருஷங்களைக் கழித்து விட்ட பிறகு ஏன் இந்த அனுபவம் நேர வேண்டும்?" என்று அதிசயப் பட்டுக் கொண்டார்.

ஆயினும் அவரால் தன்னைக் கட்டுப் படுத்திக் கொள்ள முடியவில்லை. விஷயம் வேறொன்றுமில்லை. அவர் காதல் கொண்டு விட்டார்!

ராமசாமிக்கு அப்போது சுமார் நாற்பத்தேழு வயதாகி இருந்தது. அவர் காதல் கொண்ட பெண்மணிக்கோ சுமார் முப்பத்தாறு வயதிருக்கும். அவர் டைரெக்ஷனில் தயாரான பெரும்பாலான படங்களில் கதாநாயகியாக நடித்த விமலா தேவியின் மீது தான் அவர் காதல் கொண்டு விட்டார்.

விமலா தேவி சினிமாவில் தோன்றத் தொடங்கி பத்து வருஷங்களாகி விட்டன. இருந்தும் அவளைப் பற்றியும் சினிமா ரசிகர்களுக்கு அதிகமாகத் தெரிந்து கொள்ள முடியவில்லை. டைரெக்டர் ராமசாமியைப் போன்றே விமலா தேவியும் வாழ்க்கை நடத்தி வந்ததால், சினிமாப் பத்திரிகைளில் அவள் சொந்த வாழ்க்கையைப் பற்றி அதிகமாக வெளியாக வில்லை.

பூர்வாசிரமத்தில் விமலா தேவி செல்லாயியாக இருந்ததாகவும், பிரபல டைரெக்டர் கேதார்நாத்தின் சிருஷ்டிதான் விமலா தேவி என்றும், நாளடைவில் விமலா தேவி கேதார்நாத்தின் உதவி டைரெக்டராக இருந்து பின்னல் 'முழு' டைரக்டரான ராமசாமியின் 'ஆகி வந்த' கையால் முன்னுக்கு வந்ததாகவும் மட்டும் பத்திரிகைகளில் பிரசுரமாயிற்று.



டைரெக்டர் ராமசாமி விமலா தேவியின் படங்கள் பலவற்றை 'டைரக்ட்' செய்திருந்தும், அவர் குணதிசயத்தின்படி அவளைப் பற்றி அக்கரை கொள்ள வில்லை. அவளுடைய பெயர் ராசிக்காகப் பட முதலாளிகள், தங்கள் படங்களில் நடிக்க அவளை அழைத்தனர். டைரெக்டர் ராமசாமியை அவருடைய சிறந்த டைரெக்ஷன் திறமைக்காக அதே பட முதலாளிகள் அழைத்தார்கள். ஆகவே, விமலா தேவியும், டைரெக்டர் ராம சாமியும் பல படங்களில்

சேர்ந்து உழைத்தனர். எனினும் ஒரு வரைப் பற்றி மற்றவர் அதிக 'அக்கறை' காட்டவில்லை! "சினிமா உலகில் இப்படியும் அபூர்வப் பிறவிகளா?" என்று மற்றவர்கள் அதிசயப்பட்டனர்.

கடைசியாக விமலா தேவி நடித்து, ராமசாமி 'டைரெக்ட்' செய்த 'இந்திர ஜாலம்' என்ற படம் வெளியாயிற்று. 'இந்திர ஜாலம்' அவ் விருவருடைய தனிப்பட்ட வாழ்க்கையில் ஒரு மகேந்திர ஜாலத்தைச் செய்யும் கருவியாக அமைந்தது.

மேற்படி படம் மகத்தான வெற்றியை அடைந்தது. அம்மாதிரிப் படமே இது வரை வெளி வந்ததில்லை என்று எல்லோரும் கொண்டாடினார்கள். அதைப் புகழ்ந்து, போற்றி, பக்கம் பக்கமாக யாவரும் எழுதினார்கள்.

'இந்திர ஜாலம்' படம் பற்றி ஆராய்ச்சிக் கட்டுரைகள் வெளியாயின. அந்தப் படத் தயாரிப்பில் ஈடுபட்டவர்களைப் பற்றி யெல்லாம் குறிப்புகள் வெளியிடப் பட்டன. "இந்திர ஜால"த்துக்காக ஸ்டுடியோவைச் சேர்ந்தவர்கள் எத்தனை ஆயிரக் கணக்கான மைல்கள் பிரயாணம் செய்தனர் என்றும், எத்தனை லக்ஷ மணி நேரம் 'ஷூட்டிங்' நடந்த தென்றும், எப்படி ஒரு பாலைவனப் பிரதேசத்தை இரண்டே முக்கால் மணி நேரத்தில் குளிர்ந்த பசுஞ் சோலையாக மாற்றினர் என்றும்-- இவை போன்ற அதிசயப் புள்ளி விவரங்கள் கொடுக்கப் பட்டிருந்தன.

ஆயினும் டைரெக்டர் ராமசாமியைப் பற்றியும், நடிகை விமலா தேவியைப் பற்றியும் மட்டும் அதிகமாக ஒன்றும் வெளியாக வில்லை. இந்த விஷயமே அவ்விருவர் மனதிலும் ஒரு மாறுதலை உண்டாக்கிறது. இவ்வளவு காலமும் ஏற்படாத ஒரு புதுது ணர்ச்சி அவர்களிடம் உண்டாயிற்று.

டைரெக்டர் ராமசாமி தம்மைப் பல முறை பார்த்துக் கொண்டார். 'இந்திர ஜால'த்தைப் பற்றி வெளியான செய்திகள், புகழுரைகள், கட்டுரைகள் எல்லாவற்றையும் அக்கறையுடனும் ஊக்கத்துடனும் படித்தார். படிக்கப் படிக்க அவருக்குப் பெருமை அதிகரித்தது.

தமக்கும் விமலா தேவிக்கும் ஏற்பட்டிருந்த சமமான புகழையும், அந்தப் புகழை எப்படிச் செலுத்துவது என்று தெரியாமல் பத்திரிகைகள் திண்டாடியதையும் உணர்ந்தார். தான் மட்டும் மனது வைத்திருந்தால் பத்திரிகைகளில் தன்னைப் பற்றி மட்டும் எத்தனை பக்கங்கள் வெளியாகியிருக்கும் என்பதையும் எண்ணிப் பார்த்தார். தன்னைப் போலவே விமலா தேவியும் நடந்து கொண்டிருப்பதைத் தெரிந்து கொண்ட ராமசாமிக்கு அவளைப் பற்றிய நினைவு உண்டாயிற்று.

3

விமலா தேவியின் நினைவு உண்டானதும் ராமசாமி எழுந்தார். அவர் மனதில் ஏதோ ஒரு தீர்மானம் உருவாகி யிருக்க வேண்டும். தம்மை நன்றாக அலங்கரித்துக் கொண்டார். நேரே விமலா தேவியின் வீட்டுக்குச் சென்றார்.

அவளும் வீட்டில்தான் இருந்தாள். டைரெக்டரைக் கண்டதும் உற்சாகத்துடன் வரவேற்றாள்.

"வாங்கோ, ஸார்! ஏது இவ்வளவு தூரம்?" என்று முகமலர்ச்சியுடன் உபசரித்தாள் விமலா தேவி.

ஆசனத்தில் அமர்ந்த ராமசாமி, "உன்னைப் பார்த்து விட்டுப் போகத் தான் வந்தேன், விமலா" என்றார்.

"ரொம்ப சந்தோஷம், ஸார். கொஞ்சம் இருங்கள்" என்று கூறி விட்டு விமலா தேவி உள்ளே ஓடினாள். அடுத்த சில நிமிஷங்களில் டைரெக்ட

ருக்கு விருந்துபசாரம் பலமாக நடந்தது. ராமசாமி திணறிப் போனார்.

"எதற்கு இதெல்லாம்?" என்று கேட்டார்.

"இத்தனை வருஷப் பழக்கத்தில் என்றாவது நீங்கள் என் வீட்டுக்கு வந்ததுண்டா, ஸார்? அது தான் இப்படி" என்று சிரித்தவாறு விமலா தேவி பதிலளித்தாள்.

"விமலா! அது ஏன் சும்மா என்னை 'ஸார்' 'ஸார்' என்கிறாய்? ஸ்டுடியோவில் தான் நான் உங்களுக்கு உபாத்தியாயர். இங்கே வெறும் ராமசாமி தான்" என்றார் டைரெக்டர்.

"ஏதாவது ஒரு விதத்தில் அழைக்கத் தானே வேண்டும்! 'ஸார்' என்று அழைத்து வழக்கமாகி விட்டது" என்றாள் விமலா.

"என்னை 'ஸார்' என்று நீ அழைக்கும் போது எனக்கு ஏதோ மாதிரி இருக்கிறது. 'ஸார்' இல்லாமல பேச முடிகிறதா என்று தான் பாரேன்" என்றார் அவர்.

"சரி, ஸார்!" என்றாள் விமலா. உடனே தன் தவறை உணர்ந்து, 'கல கல'வென்று நகைத்தாள். டைரெக்டர் ராமசாமியும் அவளுடைய சிரிப்பில கலந்து கொண்டார். தான் எந்த நோக்கத்தோடு அங்கே வந்தோம் என்பதை அதற்குள் அவர் மறந்து போயிருந்தார்!

* *

அதற்குப் பிறகு நாட்கள் மெல்ல மெல்ல நகர்ந்தன. டைரெக்டருக்கு இளமை திரும்பி யிருந்தது போல் தோன்றியது. தன் அலங்கார விஷயத்தில் அவர் அதிக சிரத்தை செலுத்தத் தொடங்கி யிருந்தார். அவருடைய கண்களுக்கு விமலா தேவிக்கும் இளமை திரும்பி யிருந்ததாகத் தோன்றியது. உண்மையில் விமலா தேவியும் இந்தச் சில நாட்களில் தன்னைப் பற்றி அதிக கவனம் செலுத்தி வந்தாள்.

நாட்கள் அவ்விருவருடைய மனதிலும் புத்துணர்ச்சியை ஊட்டின. டைரெக்டர் ராமசாமி பிரபல நடிகை விமலா தேவியைப் பற்றிச் சிந்தித்தார். விமலா தேவி ராமசாமியைப் பற்றி ஆராய்ச்சி செய்தாள்.

"......விமலா தேவி விமலா தேவி தான்! சினிமா உலகில் உள்ள எத்தனையோ தளுக்குக் குலுக்கல்களுக்கு இடையில் விமலாவைப் போல யாராவது பெண் உண்டா? அவளைப் போல் அடக்கமான ஸ்திரீயைத் தான் பார்க்க முடியுமா? 'ஸெட்'டில் வரும் போது தவிர மற்ற வேளைகளில் யாருடனாவது காண முடியுமா?' என்றெல்லாம் ராமசாமி அவளைப் பற்றி வியந்து கொண்டிருந்தார்.

"......ஆகா! டைரெக்டர் என்றால் ராமசாமி அல்லவா டைரெக்டர்! நடிக நடிகைகளின் தனிப்பட்ட வாழ்க்கையைப் பற்றி அவர் என்றாவது சிரத்தை காட்டியது உண்டா? கதா பாத்திரங்களைப் பற்றி மட்டும் கவனம் செலுத்தி 'டைரெக்ட்' செய்பவர் வேறு யாராவது உண்டா...?" என்று விமலா தேவி அவரைப் பற்றி எண்ணி உருகுவாள்.

மாலை நேரங்களில் இருவரும் சந்தித்தனர். ஒரு நாள் விமலா தேவியின் வீட்டுக்கு டைரெக்டர் ராமசாமி வருவார். அடுத்த நாள் விமலா தேவி அவர் வீட்டுக்குச் சென்று 'பதில் மரியாதை' செய்வாள்.

சில நாட்களுக்குப் பிறகு, இருவரும் தம தம் மனதைத் திறந்து காட்டிக் கொண்டனர்.

"விமலா! நாம் இப்படியே எப்பொழுதும், ஒன்றாகவே வாழ்ந்து விட முடியாதா? ஒவ்வொரு நாளும் உன்னைப் பிரிந்துள்ள நேரம் எனக்கு எவ்வளவு வேதனை தருகிறது, தெரியுமா?" என்றார் டைரெக்டர்.

"எனக்கு மட்டும் வேதனையில்லையா என்ன? நாம் கூடி வாழத் தடையொன்றும் இல்லையே?" என்றாள் நடிகை.

"என் வரை ஒன்றும் கிடையாது. உனக்கும் அப்படித் தானே?"

"எனக்கும் பூரண சம்மதமே."

* * *

சினிமாப் பத்திரிகைகளில் டைரெக்டர் ராமசாமி—விமலா தேவியைப் பற்றி ஹேஷ்யங்கள் வெளியாயின. அது வரை அவர்களைப் பற்றி தனிப்பட ஒன்றும் எழுத முடியாமல் திண்றிய பத்திரிகைகள் இப்பொழுது (பழைய) படங்களுடன் செய்திகளை வெளியிட்டன.

அவ்விருவருக்கும் விரைவில் விவாகம் நடக்கலாம் என்று தாம் நம்புவதாக நிருபர்கள் எழுதினார்கள்.

4

பத்திரிகைகளில் தம்மைப் பற்றியும், விமலா தேவியைப் பற்றியும் வந்த ஹேஷ்யங்களைப் படித்த டைரெக்டர் ராமசாமி முதலில் மிகவும் ஆச்சரியமடைந்தார். செய்திகள் எப்படித்தான் இவ்வளவு சீக்கிரத்தில் பரவுகின்றனவோ என்று வியந்தார்.

பிறகு யோசனை செய்தார். பத்திரிகைகளின் வாயை மூட ஒரே ஒரு வழிதான் இருந்தது. அதுதான், இருவரும் பகிரங்கமாகவே மணந்து கொள்வது. ஆனால் அதற்கு ஒரு முட்டுக் கட்டை இருந்ததாக அவருக்குத் தோன்றியது.

இவ்வளவு நாட்களாக அவர் விமலா தேவியிடம் ஒரு விஷயத்தைப் பற்றிச் சொல்லவில்லை. அது தெரிந்தால் அவள் தன்னை மணக்கச் சம்மதிப்பாளா என்ற சிறு சந்தேகம் அவருக்கிருந்தது. "இவ்வளவு தூரம் சகஜமாகப் பழகிவிட்ட பிறகு, இதை அவளிடம் ஒளிக்கக் கூடாது. என்றாவது தெரியத்தான் போகிறது அதை இன்றே அவளிடம் கூறி, அவளிடம் அபிப்ராயத்தைத் தெரிந்து கொள்ள வேண்டும்" தமக்குள் என்று தீர்மானம் செய்து கொண்டார்.

அன்று மாலை அவர்கள் சந்தித்த போது, விமலா பத்திரிகைகளைப் பற்றி பேசத் தொடங்கினாள். அவர் எண்ணியிருந்ததையே அவளும் கூறினாள். அதனால் ராமசாமி மகிழ்ச்சியடைந்தார்.

"விமலா! நம் விவாகம் விரைவில் நடந்துவிட வேண்டுமென்று நிச்சயித்து விட்டேன். அதற்குமுன் இன்னொன்று நடக்க வேண்டும்" என்றார் ராமசாமி.

"என்ன விஷயம்?" என்று ஆவலுடன் விசாரித்தாள் விமலா.

"விமலா! உன்னிடம் நான் இவ்வளவு நாட்களாக ஒரு விஷயத்தை மறைத்து வைத்திருந்தேன். அதைச் சொல்லி விடுகிறேன்......"

விமலா அவர் முகத்தையே ஆவலுடன் பார்த்துக் கொண்டிருந்தாள்.

"நான் ஏற்கெனவே மணமானவன். எனக்கு ஒரு மகன் இருக்கிறான். இந்த ஊரில்தான் வாசித்துக் துக் கொண்டிருக்கிறான். அவனுக்குக் கல்யாணம் செய்ய வேண்டும். அவனுக்குப் பிடித்த பெண் ஒருத்தி இருக்கிறாளாம். அந்தப் பெண்ணின் தந்தை நாளை என்னை வந்து பார்க்கப் போகிறார். அந்த விவாகம் நிச்சயமாகி முடிந்து விட்டால், நம் கல்யாணத்தையும் நடத்தி விடலாம். ஆனால் இந்த விஷயம் தெரிந்த பிறகும் நீ என்னைக் கல்யாணம் செய்து கொள்ள சம்மதிப்பாயா?" என்று கேட்டார்.

விமலா தேவி ஒரு நீண்ட பெருமூச்சுவிட்டாள். "அவ்வளவுதானே! நீங்கள் ஒரு விஷயம் சொன்னீர்கள். நானும் என் விஷயத்தைச் சொல்லி விடுகிறேன். உங்களிடம் ஒளிப்

வெளியூர்களில் இப்பொழுது ஓடிக்கொண்டிருக்கும் "ராஜ முக்தி"யில் ஒரு காட்சி.

பதற்கு என்ன இருக்கிறது" என்று கூறி, நிறுத்தினாள்.

ஆச்சரியம் நிறைந்த பார்வையுடன் அவளை நோக்கினார் ராமசாமி. விமலா பேச்சைத் தொடர்ந்தாள்: "...... உங்களைப் போலவே எனக்கும் ஏற்கெனவே விவாகம் ஆகிவிட்டது. கிராமத்தில் என் கணவனுடன் சிரம ஜீவனம் செய்து வந்தேன். என் கணவன் என்னைச் செய்யாத கொடுமைகள் கிடையாது. கடைசியில் அந்த வாழ்க்கையை வெறுத்து, கைக் குழந்தையுடன் இங்கே ஓடி வந்து விட்டேன். சினிமாவிலும் சேர்ந்தேன். படிப்படியாக மேலுக்கு வந்து, உங்கள் அதிருஷ்டக் கையினால் நல்ல நக்ஷத்திரம் என்றும் பெயரெடுத்து விட்டேன். ......ஆனால் என் குடும்ப வாழ்க்கைதான் வறண்டு போயிற்று. நான் பெற்ற குழந்தை எனக்கே இல்லாமல் செய்து கொண்டேன். நான் 'எக்ஸ்ட்ரா'வாக நடித்த காலத்தில் என் பெண்ணை, தெரிந்த ஒருவரது பொறுப்பில் விட்டு விட்டேன். அவளுக்கு நான் தான் அவளுடைய தாய் என்று தெரியக் கூடாதென்றும், தெரிந்தால் தன் பிறப்பைக் குறித்து அவள் கேவலமாக எண்ணுவாள் என்று பயந்தே அவ்விதம் செய்தேன். அவரும் அவளைத் தம் பெண்ணாக ஏற்றுக்கொண்டார். பணம் மட்டும் அனுப்புகிறேன். ஆனால் பதிலுக்கு அவளது அன்பை மட்டும் நான் எதிர்பார்க்க முடியாமல் போய் விட்டது." இதைக் கூறி நிறுத்தினாள். அவள் கண்களில் கண்ணீர் பெருகிக் கொண்டிருந்தது.

ராமசாமி பேசாமலிருந்தார். அவள் கண்களைத் துடைத்துக் கொண்டு மேலும் கூறினாள். "இப்பொழுது நான் கணவனற்றவளே, என் பழைய கணவனை மறந்து விட்டேன். என் பெண்ணிடமும் எனக்கு உரிமை கிடையாது. பெண்ணின் 'கார்டிய'னை கோபாலசாமிதான் அவளுக்கு நல்ல கல்வி கற்பித்து, பெரிய இடத்தில் கல்யாணம் செய்து வைக்க வேண்டும். இவ்வளவுதான் என் கதை" என்று முடித்தாள்.

ராமசாமி அவளது கண்ணீரைத் துடைத்தார். "விமலா! உன் வாழ்க்கையும் என் வாழ்க்கையும் இது வரை ஏறக்குறைய ஒரே பாதையில் சென்றிருக்கின்றன. நாம் இருவரும் மணந்து கொண்டு ஒன்றுபட்ட வாழ்க்கையை நடத்துவது போன்ற பொருத்தமான விஷயம் வேறு இருக்க முடியாது. ஆகவே சந்தேகம் வேண்டவே வேண்டாம்" என்று பெருமிதத்துடன் கூறினர்.

அவள் முகம் மலர்ந்தது. ராமசாமி விடைபெற்றுக் கொண்டார்.

* * *

அதற்கடுத்த நாள் ராமசாமி விமலா தேவியைச் சந்தித்தபோது அவள் ஒரு முக்கிய செய்தியைத் தெரிவித்தாள்.

"உங்கள் மகனுக்கு மட்டுமன்றி என் பெண்ணின் விவாகமும் நிச்சயமாகி விடும்போல் இருக்கிறது. நம் விவாகம் நடக்குமுன் நம் குழந்தைகளுக்கு நடந்து விடும்போல் தோன்றுகிறது" என்று கூறினள் விமலா.

"என்ன விசேஷம்?" என்று கேட்டார்.

"இன்று காலை கோபாலசாமி வந்திருந்தார். என் பெண் யாரோ ஒரு பையன் மீது காதல் கொண்டிருப்பதாகவும், அந்தப் பையனின் தந்தையைத் தான் பார்த்துப் பேசுவதாகவும் கூறினர். பையனுக்கும் இவள் மீது இஷ்டம்தானம், எல்லா ஏற்பாடுகளையும் செய்யச் சொல்லி, பத்தாயிரம் ரூபாய் கொடுத்திருக்கிறேன்...ஹா! கல்யாணத்திற்கு நான் போகிறேனே, இல்லையோ?" என்று கூறிப் பெருமூச்சு விட்டாள்.

"விமலா! உன் பெண் விஷயமாக நீ முதலில் செய்த முடிவைப் பற்றி நான் பிஅபிப்ராயம் கூறப் போவதில்லை. ஆயினும் ஒன்று மட்டும் சொல்கிறேன். பெண் கல்யாணத்திற்குபோகாமல் மட்டும் இருக்காதே. நானும் வரப் போகிறேன்" என்றார் ராமசாமி.

"நீங்கள் வருவதைப் பற்றி மிகவும் சந்தோஷம். உங்கள் இஷ்டப்படியே செய்கிறேன்" என்றாள் விமலா.

"இன்னும் ஒரு விஷயம்தா... பாக்கி நிற்கிறது. உன் பெண்ண... கல்யாணமும், என் பிள்ளையின் கல்... யாணமும் ஒரே நாளில் நடந்து விடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்!" என்றார்.

"ஆமாம்!" என்று அதை ஆமோதித்தாள் விமலா தேவி.

5

இரண்டு நாட்களுக்குப் பிறகு டைரெக்டர் ராமசாமி விமலா தேவியின் வீட்டுக்குச் சென்ற போது, அவர் எதிர்பாராத விஷயங்கள் நடந்திருந்தன. போனதும் போகாததுமாக விமலா கண்ணீர் பெருக்கினள்.

"விமலா! ஏன் அழுகிருய்? என்ன நடந்தது?" என்று ராமசாமி பதட்டத்துடன் கேட்டார்.

"நாம் ஒருவரை யொருவர் கல்யாணம் செய்து கொள்வதில் கடவுளுக்கு விருப்பமில்லை போலிருக்கிறது..." என்று விம்மிக் கொண்டே அவள் பதில் கூறினள்.

"ஏன்? எதைக் கொண்டு இப்படிக் கூறுகிருய், விமலா?" என்று ஆத்திரத்துடன் கேட்டார்.

விமலா கண்களைத் துடைத்துக் கொண்டு, "நாம் இருவரும் சம்பந்திகளாகி விட்ட பிறகு எப்படி கல்யாணம் செய்து கொள்ள முடியும்?" என்றாள்.

"நீ சொல்வது புரியவில்லையே" என்றார் ராமசாமி.

"நான் சொல்வது உண்மைதான். என் பெண் விவாகம் செய்து

காள்ள நிச்சயித்திருப்பது உங்கள் மகனைத்தான். சற்று நேரத்திற்கு முன்பு தான் கோபாலசாமி வந்து, முகூர்த்தம் நிச்சயமானதைப் பற்றிக் கூறி, உங்களைப் பற்றியும் சொன்னார்" என்றாள்.

" அப்படியானால் என்னிடம் பெண் கொடுக்க வந்தவர் உன் பெண்ணின் 'கார்டியன்' கோபாலசாமியா?" என்று வியப்புடன் கேட்டார் ராமசாமி.

"ஆமாம்!" என்று விமலா பதிலளித்தாள்.

டைரெக்டர் சிறிது நேரம் பேசாமலிருந்தார். பிறகு ஏதோ முடிவுக்கு வந்தவரைப் போல், "விமலா! நான் தீர்மானித்து விட்டேன். நாம் இரண்டு பேரும் கல்யாணம் செய்து கொள்ள வேண்டியது தான். அதற்கு என்ன தடை வந்தாலும் சரிதான்!" என்றார்.

விமலா தேவி நிதானமாக பதில் கூறினாள்:

"நீங்கள் என்னை மன்னிக்க வேண்டும். நான் உங்களை மணப்பதில்லை என்று நிச்சயித்து விட்டேன். இத்தனை வருஷ காலமும் புரளிக்கு இடமில்லாமல் நாம் நடந்து கொண்டு விட்டோம். இந்த வயதில் அதற்கு ஆளாக எனக்கு இஷ்டமில்லை."

" இதற்கு முன்பு மட்டும் புரளிகள் கிளம்பியிருக்காதா, விமலா?" என்று ஏமாற்றத்துடன் கேட்டார் ராமசாமி.

"முன்பு ஒருவரை யொருவர் காதலித்தோம். கலியாணமும் செய்து கொண்டிருந்தால் ஒருவரும் ஒன்றும் சொல்லியிருக்க முடியாது. நம் காதலைப் பற்றி புகழத்தான் செய்திருப்பார்கள்" என்றாள்.

"இப்பொழுது மட்டும் நாம் காதலிக்க வில்லையா?" என்று கேட்டார்.

" ஆனால் நம் குழந்தைகள் விஷயம் புதிதுதானே?" என்றாள் விமலா.

"இவ்வளவு நாள் நீ மறைத்து வைத்த விஷயம் யாருக்குத் தெரியப் போகிறது? உன் பெண்தான் என் பையனை மணந்தாள் என்று யாருக்குத் தெரியப் போகிறது?" என்று மேலும் கேட்டார்.

"இந்த விஷயம் பரவ ஒரு கோபாலசாமி போதாதா? நாம் என்னதான் அவர் வாயை அடக்க முயன்றாலும் இந்த விஷயம் வெளிப் படாமல் போகாது. இது ரகசியமாகவே இருக்க ஒரே ஒரு வழிதான் இருக்கிறது. நாம் நம் காதலைத் தியாகம் செய்வதுதான் அந்த வழி. நாம் ஒருவரை யொருவர் கல்யாணம் செய்து கொள்ளப் போவதாக வந்த செய்திகள் வெறும் புரளியாகும் என்று செய்து விட்டால்தான் நம் குழந்தைகளின் மண வாழ்க்கை இன்பம் நிறைந்ததாய் இருக்கும். எனக்காக இல்லாவிட்டாலும் என் மகளுக்காக என் காதலை அழித்து விடுவதென்று முடிவு செய்து விட்டேன். நீங்கள் என்னை மன்னித்து, என் முடிவை ஒப்புக் கொள்ள வேண்டும். உங்களுக்காக இல்லாவிட்டாலும் உங்கள் மகனுக்காக அவ்விதம் செய்து தான் ஆகவேண்டும்" என்று முடித்தாள்.

டைரெக்டர் ராமசாமி தம் கண்களைத் துடைத்துக் கொண்டு, தம்மை மறந்தவராய், "ஓ, கே!" என்றார்.

"என் பெண்ணின் கல்யாணத்திற்கு நீங்கள் மறக்காமல் வரவேண்டும், ஸார்!" என்று கூறிச் சிரித்தாள் விமலா.

"நீயும் என் பிள்ளையின் கல்யாணத்திற்கு வரத் தவறக் கூடாது!" என்று கூறி ராமசாமி நகைத்தார்.

* * *

டைரெக்டர் ராமசாமியின் மகனுடைய கல்யாணம் தடபுடலாக நடந்தது. அவருடைய சொந்த வாழ்க்கை சம்பந்தமான இந்தச் சம்பவம் பிரமாதமாக நடந்தது. பிரபல நக்ஷத்திரங்கள் யாவரும் வந்திருந்தனர். விமலா தேவியும் வந்திருந்தாள் என்று கூற வேண்டியதில்லை.

நுனிப்புல்

வெட்டுக்கிளி

'குண்டூசி' வாசகர்களுக் கெல்லாம் என்மீது அசாத்தியமான கோபம். "இந்த 'வெட்டுக் கிளி'யே ஒரு 'பிளாக் மார்க்கெட் வெட்டுக்கிளி' யாக இருக்குமோ" என்று காரசாரமாக ஆசிரியருக்கு சிலர் கடிதம் எழுதி விட்டார்கள்.

வாசகர்களின் கோபத்திற்குக் காரணம், சென்ற ஊசியில், நுனிப்புல் பகுதியில், 'பிளாக் மார்க்கெட்'டைப் பற்றி ரஸமாக எழுதி, ஆனால் அதை 'ரேஷன்' பண்ணிவிட்டேன் என்பது தான்.

என்னை யார் எப்படித் திட்டினாலும் பொறுத்துக் கொள்ளுவேன் ஆனால் 'பிளாக் மார்க்கெட் ஆசாமி' என்று என்னை அழைப்பதை மட்டும் சகிக்க மாட்டேன். ஆகவே இதிலிருந்து தப்புவதற்காக இன்னும் கொஞ்சம் 'பிளாக் மார்க்கெட்' டையே விஸ்தரித்து விடுகிறேன். சரிதானே!

* * *

சென்னையிலுள்ள பிரபல தியேட்டர் ஒன்றின் மாஜி மானேஜர் — அந்த தியேட்டரின் மானேஜராக இருந்த சமயம் பல பட விநியோகஸ்தர்களுக்கு அவர்களின் படங்களைத் திரையிடத் தமது தியேட்டரைக் கொடுப்பதாகக் கூறி அவர்களின் 'தயவால்' தாமே ஒரு பட விநியோகஸ்தராகி விட்டார், இதன் காரணமாக அந்த மானேஜரை "பி. எம்." (பிளாக் மார்க்கெட்) என்றே அழைத்து வந்தார்கள்.

* * *

பிளாக் மார்க்கெட் பண்ணி ஏராளமான பணம் சம்பாதித்து விட்ட மேற்படி மானேஜர், வேறு ஒருவருக்கு 'பிளாக்'கிலே பணம் கொடுக்கத் தெரியாததாலோ என்னவோ ஒரு வழக்கிலே மாட்டிக் கொண்டு கைது செய்யப் பட்டார். இவ் வழக்கு இப்போது நடந்து வருகிறது.

* * *

தியேட்டர் 'பிளாக் மார்க்கெட்'டிலே மற்றொரு ரகம் உண்டு. "என்ன ஸார்! மணி ஆறு ஆகிவிட்டது. இனிமேல் உங்களுக்கு எப்படி ஸார் டிக்கெட் கிடைக்கும்?" என்ற கேள்விக்கு, "அதற்கென்ன ஸார்! பிளாக் மார்க்கெட்டிலே வாங்கிக் கொண்டால் போகிறது" என்று சட்டென்று பதில் வரும்.

தியேட்டர்களில் இந்த 'பிளாக் மார்க்கெட்' வியாபாரத்தின் மூலமாக ஜீவனம் நடத்தும் வீரர்கள் பலர் சுற்றிக் கொண்டிருப்பதை சகஜமாகக் காணலாம்.

* * *

இந்த டிக்கெட் பிளாக் மார்க்கெட் வியாபாரத்தில் கிடைக்கும் ஊதியம் படத்தின் தரத்தையும், கூடும் கூட்டத்தையும் பொருத்ததாயிருக்கும். சமீபத்தில் சென்னையில் வெளியான ஒரு அற்புதமான படத்திற்கு முதல் வாரத்தில் நாலே முக்காலணா டிக்கெட் ஐந்து ரூபாய்க்குக்கூட விற்கப்பட்டதாம்!

* * *

'குண்டூசி'க்குக் கூட பிளாக் மார்க்கெட் வந்து விட்டது. பேப்பர் குத்தும் குண்டூசியைக் குறிப்பிட வில்லை. உங்கள் அபிமான 'குண்டூசி'

யைத் தான் குறிப்பிடுகிறேன். தினம் ஒரு அன்பரிடமிருந்தாவது புகார் வராமலிருப்பதில்லை. "ஏஜெண்ட் 'குண்டூசி' பத்திரிகையை பத்து அணுவுக்கும் பன்னிரெண்டு அணுவுக்கும் விற்கிறாரே. தாங்கள் அதைத் தடுக்க வேண்டும்" என்று முறையிடுகிறார்கள்.

* * *

இப்பொழுதெல்லாம் நிதி திரட்டப்படுவது சகஜமாகி விட்டது. ஆனால் சினிமாத் துறையில் சம்பந்தப்பட்டவர்களுக்காக நிதி திரட்டும் விஷயம் புதுமையாக இருக்குமல்லவா?

* * *

திருச்சிராப்பள்ளி முதலாளி ஒருவருக்காக கோவை ஸ்டுடியோ ஒன்றில் படம் பிடிக்க, சென்னையிலிருந்து கதை—வசன கர்த்தாவும் டைரெக்டருமான ஒருவர், தமது அபிமான நடிகையுடன் கூட கோவையில் முகாம் போட்டார். தயாரிப்பு செலவுக் கணக்கு நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டே போயிற்று. ஆனால் படம் மட்டும் வளராமலே இருந்து வந்தது.

* * *

திடீரென்று ஒரு நாள் அந்த அபிமான நக்ஷத்திரத்தின் கைக் கெடிகாரச் (பொன்) சங்கலி காணாமற் போய்விட்டது. நடிகை கண் கலங்கினால் அந்த டைரெக்டர் மனம் பொறுப்பாரா? உடனே நிதி திரட்டி விட்டார். அங்கே கம்பெனி வீட்டில் தங்கியிருந்த சமையல்காரன் முதல் நடிகர் உட்பட எல்லோரும் ஒருகுறிப்பிட்டதொகையை கொடுக்கவேண்டுமெனஉத்திரவு போட்டார். 'காணிக்கை' மளமள வெனச் சேர்ந்தது. அப்படிச் சேர்ந்த தொகையைக்கொண்டு நடிகைக்கு காணமற்போன சங்கிலியை மட்டுமல்ல—வேறு பல புதிய நகைகளையும் வாங்கிப் போட்டார் டைரெக்டர்!

* * *

சென்னை சோபனசலா ஸ்டுடியோவில் தயாராகி வந்தது ஒரு படம். பல லக்ஷக் கணக்கான ரூபாய்களை விழுங்கியும் 'படம்' வளராமலே இருந்து வந்தது. பொறுமை இழந்த முதலாளி கோவையிலிருந்து கிளம்பி வந்து, 'படம் பிடித்தது போதும்' என்று கம்பெனியையே மூடிவிட்டுப் போய்விட்டார்.

அப்படிக் கலைக்கும் போது, அந்தப் படத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஒவ்வொரு நபருக்கும் தம்பிடி கூடக் குறைக்காது கணக்குப் பார்த்துப் பணம் கொடுத்தார்.

பாவம்! அந்தப் படத்தைத் தயாரிப்பதாக பொறுப்பு ஏற்றுக்கொண்ட ஒருவர் மீது (ப்ரொட்யூஸர்) அதிருப்தி ஏற்பட்டதாலேயே கம்பெனி கலைக்கப்பட்டது. ஆகவே அவரை கவனிப்பாரே இல்லை.

முபாரக் "பில்ஹணா"வில் ஹாஸ்ய விருந்தளிக்கும் பொறுப்பை புளிமூட்டை ராமசாமி ஏற்றுக்கொண்டிருக்கிறார்.



ஜெமினியின் "சக்ரதாரி"யின் நாராயண ராவின் நடிப்பு பிரமாதமாய் இருக்குமாம்.

பார்த்தார் அவர். சும்மா விருந்தால் நடக்குமா? கணக்குத் தீர்த்து பணம் வாங்கிக் கொண்டு போகும் ஒவ்வொரு நபரையும் அணுகி, அவரிடம் அநாதரவான தம் நிலையை அழாத குறையாகக் கூறி, ஒவ்வொருவரிடமிருந்தும் பணம் வாங்கிக்கொண்டார்.

* * *

இப்படி நிதி திரட்டுவது ஒரு புறமிருக்க, பிறர் பொருள்களைத் தன்னுடையதாக பாவித்துக்கொண்ட ஒரு (தமிழ்ப் படங்களில் நடிக்கும்) பஞ்சாபி நாட்டிய நடிகையின் செய்கை நினைவுக்கு வருகிறது.

மேற் கூறிய நாட்டிய நடிகை ஒரு சமயம் சிதம்பரம் அண்ணாமலை சர்வ கலாசாலையில் நாட்டியமாடப் போயிருந்தார். ஸ்ரீனிவாஸ சாஸ்திரியார் ஹாலில் நடைபெற்றது அவரது நாட்டியக் கச்சேரி.

கச்சேரியை முடித்துக் கொண்டு அந்த நடிகை, தம் சாமான்களுடன் கூட, சாஸ்திரியார் ஹாலில் இருந்த விலை உயர்ந்த மின்சார விளக்குகள், சிங்காரமான குனோப்புகள் முதலியவற்றையும் மூட்டை கட்டிக் கொண்டு கிளம்பி விட்டாராம்!

ஆனால் அந்தக் கலாசாலை ஆசாமிகள் ஏமாந்தவர்களல்ல. அந்த நடிகையைப் பின் தொடர்ந்து சென்று, விழுப்புரம் ரயில்வே ஸ்டேஷனில் அந்த நடிகையின் பெட்டிகளை பிளாட்பாரத்தில் எடுத்துப் போட்டு உடைத்து தங்கள் பொருள்களை மீட்டுக்கொண்டு போனார்கள்!

* * *

இந்த நாட்டிய நடிகையைப் பற்றி எழுதியதும் வேறு ஒரு தமிழ்ப்பட நாட்டிய நடிகையின் வாழ்க்கையில் சமீபத்தில் நடைபெற்ற சம்பவம் ஒன்றும் ஞாபகத்திற்கு வருகிறது. "கண்ணாடி டம்ளர் உடைந்து கிழித்து விட்டது" என்று கையில் காயத்துடன் ஒரு நர்ஸிங் ஹோமுக்குப் போனார் மேற்படி நடிகை. கத்தியினால் ஏற்பட்ட காயத்தை, கண்ணாடி கிழித்த காயம் என்று சொல்லி ஊரை ஏமாற்றலாம்; ஆனால் டாக்டரைக் கூடவா ஏமாற்ற முடியும்? கோபம் கொண்ட கணவனின் கையிலிருந்த கத்தியைப் பிடுங்கப் போனதினால் ஏற்பட்டதாம் அக்காயம். ஆனால் நடிகை தன் கணவனைக் காட்டிக் கொடுக்க சம்மதிப்பாரா?

* * *

உண்மை பேசுகிற நடிகைகளே கிடையாது என்பது சிலரது வாதம். ஆனால் உண்மையை அப்பட்டமாக ஒப்புக்கொள்ளும் நடிகைகள் இருக்கும் விஷயம் அவர்களுக்குத் தெரியாது.

சந்தேகம் ஏற்பட்டால், சமீபத்தில் புதிதாக வீடுகட்டி குடி புகுந்த ஒரு சினிமா நடிகையின் வீட்டிற்குப் போனால் அவர் உண்மையை ஒளிவு மறைவின்றி ஒப்புக்கொள்ளும் உண்மை தெரியவரும். அவர் வீடு கட்ட ஆரம்பித்த சமயம் திருஷ்டி பரிகாரத்திற்காக வைத்த பொம்மை இன்னும் அப்படியே இருக்கிறது. இன்றும் அந்த பொம்மையின் கீழ் அந்த நடிகையின் பெயர் எழுதப்பட்ட பலகை தொங்குகிறது!

* * *

பல வருஷங்களுக்கு முன் நடந்த ஒரு ரஸமான விஷயம். அப்போது ஒரே பெயருள்ள இரு 'லக்ஷ்மி'கள் பிரபலமா யிருந்தனர். ஒருவர் தமது இனிய சங்கீதத் திறமையினாலும், மற்றவர் படங்களில் வெற்றிகரமாக நடித்தும் பிரபலமா யிருந்தனர். பிரபலமான அந்த நடிகை தம் டைரெக்டருடன் டில்லிக்குப் போனார்.

சங்கீதத்தினால் பிரபலமடைந்திருந்த 'லக்ஷ்மி'யின் புகழ் டில்லி வரை எட்டியிருந்தது. இந்த நடிகை 'லக்ஷ்மி' டில்லிக்குச் சென்றதும் டில்லி ரேடியோக்காரர்களுக்கு தலைகால் தெரியவில்லை. நடிகை 'லக்ஷ்மி'யை சங்கீத 'லக்ஷ்மி' என்று தவறாக எண்ணிக் கொண்டார்களாம். அன்று நடக்க இருந்த ஒரு முக்கிய நிகழ்ச்சியைக்கூட ரத்து செய்துவிட்டு, நடிகை 'லக்ஷ்மி'யின் சங்கீத நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்தார்கள். அவர் வாயைத்திறந்துபாட ஆரம்பித்ததும் அவ்வடக்கத்திக்காரர்கள் ஒருவரை ஒருவர்குழப்பத்துடன் பார்த்துக் கொண்டனர். பிறகு சில தமிழ் அதிகாரிகளை விசாரித்து, 'அன்று பாடியவர் சங்கீத லக்ஷ்மி அல்ல; நடிகை லக்ஷ்மி' என்ற உண்மையை தெரிந்து கொண்டனர்! எப்படி இந்தப் பெயர் மாறாட்டம்?

* * *

ஸமீபத்தில் பி. ஏ. பெரியநாயகி தம் புதிய வீட்டின் 'கிரஹப் பிரவேசம்' நடத்திய சமயம், பல அபிமானிகள் பலவிதமான பரிசுகளை அளித்தார்கள். டைரெக்டர் கே. சுப்ரமண்யம் நூதனமான பரிசு ஒன்றைக் கொடுத்தார். மின்சார உதவியால் தானே காப்பி தயார் செய்யும் ஒரு கருவி அது. அது எப்படி வேலை செய்யும் என்ற விஷயம் நடிகைக்குப் புரியவில்லை. பரிசு அளித்த டைரெக்டருக்கே அந்த விஷயம் முதலில் தெரியவில்லை! பிறகு அக் கருவியுடன் இருந்த கடிதத்தைப் படித்துப் பார்த்துவிட்டு டைரெக்டர் சவிஸ்தாரமாய் விளக்கினார். அப்பொழுது கூட பெரியநாயகிக்கு விஷயம் தெளிவாகவில்லை. "டைரெக்டர் ஸார்! நீங்களே ஒரு நாளைக்கு சாவகாசமாக வந்து காப்பி போட்டுக் காட்டி விடுங்கள், ஸார். அப்புறம் தான் நான் இதை உபயோகிப்பேன்" என்று பெரியநாயகி கூறினாராம்!

"கிருஷ்ண பக்தி"யில் இது சக்தி ரஸமான ஒரு கட்டம். சின்னப்பா — ராஜ குமாரி.

சந்தேகம்

பத்ம பாரதி

அன்றாடம் கோவிலுக்குச் சென்று கடவுளைக் கும்பிட்டு வந்தாலாவது தன் கலி தீராதா என்ற எண்ணம் தோன்றியது ஒரு நாள் ஜானகிக்கு. வாழ்க்கையில் துன்பம் தோன்றினால் கடவுள் பக்தி பெருகுவது இயற்கை தானே? அதிலும் சுமுகமாக இருந்த ஜானகியின் வாழ்க்கை அப்பொழுதிருந்த நிலையில் கோவிலுக்குச் சென்று வருவதும் ஒரு பராக்காகவே இருந்தது அவளுக்கு. ஒரு ஆடி வெள்ளிக்கிழமையன்று அம்பாள் சன்னதியில் நின்று மெய்மறந்து தியானம் செய்துகொண்டிருந்தாள் ஜானகி. இருந்தாற் போலிருந்து "அட, ஜானகியா!" என்ற குரலைக் கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்பினாள் ஜானகி. அவளால் பேசவே இயலவில்லை. ஆச்சரியம் மேலிட்டு வாயடைத்து நின்றாள் அவள்.

"ஏண்டீ, அடையாளம் தெரியவில்லையா? இப்பொழுது கொஞ்சம் பருமனாக இருக்கிறேன் இல்லையா?" என்று சொல்லி கலகலவென நகைத்தாள் ஜானகியின் பாலியத் தோழி மரகதம்.

"மரகதம், இன்னும் என்னை ஞாபகம் வைத்துக் கொண்டிருக்கிறாயா?" என்று நாத் தழுதழுக்கக் கேட்டாள் ஜானகி.

"உன்னை மறக்க முடியுமா ஜானகி? நாட்டியப் பாடமெல்லாம் உனக்கு ஞாபகமிருக்கோ. நான் இப்பொழுது ஆடறதையே விட்டுட்டேண்டி" என்று மடமடவென கொட்டித் தீர்த்தாள் மரகதம்.

"அதெல்லாம் இப்பொழுது எனக்கு எங்கே சாத்தியப்படப் போகிறது. ஆனாலும் ஒரு பாடம் கூட என் மனத்தை விட்டு அகலவேயில்லை" என்றாள் ஜானகி மெதுவாக. அவளுடைய சரீரம் புல்லரித்தது. பழைய சம்பவங்களனைத்தும் கண நேரத்தில்

அவன் மனத்திடையே தோன்றி மறைந்தன.

சிறு வயதில் மரகதம் நாட்டியம் ஆடக் கற்றுக் கொள்ளும்போது மிகக் கவனமாகப் பார்த்துக் கொண்டிருப்பாள் ஜானகி. பிறகு வாத்தியார் சென்றதும் அவர் கற்றுக் கொடுத்த வற்றை அப்படியே ஆடிக் காட்டி விடுவாள். நான்கைந்து வருட காலத்திலேயே அந்த வித்தை ஜானகியின் மனத்தில் அப்படியே பதிந்து விட்டதெனலாம். ஆனால் சாம்பசிவனை மணந்த பின்னர் தான் கற்ற சங்கீதம், நாட்டியம் இவற்றைப் பற்றிச் சிந்திக்கவே சந்தர்ப்பமில்லாது போயிற்று அவளுக்கு.

* * *

'கண் கண்டதைக் கை செய்யும்' என்பார்களே அது ஜானகியின் விஷயத்தில் முழுக்க முழுக்கப் பலித்துப் போயிருந்தது. எங்களூர் உபாத்தியாயர் சங்கர அய்யருடைய பெண் அவள். புதிதாக அவர்கள் குடித்தனம் வந்தபோது உள்ளூர் கோவில் தேவதாசி ஜம்பகத்தின் வீட்டிற்குப் பக்கத்து வீடுதான் கிடைத்தது. அவர்கள் அன்று அங்கு குடி புகாமலிருந்திருந்தால் இன்று ஜானகியைப் பற்றிய சிந்தனையே எழுந்திருக்காது.

உள்ளூர் தேவதாசியின் பெண் மரகதமும், ஜானகியும் ஏறக்குறைய ஒரே வயதினர்தாம் என்று கூறலாம். ஒன்பது வயது நிரம்பிய தன் பெண் மரகதத்திற்கு முறைப்படி சங்கீதம், நாட்டியம் முதலிய லளித கலைகளில் பயிற்சி அளித்து வந்தாள் ஜம்பகம். மரகதத்தின் தோழி என்ற முறையில் பெரும்பான்மையான நேரத்தை அவர்கள் வீட்டிலேயே கழித்துக் கொண்டிருப்பாள் ஜானகி. தினந்தோறும் அவள் தன் தாயாரிடம் மரகதத்திற்கு என்ன பாடம் சொல்லிக் கொடுத்தார்கள் என்பதை அப்படியே பாடியும் ஆடியும் காட்டுவாள். தன் சிறு பெண் 'சுடி'யாகப் பாடுவதைக் கேட்க எந்தத் தாயின் மனதுதான் ஆனந்தம் அடையாது?

நாளாக நாளாக சங்கர அய்யருக்கு ஜானகியைப் பற்றிய கவலையே மிகுந்து வந்தது. இரண்டு மாதம் லீவு எழுதிப்போட்டு விட்டு வரன் வேட்டையிலிறங்கினர். ஆனால் ஒரு வரன்கூட சரியாகக் குதிரவில்லை ஜானகிக்கு. யுத்த காலத்தில் சாமான்களின் விலை உயர்ந்து போனதைப் போலவே மாப்பிள்ளைமார்கெட்டும், முடுக்காகிப்போனதைக் கண்டு திகைத்தார் அவளுடைய அப்பா. ஜில்லா போர்டு பள்ளிக்கூட வாத்தியாரான அவர்

ஆயிரம், இரண்டாயிரம் என்று சில வழித்து எப்படிக் கலியாணம் செய்து வைக்க முடியும்? என்றாலும் பெண்ணைப் பார்க்க வந்த வரன்களுக்கோ கணக்கேயில்லை. தன்னைப் பார்க்க வருபவரின் முன் அமர்ந்து நேர்த்தியாகப் பாடுவாள் ஜானகி. தன் இனிய குரலாவது வரனுடைய மனதை ஆகர்ஷிக்காதா என ஏங்குவாள் அவள்.

"பெண்ணின் பாட்டு எனக்கு ரொம்பவும் பிடித்திருக்கிறது" என்று சொல்லிவிட்டுப் போனான் ஒரு வரன்.

"ஆமாம், சினிமாக்காரியைப் போல பாடிக் கொண்டிருந்தால் போதுமாக்கும்" என்று முணுமுணுத்தாள் அவனோடு வந்திருந்த பெண் மணி.

இதைக் கேட்ட ஜானகியின் உள்ளம் அப்படியே வெடித்து விடும் போலிருந்தது. "நன்றாகப் பாடினாலும் ஆபத்து. பாடத் தெரியாத பெண் என்றால் பரிகாசம். என்ன உலகமோ இது" என்று அலுத்துக் கொண்டாள் அவள். இனி தன்னைப் பார்க்க வரும் வரன்களெதிரில், "பாடவே தனக்கு அவ்வளவாக வராது" என்று சொல்லி விடுவது என்று தீர்மானித்துக் கொண்டாள் ஜானகி. அதுவே அவளுக்கு ஒரு விதத்தில் நல்லதாகவும் அமைந்தது.

புதிதாக உபாத்தியாயர் வேலைக்கு வந்திருந்தான் சாம்பசிவன். முதன் முதலாக அவன் வேலைக்கு வந்த அன்றே சங்கர அய்யருக்கு அவனிடம் ஓர் அலாதியான பிரியம் உண்டாகி விட்டது.

சில நாட்களுக்குள்ளாகவே சாம்பசிவனுடைய கண்யமான நடவடிக்கைகள் சங்கர அய்யருடைய குடும்பத்தினருக்கு மிகவும் பிடித்துப் போய் விட்டன.

"ஏன்னா, அந்தப் பிள்ளையை ஒரு பேச்சு கேட்கக் கூடாதோ? நம்

ஜானகிக்கு தக்க வரன் தான் அவன்'' என்று ஆரம்பித்தாள் சங்கர அய்ய ருடைய மனைவி ஒரு நாள்.

"கவலைப் படாதே. ஜானகியைப் பற்றி அவனுக்கு நல்ல அபிப்பிராயம் என்பதை அவன் பேச்சே சொல்லு கிறதே. 'நான் இந்த ஊருக்கு வந்து இவ்வளவு நாளாகிறதே. இன்னும் உங்கள் பெண் கறுப்பா, சிகப்பா என்று கூட எனக்குத் தெரியாது' என்று சொன்னான் அந்த அப்பாவி'' என்றார் சங்கர அய்யர்.

* * *

சின்னாட்களுக்கெல்லாம் சாம்ப சிவத்தின் மனைவியானாள் ஜானகி. தான் எதிர்பார்த்ததை விடக் கச்சித மாகப் பெண்ணின் விவாகம் நடந் தேறியதைக் கண்டு மனம் களித்தார் சங்கர அய்யர். தன் பெரியோர் செய்த பூஜா பலனே தனக்கு நல்ல கணவனை நல்கியது என மனம் பூரித் தாள் ஜானகி.

அதிலும் ஜெயா அவர்களுடைய செல்வக் குழந்தையாக ஜனித்த போது சாம்பசிவன்—ஜானகியுடைய ஆனந்தத்திற்கு எல்லையே காண முடி யாது போலத் தோன்றியது.

"நம்ம ஜெயா நல்ல அதிருஷ்ட சாலி. அவள் பிறந்ததுமே உங்க ளுக்கு சம்பள உயர்வு கிடைத்தது பாருங்கோ'' என்றாள் ஜானகி ஒரு நாள்.

"இதில் சந்தேகமென்ன? அவ ளுக்கு யோக ஜாதகமாம். சின்ன வயசிலேயே நல்ல பேரும் புகழும் வந்து வாய்க்கும் என்று ஜோசியர் சொல்லியிருக்கார்'' என்று சொல்லி ஆனந்தப் பட்டான் சாம்பசிவன்.

ஆனால் வாழ்க்கைச் சக்கரம் எல் லோருக்குமே நேரான பாதையில் செல்வதில்லை. ஒரோர் சமயத்தில் அது கரடு முரடான பாதையில் திரும்பி மனிதனை அல்லற் படுத்து கிறது சாம்பசிவனும் இந்த விதிக்கு இலக்காக வேண்டி வந்தது.

அப்பொழுது ஆரம்ப ஆசிரியர் களுக்கு சம்பளம் போதாது என்ற கிளர்ச்சி பலமாக நடந்து வந்தது. சாம்பசிவனே இதற்குத் தலைமை யாக நின்று மிகத் தீவிரமாக ஓடி யாடிக் கொண்டிருந்தான். அதன் விளைவாக தன் உத்தியோகத்தையே இழக்கவேண்டி நேரிட்டது அவனுக்கு.

இந்த உபாத்தியாயர் தொழிலுக்கே தலை முழுகி விட்டு சென்னையை அடைந்து வேறு ஏதாவது வேலையி லமரலாம் என்று குடும்பத்தோடு சென்னைக்கு வந்து விட்டான்.

சென்னையிலும் தான் அவன் துர திருஷ்டம் அவனைப் பின் தொடர்ந்து வந்ததோ என்னவோ. எவ்வளவோ அலைந்து திரிந்தும் அவனுக்கு வேலையே கிடைக்கவில்லை.

கையிலிருந்த சொற்ப பணமும் வெகு சீக்கிரத்திலேயே தீர்ந்து போய்

"ராஜ முக்தி"யில் சிறுகளத்தூர் சாமா அற்புதமாய் நடித்திருக்கிறார்.

விட்டது சாம்பசிவத்திற்கு. ஜானகி யின் இரண்டொரு நகைகளும் மார்வாடியின் கடையைச் சரணடைந்தன. தம்பதிகளிருவரும் நான்கு வயது நிரம்பிய தம் குழந்தை அழுக்குப் படிந்த கந்தல் கௌனுடன் வாடுவதைக் கண்டு பெரிதும் மனம் புழுங்கினர்.

* * *

கோவிலை விட்டு வெளி வந்தபோது தன் பங்களாவிற்கு தன்னோடு வந்தே யாகவேண்டும் என மிகவும் பலவந்தப் படுத்தினாள் மரகதம். "குழந்தைக்குச் சாதமூட்ட வேண்டும்" என்று ஏதேதோ சாக்கு போக்குகள் கூறியும் கேட்கவில்லை மரகதம்.

புத்தம் புதிய காரில் சில கண நேரங்களுக்கெல்லாம் ஒரு பெரிய பங்களாவின் வாசலை அடைந்தபோது

கிருஷ்ணனாகப் பல படங்களில் தோன்றும் பத்மினி.

ஒரேயடியாகப் பிரமித்துப் போனாள் ஜானகி. அங்கே காணப்பட்ட ஆடம்பர சாமான்களுக்கிடையே பல ஒட்டுகள் போட்ட கிழிசல் புடவையுடன் தான் நிற்பதை ஓர் நிலைக்கண்ணாடியில் கண்ட ஜானகி அப்படியே வெட்கிக் குன்றிப் போனாள்.

மெல்ல மெல்ல தன் நிலைமையை கண்ணீர் பெருக்கியபடி ஜானகி கூறி வந்தபோது மரகதத்தின் கண்களிலும் நீர் தளும்பியது. சிறிது நேரம் ஏதோ யோசித்துக் கொண்டிருந்து விட்டு மரகதம் ஒரு தீர்மானத்திற்கு வந்தவளைப் போல சொல்லலானாள்.

"ஜானகி, நீ வித்தியாசமாக நினைத்துக் கொள்ள வேண்டாம். என் பெண் சரசாவிற்கு சங்கீதமும் நாட்டியமும் கற்றுக் கொடுக்க வேண்டுமென்று எனக்கு ஆசை. அது என் பேச்சைக் கேட்காது. அவ்வளவு செல்லக் குழந்தை அது. உனக்கு ஆக்ஷேபணை இல்லையென்றால் நீயே என் பெண்ணிற்குக் குருவாக இருக்கலாம். நான் என் கணவரிடம் சொல்லி ஏற்பாடு செய்கிறேன். என் பேச்சுக்கு மறுப்பு சொல்ல மாட்டார். அவரை உனக்கு மாதம் ஐம்பது ரூபாய் சம்பளமாகக் கொடுக்கச்சொல்கிறேன்."

ஜானகியால் தன் காதுகளை நம்பவே முடியவில்லை. தனக்குக்கூட நல்ல காலம் பிறந்து விட்டதா என ஐயுற்றாள் அவள். கணப்போதில் தன் குழந்தை ஜெயா புத்தாடைகள் தரித்து சொகுசாக நடமாடுவது போலத் தோன்றியது அவளுக்கு. ஆனால் மறுகணமே தன் கணவர் இந்த ஏற்பாட்டுக்கு என்ன சொல்வாரோ என்று எண்ணியபோது அவள் தலை கிறுகிறுத்தது. 'அவர் ஒருகாலும் சம்மதிக்கவே மாட்டார்' என்று அவள் அந்தராத்மா ஒலமிட்டது.

"ஆ...உம்...யோசித்துச் சொல்கிறேன்" என்று தடுமாறினாள் ஜானகி.

1
சினிமா நடிகை
மீனு கோகிலம்
இதை உன் எஜமானியம்மாவிடம் கொண்டு போய்க் கொடப்பா
2
நான் தமயந்தி 'ஹேர் ஆயில்' கம்பெனியின் மானேஜர். தாங்கள் கூந்தலழகி என்று கேள்விப்பட்டு தங்களை எங்கள் விளம்பரத்திற்கு உபயோகப்படுத்திக்கொள்ள எண்ணி இங்கு வந்தேன்
3
4
5
நான் போய்ட்டு வரேன் இதை வைத்துக்கொள்ளுங்கள்
6
இதைக் கொண்டு போய் ஜாக்கிரதையாய் பீரோவில் வை

"இதில் யோசிப்பதற்கு என்ன இருக்கிறது? நீ கட்டாயம் வந்து தானாக வேண்டும். ஏன் குழந்தையை யும் பட்டினி போட்டு நீயும் சாகிருய்? நான் சும்மா பணம் கொடுக்கிறேன் என்ருல் நன்ருயிருக்காதே என்று தான் இந்த ஏற்பாட்டைச் செய்தேன்" என்ருள் மரகதம் பரிவுடன்.

ஜானகி மௌனமாக இருந்தாள். மரகதத்தின் யோசனைப்படி நடப்பது தான் மேலெனத் தோன்றியது அவளுக்கு. காலையில் வீட்டை விட்டுச் செல்லும் சாம்பசிவன் இரவு தான் வீடு திரும்புவான். அதவும் வெகு நேரம் கழித்துத்தான். எங்கே, எப்பொழுது, என்ன சாப்பிடுவானே! ஜானகி அதைப்பற்றி வற்புறுத்திக் கேட்டாலும் சரியாகப் பதில் சொல்ல மாட்டான்.

"காலையிலிருந்து மத்தியான நேரத்தில் காரை உன் வீட்டிற்கு அனுப்புகிறேன். நாமும் ஒருவரை யொருவர் தினமும் பார்த்துப் பேச முடியும்" என்று சொல்லி தன் காரி லேயே ஜானகியையும் அனுப்பி வைத்தாள் மரகதம்.

* * *

இந்த போகம்கூட நீடிக்க விட வில்லை விதி. காற்றுவாக்கில் தன் வீட்டுக்கு ஒரு கார் வருவதாயும் அதி லேறி தன் மனைவி எங்கோ சென்று நேரங் கழித்து வருவதாகவும் கேள் விப் பட்டான் சாம்பசிவன். இந்தச் செய்தியை முதலில் அவனல் நம்பவே முடியவில்லை. தன் குடும்பத்தின் அரை வயிற்றுச் சோற்றுக்குக்கூட தன்னல் சம்பாதிக்க முடியாமலிருக் கும் போது தன் மனைவி காரிலாவது, போவதாவது என்று சிந்தித்தான் அவன். பாவம்! ஜானகி அக்கம்பக் கத்தில் கடன் உடன் பட்டுத்தான் குடும்பத்தை நடத்தி வருகிருள் என்று நம்பியிருந்தான் அவன். என் ருலும் அவன் மனம் கேட்கவில்லை.

மறுநாள் இதை பரிசோதிப்பதற்கெனவே மூன்றுவது வீட்டுத் திண்ணையில் ஒண்டிக் கொண்டிருந்தான் சாம்பசிவன். சரியாகப் பத்து மணிக்கு ஒரு புது கார் தன் வீட்டெதிரே வந்து நின்றபோது அவன் நெஞ்சம் 'திடும், திடும்' என்று அடித்துக் கொண்டது. கொஞ்ச நேரத்திற்கெல்லாம் ஜானகி ஒரு புதுப் புடவையை உடுத்திக் கொண்டு அந்தக் காரிலேறி செல்வதையும் கண்டபோது சாம்பசிவனுடைய ஹ்ருதயம் வெடித்துவிடும் போலிருந்தது. ஆவேசம் வந்தவனைப் போல வீட்டிற்கு ஓடி வந்தான் சாம்பசிவன். குழந்தை ஜெயா மாத்திரம் பக்கத்து குடித்தனக்காரர் வீட்டுக் குழந்தையோடு விளையாடிக் கொண்டிருந்தாள்.

"ஜெயா, அம்மா எங்கே?" என்று உக்ரமாகக் கூவினன் சாம்பசிவன்.

"பங்களாவிற்குப் போயிருக்கா" என்று கள்ளங் கபடமற்று மொழிந்தாள் குழந்தை ஜெயா.

"ஐயையோ! ஜானகியா இந்த மாதிரி ஆகி விட்டாள். மனிதன் பிச்சைக்காரனுகிப் போனுல் மனைவியின் குணமும் மாறிப் போகுமா? எந்த துன்மார்க்கனுடைய வலையில் சிக்கி விட்டாளோ ஜானகி."

அதற்குமேல் அவனுல் சிந்திக்கவே முடியவில்லை. "சே...சே...நடத்தை கெட்ட இந்த பாவியிடம் குழந்தையை விட்டு வைத்தால் விளங்கினுற் போலத்தான்" என்று தோன்றியது அவனுக்கு. அதற்குமேல் ஒரு கணம் கூட அங்கே இருக்க முடியாது போலத் தோன்றியது அவனுக்கு. உடனே குழந்தையை தன்னேடு அழைத்துக் கொண்டு வீட்டை விட்டு வெளியேறிச் சென்றுன் சாம்பசிவன். அடுத்த அறையில் குடியிருந்த அம்மாள் "எங்கே போகிறீர்கள், வீட்டைத் திறந்து போட்டு விட்டு?" என்று கேட்டதற்குக்கூட பதிலே சொல்லாமல் சென்றுன் சாம்பசிவன்.

வருஷங்கள் ஐந்து உருண்டோடி விட்டன. சாம்பசிவன் ஆமதாபாத் மில் ஒன்றில் வேலையாக இருந்தான். குழந்தை ஜெயாவை எந்த காரணத்தை முன்னிட்டும் ஜானகியின் கண்ணுக்குக் காட்டக் கூடாது என்ற எண்ணமே அவனை வட நாட்டிற்கு இழுத்துச் சென்றது. இருந்திருந்து அவன் மனம் "பாவி, எவனுடன் கூடிக் குலாவிக் கொண்டிருக்கிருளோ" என்று எண்ணி எண்ணி உருகும்.

"அப்பா, எங்க ஸ்கூல்லே ஆண்டு விழா அப்பா. நீ கட்டாயம் வரணும். டிராமா கூட போடரு. நான் கூட ஆக்ட் பண்ணுகிறேன்" என்றுள் ஜெயா ஒரு நாள் தன் தந்தையிடம்.

ஆலைத் தொழிலாளர் விடுதி ஒன்றின் வராந்தா சுவரின் மீது சாய்ந்து

சைவ பக்தராக நடித்துவந்த தேசிகரை "திருமழிசை ஆழ்வார்" வைஷ்ணவ பக்தராக மாற்றியிருக்கிறுர்.

"பிழைக்கும் வழி"யில் டி. ஏ. ஜெய லக்ஷ்மி இப்படிக் காட்சி அளிக்கிறார்

கொண்டிருந்த சாம்பசிவன் அன்றைய பேப்பரைப் படிப்பதில் மூழ்கித் திருந்தான்.

"ஏம்பா, எல்லா பெண்களுடைய அப்பாவும், அம்மாவும் வருகிறார்களாம் நீயும் ஏன் அம்மாவை இங்கே வரவழைக்கக் கூடாது?" என்று மெதுவாக வினவினாள் குழந்தை ஜெயா.

சாம்பசிவன் அடிபட்ட புலி போல வெகுண்டெழுந்தான். "இதோ பார் ஜெயா, உன்னிடம் எவ்வளவு முறை சொல்லி யிருக்கிறேன் அம்மாவின் பேச்சை எடுக்கக் கூடாதென்று. அந்த நாய் இன்னொருவனோடு ஓடிப் போய் விட்டது. அவள் உன்னுடைய அம்மாவே இல்லை" என்று கடிந்தான் சாம்பசிவன்.

ஜெயா அதற்கு மேல் ஒன்றும் பேசவே யில்லை. அந்தச் சிறுமியின் முகம் ஒரேயடியாக இறங்கிப் போயிற்று. அப்பாவிடம் அம்மாவைப் பற்றிய பேச்செடுத்தாலே அவர் எரிந்து விழுவார் என்பதை அவள் நன்கறிந்திருந்தாள்.

ஆலையிலிருந்து திரும்பும் வழியில் தான் அவனுடைய ஜெயாவின் பள்ளிக்கூடம் இருந்தது. மிகவும் கோலாகலமாக அலங்கரிக்கப்பட்டிருந்த அக் கட்டடம் காலையில் ஜெயா சொன்னதை ஞாபக மூட்டியது சாம்பசிவனுக்கு. 'சும்மா தான் உள்ளே போய் பார்த்து விட்டு வரலாமே' என்று தானும் அக் கட்டடத்தில் நுழைந்தான்.

அப்பொழுது சிறுமிகளில் சிலர் கிருஷ்ணன் - கோபிகா ஸ்திரீகள் நடனமாடிக் கொண்டிருந்தனர். அவன் சற்று ஊன்றிக் கவனித்த போது கிருஷ்ணனாக வேஷம் தரித்த சிறுமி தன் ஜெயாவாகவே இருந்தது. உடனே அவன் உடல் சிலிர்த்தது. அதைத் தொடர்ந்து நடைபெற்ற மற்றொரு நிகழ்ச்சி அவனைப் பெரும் திகைப்புக்கு ஆளாக்கியது.

பள்ளித் தலைவர் மேடைமீது வந்து "தென்னாட்டின் பிரபல பரத நாட்டிய விதுஷி ஜானகி தேவியார் இப்பொழுது பேசுவார்கள்" என்று கூறியபோது அவனுக்கு இருப்பே கொள்ள வில்லை. எப்பொழுதோ ஒரு சந்தர்ப்பத்தில் அவன் மனைவி ஜானகியும், தான் சின்ன வயதின்போது அடுத்த வீட்டில் நடந்த பரத நாட்டியப் பயிற்சிக்குச் சென்று வந்ததையும், அங்கே தான் கண்டவற்றை தன் தாயாருக்கெதிரே ஆடிக் காட்டி வந்ததையும் ஒரு வேடிக்கையே போலக் கூறி யிருப்பது அவன் ஞாபகத்திற்கு வந்தது. அடுத்த நிமிஷம் அவனுடைய ஐயமும் நீங்கியது. மேடையின் மீது ஆடம்பரம் எதுவுமின்றி சாமானியமாக உடையுடுத்தி சாக்ஷாத் அவன் மனைவி ஜானகியே நின்றிருந்தாள். "அடி பாதகி, இங்கேயும் வந்து விட்டாயா?" என்று அவன் வாய் முணு முணுத்தது.

"எந்தக் கலையையும் யாரும் கற்கலாம். மனம் சுத்தமாக இருந்தால் கலைக்கு யாதொரு பங்கமும் உண்டாகாது'' என்று சொல்லிக் கொண்டிருந்தாள் ஜானகி தேவி அப்போது.

"கிராதகி, பதிவிரதை போல நடித்து உலகை மோசம் செய்யப் பார்க்கிறாயா?'' என்று மெதுவாகச் சொல்லிக் கொண்டே வெளியே வந்தான் சாம்பசிவன். எப்படியாவது குழந்தையை ஜானகி அடையாளம் கண்டு கொள்ளு முன் அழைத்து வரத் துடித்தான் சாம்பசிவன்.

கூட்டம் முடிவடைந்த பின்னர் உள்ளே சென்று விசாரித்தபோது பள்ளித் தலைவர் " உங்கள் பெண்ணை ஜானகி தேவியார் தம்மோடு அழைத்துச் சென்றிருக்கிறார். குழந்தையின் நடனம் அவர் மனதை ரொம்பவும் கவர்ந்து விட்டதாகச் சொல்லிக் கொண்டார் ஜானகிதேவி" என்று சொல்லியதைக் கேட்டபோது வானமே இடிந்து தன் தலையில் விழுந்து விட்டதைப் போலிருந்தது சாம்பசிவனுக்கு. பயித்தியக்காரனைப் போல "ஸார், என்னைக் கேட்காமல் என் பெண்ணை அக் கிராதகியோடு அனுப்பி விட்டீர்களே. எங்கே இருக்கிறாள் உங்கள் ஜானகி தேவி?'' என்று கூச்சலிட்டான் சாம்பசிவன்.

அவனைச் சமாதானப் படுத்தி ஜானகியின் ஜாகைக்குச் செல்வதற்குள் போதும் போதுமென்றாகி விட்டது பள்ளித் தலைவருக்கு.

"ஜெயா! ஜெயா! வந்து விடு" என்று கத்திக் கொண்டே தம் ஜாகைக்குள் நுழைந்த சாம்பசிவனைக் கண்டு அப்படியே பிரமித்துப் போனாள் ஜானகி.

" அப்பா, நானாக இந்த மாமியுடன் வரவில்லை. ஹெட்மாஸ்டர் தான்



அனுப்பினர்" என்று நடுங்கும் குரலில் பேசினாள் சிறுமி ஜெயா.

"ஜெயாவா, என் ஜெயாவா! நான் அப்பொழுதே சந்தேகப் பட்டேன். என் கண்ணே ஜெயா" என்று காணமற் போய் கண்டெடுத்த தன் பெண்ணை அணைத்துக் கொண்டு கண்ணீர்ப் பெருக்கினாள் ஜானகி.

ஏதோ இரைச்சல் கேட்டு வெளியே வந்த மரகதமும் அவள் கணவரும் நிலைமையை ஒருவாறாக ஊகித் துணர்ந்துகொள்ள அதிக நேரமாகவில்லை.

"ஏன் ஐயா, நீர் செய்தது நியாயமா? இப்படித்தான் ஒரு பெண்ணை அனாதரவாக சென்னைத் தெருவில் விட்டு ஓடி ஒளிந்து கொள்வதா?" என்றார் மரகதத்தின் கணவன்.

"உன்னைப் போல மகானுபாவர்கள் அவளுக்குக் கார் அனுப்பி வீட்டிற்கே வரவழைத்துக் கொள்ளும் போது நான் ஏன் ஐயா குறுக்கே நிற்க வேண்டும்?" என ஆத்திரத்துடன் மொழிந்தான் சாம்பசிவர்.

"சிவ, சிவ......நீர் அனுபவிப்பது போருதா ஐயா. நீங்கள் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தீரே என்று என் பெண்ணுக்கு பாட்டு சொல்லிக் கொடுக்க என் மனைவி ஏற்பாடு செய்திருந்ததை தவருக எண்ணி விட்டீரே. அன்று உங்கள் மனைவி திரும்பும் வரையிலிருந்து நேரிலேயே கேட்டிருந்தால் இப்படியெல்லாம் ஆகியிருக்குமா? மகா பரிசுத்தமான ஜானகிதேவியின் மன்னிப்புப் பெற்ருலன்றி உங்கள் பாவம் நீங்காதய்யா" என்ருர் மரகதத்தின் கணவர்.

சாம்பசிவன் ஒருவாருக தன் திகைப்பும் ஆத்திரமும் தணிந்து பேந்தப் பேந்த விழித்தான். அடுத்தபடியாக மரகதம் சொல்லிய செய்தி சாம்பசிவத்தை மிகவும் பச்சாத்தாபப் படச் செய்தது.

கணவனையும், குழந்தையையும் காணமல் ஜானகி தவியாய்த் தவித்ததையும், பின்னர் தான் அவளை எவ்வளவோ தேற்றி அவளிடமிருந்த கலையை பிரசித்தி பெறச் செய்ததையும் அதன் மூலமாகக் கிடைத்த ஏராளமான வருமபடியைக் கொண்டு தன்னைப் போன்று அவஸ்தைப்படும் பெண்களுக்காக ஒரு ஸேவாசதனத்தை நிறுவியிருப்பதாகவும் மரகதம் கூறியபோது சாம்பசிவனல் தலை நிமிர்ந்து பார்க்கவே முடியவில்லை.

"போனதெல்லாம் போகட்டும். இப்பொழுதாவது குழந்தையையும், உங்களையும் கிடைக்கப் பெற்றேனே. இன்ருேடு என்னுடைய சங்கீதம், நாட்டியம் முதலியவற்றிற்கு முற்றுப் புள்ளி வைத்து விடுகிறேன்" என்று சொல்லித் தேம்பினள் ஜானகி.

மீண்டும் மரகதம் "ஜானகி, உனக்கு இன்று முதல் மறு பிறப்பு என்று நினைத்துக்கொள். சென்றதையெல்லாம் மறந்து புதிய வாழ்க்கையை நீங்கள் தொடங்க வேண்டுமென்பதற்காக ஒரு சிறு விருந்துக்கு ஏற்பாடு செய்திருக்கிருர் என் கணவர். முறிந்து போன ஒரு குடும்பத்தை மறுபடியும் ஒன்று சேர்த்து வைக்கும் பாக்கியம் எனக்குக் கிடைத்ததைப் பற்றி நான் ரொம்பவும் சந்தோஷப் படுகிறேன்" என்ருள.

திடீரென எதிர்பாராத விதமாக தன் தாயைக் கிடைக்கப்பெற்ற சிறுமி ஜெயா ஒருவாருகத் தன் திகைப்பு நீங்கியதும் சாம்பசிவனிடம் சென்று 'இனிமேல் நானும் நீயும் அம்மாவோடு இருக்கலாமல்லவா அப்பா?" என்று கேட்டாள்.

சாம்பசிவனுடைய குரல் தழுதழுத்தது. "இனிமேல் நம்மை யாரும் பிரிக்க முடியாது அம்மா" என்று கூறி ஜானகியை நோக்கி புன்னகை பூத்தான்.

சமயம் பார்த்து அந்த இடத்தை விட்டு மெதுவாக நழுவி உள்ளே சென்ருள் மரகதம்.

எமது வாடிக்கைக்காரர்களுக்கும்
ஆதரவாளர்களுக்கும் எங்களது

முதலாண்டு
தீபாவளி வாழ்த்துக்கள்

நடப்பு வருஷங்களில் உங்களது
அதிக ஆதரவை வேண்டுகிறோம்

☆

உங்களுக்கு எழுதுவதற்கும், அச்சிடுவதற்கும் பாக்கிங்குகளுக்கும் தேவையான எல்லாவித மான காகிதங்கள், நியூஸ் பிரின்ட், ஸ்ட்ரா போர்டுகள், உலோகங்கள், ஸ்டேஷனரி சாமான் கள் முதலியவைகளை எங்களிடம் வாங்கும்படி வேண்டுகிறோம்.

பி. எஸ். என். எம்.

ராமலிங்கம் செட்டியார் & கோ.,

சென்னை விலாஸம் : 72, தங்கசாலைத் தெரு,
சென்னை 3.

பம்பாய் விலாஸம் : லக்ஷ்மி கோவிந்த் நிவாஸ்,
பிளாட் நெ. 132, மாதுங்கா, பம்பாய் 19.

புராணப் படங்களுக்கு கண்ட்ரோல்

— மார்ஸ் —

இந்திய நாட்டில் சினிமாப் படங்களுக்கு உகந்த கதைகளுக்குப் பஞ்சமே யில்லை. இந்திய புராணக் கதை இதிகாசக் கதை, கிராமியக் கதை, சரித்திரக் கதை, தேசியக் கதை இவைகளை யெல்லாம் வைத்துக் கொண்டு பொழுது போக்கிற்கும், அறிவு வளர்ச்சிக்கும் ஏற்றதான அநேக படங்களைத் தயாரிக்கலாம். ஆனால் இந்தக் கதைகளை ஆராய்ந்து அவைகளைத் திரைக்கு ஏற்றதாய் செய்வதற்கான வசதிகள் தாம் இல்லை.

பட முதலாளிகளில் அநேகரும், முன்பே பண வசூலை அளித்திருக்கும் பழைய கதைகளை சுலபமாகக் கையாளுவதை விட்டுவிட்டு, தெரியாத புதுக் கதைகளை ஆராய்வதில் உயிரை விட விரும்ப வில்லை. அவர்களைச் சொல்வானேன்? அவர்கள் லாபத்தைக் கருதுபவர்கள்தானே? ஆதலால்தான் அவர்கள் முன்பே நல்ல வெற்றியளித்த கதைகளையும்—ஏன் பாராட்டப்பட்ட சம்பவங்களையும் கூட—திரும்பத் திரும்ப கையாண்டு வருகிறார்கள்.

இந்த மாதிரி லாப மனப்பான்மையுடன் படத்தைத் தயாரிப்பதால்தான் அவர்கள் அசல் கதையின் நோக்கத்தையும், தத்துவத்தையும் அநேகமாக மறந்து விடுகிறார்கள். ஒரு கதையோ, ஒரு கதைச் சம்பவமோ எவ்வளவுக்கு அதிகமாக திரும்பத் திரும்ப படமாக்கப் படுகிறதோ அவ்வளவுக்கு அதிலுள்ள சுவாரஸ்யம் குறைந்து கொண்டே போகும். படமுதலாளிகள் அடிக்கடி ஒரே கதையைப் படம் பிடிக்க முற்படுகிறார்கள். அதுவும் குறைந்த கால அளவிற்குள் இரண்டு மூன்று பேர்கள் ஒரே கதையைப் படமாக்கி வெளியிடுகிறார்கள். இதன் விளைவாக மூன்று நந்தனார்கள், இரண்டு விஸ்வாமித்திரர்கள், இரண்டு ராம்தாஸ்கள், இரண்டு சாரங்கதராக்கள், இரண்டு பட்டினத்தார்கள், இரண்டு அருணகிரிகள், மூன்று மீராக்கள், மூன்று ஞான சௌந்தரிகள், நான்கு வள்ளிகள், அநேக கிருஷ்ண லீலைகள், மற்றும் பெயர் மட்டும் மாற்றப்பட்ட ஒரே மாதிரியான அநேக பக்தர்களின் கதைகள் இவையெல்லாம் வெளிவந்திருக்கின்றன. சில சமயங்களில் இப்படங்கள் ஒன்றைவிட ஒன்று மோசமாய் இருப்பதையும் பார்த்திருக்கிறோம். கதை ஒன்றாயிருந்தாலென்ன? அதன் கருத்து என்னவாயிருந்தாலென்ன? மொத்தத்தில், பொது ஜனங்களின் பணமென்னவோ பறிக்கப்பட்டு வருவது உண்மை.

சில வருஷங்களுக்கு முன் தென்னிந்திய பிலிம் சேம்பர் இந்தப் போட்டிப் படத் தயாரிப்பை ஒழிப்பதற்கான முயற்சியில் இறங்கியது. ஆனால் அதன் அங்கத்தினர்களே சேம்பரின் தீர்மானங்களை அலட்சியம் செய்ய முற்பட்டதால் இம் முயற்சி வெற்றி பெற வில்லை. உங்களுடைய பாட்டி எப்படியோ அப்படித் தான் இந்த

பிலிம் சேம்பரும். உங்களுக்கு கஷ்டம் ஏற்படும் போது உங்கள் பாட்டியிடம் போய்ச் சொல்லி தேறுதல் அடைகிறீர்களல்லவா? ஆனால் உங்களுக்குக் கஷ்டங்களொன்றும்இல்லாமல், சந்தோஷமாய் இருக்கும் போது உங்கள் பாட்டியைப் பற்றிய கவலை உங்களுக்கு ஏற்படுவதே யில்லை. அவள் இருக்கிறாளா அல்லது செத்துப் போய் விட்டாளா என்ற நினைவு கூட உங்களுக்குத் தோன்றுவதில்லை. பாட்டி உங்கள் விஷயத்தில் அதிகமாகத் தலையிடும் சமயங்களில் அவள் பேச்சை லட்சியம் செய்யாமல் உங்கள் வேலையைக் கவனிக்கிறீர்கள். அவள் ஒழிந்து போய் விடக் கூடாதா என்று கூட நினைக்கிறீர்கள். நம் பிலிம் சேம்பரின் விஷயமும் இதே கதைதான்.

எது எப்படி யானாலும் போட்டிப் படங்கள் நிறுத்தப் பட்டே யாக வேண்டும். ஏனெனில் பழைய சரக்கையே புதிய பெட்டியில் போட்டு கொள்ளை யடித்து வருவது பொது ஜனங்களின் பணத்தைத் தானே?

படங்களுக்கு கதையைத் தேர்ந்தெடுக்கும் விஷயத்திலும், அதைப் படத்திற்கு ஏற்ற படி மாற்றும் விஷயத்திலும் இத்தொழிலுக்கு சர்க்கார் எவ்வளவோ உதவ முடியும். "படத்தின் அபிவிருத்தியை சர்க்கார் தலையிட்டு ஒழுங்கு படுத்த வேண்டும்" என்று கேட்க ஜனங்களுக்கு உரிமை உண்டு. ஏனென்றால் வசூலிக்கப் படும் 'தமாஷா வரியை பொது ஜனங்கள் தானே கொடுக்கிறார்கள். யாராவது தமாஷா வரியை சினிமாத் தொழில் கொடுக்கிறது' என்று சொன்னால் அது கொப்பெல்ஸ் ஜெர்மன் பிரசாரத்திற்காகச் சொல்லி வந்த பொய்களை யெல்லாம் விடப் பெரிய பொய்யாகும். ஒவ்வொரு தியேட்டரிலும் கட்டணங்களுடன் வரியைத் தனியாகச் சேர்த்து பொது ஜனங்களிட மிருந்து நேராகவே வசூலிக்கப் படுகிறது. ஒவ்வொரு நாலே முக்கா லணா டிக்கெட்டிலும் நாலணா டிக்கெட் கிரயம்; இத்துடன் முக்காலணா வரி. மற்ற வகுப்புகளின் விஷயமும் இது போலத்தான். ஆகவே இந்த வரி ஜனங்கள் தலையில் தான் சுமத்தப் பட்டிருக்கிறது.

இந்த வரியின் பெயர் தமாஷா வரி. நமக்கு தமாஷா கிடைப்பதற்காக சர்க்காருக்கு இந்த வரியைக் கொடுக்கிறோம். ஆனால் நமக்குக் கிடைப்ப தென்னவோ தமாஷல்ல; தலை வேதனை தான். இது நம்பிக்கை மோசமல்லவா? இதற்குப் பொறுப்பாளி சர்க்கார்தான். இதற்கு என்ன செய்யலாம்? 'படத் தயாரிப்பிலோ—குறைந்தது கதைகள் பொறுக்கும் விஷயத்திலோ—சர்க்கார் தலையிட வேண்டும்' என்று கேட்க நமக்கு உரிமை யில்லையா? தாங்களும் வரியை வசூலித்துக் கொண்டு, பட முதலாளிகளும் ஜனங்களை கொள்ளை அடிக்கும்படி விட்டு விட்டு சும்மா

"திருமழிசை ஆழ்வாரி"ல் டி. பிரேமாவதியின் நடனத்தைக் காணலாம்

எதிர்பாருங்கள் !

ஈஸ்வரி பிக்சர்ஸாரின்
மகோன்னத தயாரிப்பு

மஹாராணி

(ஒரு கிராமியக் கதை)

பானுமதி பாலையா

மற்றும் தமிழ் நாட்டு
நடிகர்கள் நடிக்கும்
சிறந்த தமிழ் பேசும்
— படம் —

டைரெக்ஷன் :

வி. எஸ். நாராயணன்

கதை, வசனம், பாட்டு :

எஸ். டி. சுந்தரம்

ஸ்டுடியோ :

நவஜோதி

★

விபரங்களுக்கு

ஈஸ்வரி பிக்சர்ஸ்

11, வைத்தியராமன் தெரு
சென்னை—17

இருக்கின்றனர். இதை நாம் சகித்துக் கொள்ளத்தான் வேண்டுமா என்ன?

'நம் புராதனக் கலை, நாகரீகம், பண்பாடு, பழக்க வழக்கங்கள் இவைகளைப் பத்திரமாய் காக்க வேண்டும்' என்று நம் தேசியத் தலைவர்கள் பல வருஷங்களாகப் பேசி வருகிறார்கள். ஆனால் ஒருவராவது உருப்படியான வகையில் யோசனை சொல்லவோ அல்லது காரியத்தில் இறங்கவோ இல்லை.

போதிய பண வசதியின்மை காரணமாக, தஞ்சாவூர் சரஸ்வதி மஹாலில் உள்ள புராதன ஏட்டுச் சுவடிகளும், புஸ்தகங்களும் கரையான்களுக்கு இரையாகிக் கொண்டிருக்கின்றன. அசோகனின் கதையை பூராவாக அறிந்தவர்களில்லை. பறங்கியருடனும், பிரிட்டிஷாருடனும் பல வருஷங்கள் போர் புரிந்த வீரன் ஹைதர் அலியைப் பற்றி மறந்து விட்டோம். இந்தியாவை வெள்ளையரிடமிருந்து விடுவிப்பதற்காக சுதந்திரப் போரைத் தொடங்கி வைத்தவன் சுராஜ்-உத்-தௌலா. ஆனால் அவன் காலத்திலும் அக்பர் காலத்திலும் ஹிந்து முஸ்லிம்கள் சகோதரர்கள் போல வாழ்ந்து வந்தார்கள் என்பது எத்தனை பேருக்குத் தெரியும்? இந்த மாதிரி விஷயங்களை யெல்லாம்தான் நாம் சினிமாப் படங்களில் பார்க்க விரும்புகிறோம்.

வெள்ளையரின் சுயநலம் காரணமாக, ஆதிகால பிரிட்டிஷ் சரித்திர ஆசிரியர்கள், நம் புராதன மேன்மையை சின்னா பின்னப் படுத்தி, ஹிந்து முஸ்லிம் சச்சரவுகளை ஏற்படுத்தி யிருக்கிறார்கள். ஆனால் தலைமுறை தத்துவமாக நம் புராதனக் கதைகளை அழியாமல் காத்து வந்திருப்பவர்கள் நம் பாட்டிமார்களாவர். இந்தப் பழங் கதைகளை அவர்கள் தங்கள் பேரன் பேத்திமார்களுக்குச் சொல்வதும், அவர்கள் பெரியவர்கள் ஆனதும் தங்களுடைய பேரன்

பேத்திமார்களுக்கு சொல்லுவதுமாக நடந்து வந்திருக்கிறது.

இப்படி வாய் மூலமாகச் சொல்லப் பட்டு வந்த கதைகள் பிறகு புஸ்தகங்க ளாக்கப் பட்டன. இப்பொழுதோ அவைகளைப் பட முதலாளிகள் பட மாகத் தயாரித்து வருகிறார்கள்.

சர்க்கார் ஆராய்ச்சிக் கழகங்களை ஏற்படுத்தி, மறைந்து போன மஹாத்து வங்களைக் கண்டு பிடிக்கச் செய்ய வேண்டும். புராதனச் சின்னங்களை யும், பொருள்களையும் சேகரித்துப் பாதுகாக்க ஏற்பாடு செய்ய வேண் டும். தங்களுக்குக் கிடைக்கும் விஷ யங்களை வைத்துக் கொண்டு பழங் கால சரித்திரக் கதைகளை ஆதார மான முறையில் திருத்தி அமைக்கச் செய்ய வேண்டும். பட முதலாளி கள் இக்கதைகளைப் படமாக்க விரும் பினால் அவர்களுக்குத் தங்கள் வச முள்ள ஆதாரங்கள், சாதனங்கள், ஆராய்ச்சி முடிவுகள் இவைகளை யெல்லாம் கொடுத்து உதவ வேண்டும்.

ஆரம்பத்தில் இதற்கெல்லாம் ஏரா ளமாகச் செலவாகும் என்பதுண்மை. பட முதலாளிகள் நக்ஷத்திரங்களுக்கு லக்ஷக் கணக்கில் கொட்டிக் கொடுப் பதற்குப் பதில் இது போன்ற நல்ல விஷயத்தில் செலவழிக்கும்படி சர்க்கார் கேட்கலாம்.

இதுபோல சர்க்கார் செய்வார்க ளானால் ஒரே அம்பில் இரு பறவை களை வீழ்த்தலாம். ஒரு பக்கத்தில் அவர்கள் நம் புராதன இந்தியக் கலை, நாகரீகம், மஹாத்துவம், இவைகளைப் பாதுகாக்கவும், இன்னொரு பக்கத்தில் நம் பட முதலாளிகள் ஆதாரமான விஷயங்கள் கொண்ட கதைகளைப் படமாக்குவதற்கும் இது பேருதவி யாக இருக்கும்.

சரோஜா :—கடிகாரங்களை ரிப்பேர் செய்வதற்கும், புதிய டைம் பீஸ்கள், ரிஸ்ட் வாட்சுகள், பிளாஸ்டிக் ஸ்டிராப்பு கள், பௌண்டன் பேனாக்கள், மற்றும் எல்லாவித மான ஷாப் சாமான்களையும் எங்கே வாங்கலாம்?

ஹேமா :— சந்தேகமென்ன. கரீம் வாட்சு கம்பெனியில் இவைக ளெல்லாம் ஏராளமாய் வந்திருக்கின்றன. விலையும் ரொம்பவும் மலிவு. வா, இப்பொழுதே போவோம்!

KARIM WATCH CO.,

காட்சிசாலை :—53, உஸ்மான் ரோடு, தி. நகர், சென்னை.

குண்டூசியைக் கேளுங்கள்

ஏ. எம். ஏ. மஸ்தான் (கீழக்கரை)

எம். வி. ராஜம்மா இதுவரை எத்தனை படங்களில் நடித்திருக்கிறார்?

அவர் சென்ற பனிரெண்டு வருஷ காலத்தில் பதினைந்துக்கு மேற்பட்ட படங்களில் நடித்திருக்கிறார். ஆனால் அவருக்கு நக்ஷத்திர மௌசு சமீபத்தில் தான் ஏற்பட ஆரம்பித்திருக்கிறது.

ஜெ. ஜெயசீலன் (தரங்கம்பாடி)

நம் தமிழ்ப் பட முதலாளிகள் திரும்பத் திரும்ப புராணப் படங்களையே தயாரிக்கிறார்களே. ஏசுநாதரின். சரிதையை ஏன் அவர்கள் படமாக்கக் கூடாது?

நம் பட முதலாளிகள் புராணப் படங்களில் நம் கடவுள்களை சித்திரவதை செய்து வருகின்றனர். ஏசுநாதரோ முன்பே சித்திரவதைக் குள்ளானவராயிற்றே என்று சும்மா யிருக்கிறார்கள் போலும் நம் பட முதலாளிகள்.

தோழியர் டி. ஆர். ராஜகுமாரியை தூய தமிழில் "அரசகன்னி" என்று அழைக்கலாம் என்கிறார் என் தோழர் ஒருவர். நீர் என்ன சொல்கிறீர்?

அப்படியானால் உம்முடைய பெயரையும் "வெற்றி கொண்டான்" என்று மாற்றிக் கொள்ள வேண்டி யிருக்குமே!

எஸ். என். ராஜன், (திருவண்ணாமலை)

பி. எஸ். சரோஜாவுக்கு விவாஹம் ஆகி விட்டதா? எனின் யாரை மணந்து கொண்டிருக்கிறார்? குழந்தைகள் உண்டா?

சரோஜா நாட்டிய நிபுணர் போலோநாத்தை மணந்து கொண்டிருக்கிறார். அவருக்கு ஒரு பெண் குழந்தை இருக்கிறது.

கே. மோஹம் வைத்தியநாதன் (விழுப்புரம்)

சினிமாவில் நடிக்கும்போது நடிக, நடிகையர்கள் வசனங்களை மனனம் செய்து கொண்டு பேசுகிறார்களா? அல்லது போர்டில் எழுதி வைத்துப் படிக்கிறார்களா?

முன் போல நம் நடிக நடிகைகள் வசனங்களை மனனம் செய்து பேசுவதற்கு சிரமம் எடுத்துக் கொள்ளுவதில்லை, அதற்குப் பதில் அவர்கள், "சம்பளம் 25,000; பிளாக்கில் 50,000" என்பது போன்ற ஐசுவரிய மந்திரங்களையே இப்பொழுது மனனம் செய்து வருகிறார்கள்!

வி. ஏ. கண்ணப்பன், (செங்கற்பட்டு)

யோக மங்களம் என்பது ஒருவரா? அல்லது இருவரா?

ஏன்; சமீப காலமாக மங்களம் கொஞ்சம் பருமனாக காட்சி யளிப்பது உமக்கு இந்த சந்தேகத்தை கிளப்பி விட்டிருக்கிறதோ?

"கோணி ஊசி" (திருமங்கலம்)

குண்டூசியாரே! நம் பட முதலாளிகள் ஏன் ஆபாசக் காட்சிகளை எடுக்கிறார்கள்?

என்ன செய்யலாம்; அவர்களும்தான் இக் காட்சிகளை எடுத்து எடுத்துப்

பார்க்கிறார்கள். ஆனால் அவை படங்களை விட்டு வந்தால்தானே, ஸ்வாமி!

பே. தி. பஸவலிங்க ராஜு (பேரிகை)

காஞ்சன மாலா இந்த உலகத்தில் இருக்கிறாரா?

இந்த சினிமா உலகத்தில் இல்லை.

கே. பி. தேவன் (கருவப்பாறை)

எம். கே. ராதா ஜெமினிப் படங்களில் ஏன் பிரமாதமான புகழை அடையவில்லை?

அப்படியானால், அவர் வேறு எந்தப் படத்தில் பிரமாதமான புகழை அடைந்திருக்கிறார் என்பதைத் தெரிவியும்.

எம். முசீன் (அம்பலாங்கொடை)

தாய் நாடு படத்தில் நடித்த சுந்தரி தற்போது என்ன செய்கிறார்?

ஒரு வேளை தாய்மையை நாடிச் சென்றிருக்கிறாரோ, என்னவோ?

சு. பழனிசாமி (கீழ் புவனகிரி)

லக்ஷக் கணக்கில் பணம் செலவழித்துப் படம் தயாரிக்கிறார்களே. அது பொது ஜன சேவைக்காகவா?

நன்றாய்ச் சொன்னீரே! பொது ஜன சேவையுமல்ல, மண்ணாங்கட்டியுமல்ல. எல்லாம் சுய நல சேவைதான்!

பி. பிச்சை (கீழ்க்கரை)

டி. ஈ. வரதன் தற்போது எந்தப் படத்தில் நடித்துக்கொண்டிருக்கிறார்? அவரது விலாஸத்தைத் தெரிவிக்கவும்.

வரதன் இப்பொழுது பக்ஷி ராஜாவின் "பவளக்கொடி"யில் நடித்து வருகிறார். C/o நாராயணன் கம்பெனி; மவுன்ட்ரோடு, சென்னை என்ற விலாஸத்திற்கு எழுதும்.

எம். வி. ஆர். (கும்பகோணம்)

ஞான சௌந்தரியில் எம். வி. ராஜம்மாவின் பாட்டுகள் அவராலேயே பாடப்பட்டவையா?

அவ்வளவு இனிமையாக பாடக் கூடுமென்றால் அவர் வெகு காலத்திற்கு முன்பே ஒரு லக்ஷ ரூபாய் நக்ஷத்திரமாகியிருக்க மாட்டாரா?

"ஊசிக்குண்டு" (புத்தளம்)

நீர் இந்திய நடிகைகளைப் புகழ்ந்தும் இலங்கை நடிகை தவமணி தேவியை இகழ்ந்தும் வரக் காரணமென்ன?

எல்லாம் அவரவர்கள் செய்கை, நடிப்பு இவை காரணமாகத்தான்.

ஆர். வேலு) நாவலபிட்டிய)

ஜெமினி ஞானசௌந்தரியில் நடிக்கும் சுசிலா இதற்கு முன் எத்தனை படங்களில் நடித்திருக்கிறார்? அவர் நடித்த முதல் படம் எது?

அவர் "சந்திரலேகா"வில் முதலில் தோன்றியிருக்கிறார்.

கே. பி. ராஜு (கொழும்பு)

எனக்கு சினிமாவில் நடிகராகச் சேர விருப்பம். கொஞ்சம் சங்கீதக் கலை

"பக்த ஜனா"வில் லலிதா பத்மினி ராதா-கிருஷ்ண நடனம் ஆடுகின்றனர்.

யும் என்னிடம் இருக்கிறது. இதற்கான மார்க்கத்தைச் சொல்லவும்.

பிரமாதமாக விளம்பரம் செய்யப்படும் பல படங்கள் மிக மோசமாக இருப்பது போல், வெளிப் பகட்டும் கவர்ச்சியும் உடைய சினிமா உலகத்துள் ஆயிரக் கணக்கான திறமைசாலிகள் வேலையின்றித் தவிக்கின்றனர். இந்த ஜாபிதாவில் மற்றும் ஒரு பெயரைச் சேர்ப்பதை நான் விரும்பவில்லை.

ஓ. எஸ். முத்து (கோட்டை)

காஞ்சனமாலாவுக்குப் பைத்தியம் பிடித்திருப்பதாகவும், அவர் சென்னையில் ஒரு ஹோட்டலில் தங்கியிருந்தபோது என் நண்பரை அடித்து விட்டதாகவும் கேள்விப்படுகிறேன். இது உண்மையா?

அவர் சென்னையில் ஒரு ஹோட்டலில் தங்கியிருந்ததென்னவோ உண்மைதான். ஆகவே அவர் உம் நண்பரை அடித்திருந்தாலும் ஆச்சரியப் படுவதற்கில்லை.

கே. பத்மநாபன் (ஆலப்புழை)

பக்த குப்பரா, சக்ரதாரி, சுதர்சன் ஆகிய மூன்றும் ஒரே கதையை உடைய படங்கள்தானா?

ஆம், மூன்றும் ஒரே கதைதான்.

கே. ஏ. ரஜாக் (ஜொகூர், மலேயா)

பட முதலாளியாக ஆகியுள்ள ஹொன்னப்ப பாகவதர் ஏன் டைரெக்டர் ஆக விரும்பவில்லை?

அவர் பட முதலாளியானதும் ஒரு டைரெக்டரிடம் பட்ட அவஸ்தை காரணமாக "டைரெக்டர்" என்ற பதத்தைக் கேட்கக்கூட, அவர் நடுங்குகிறார் போலிருக்கிறது.

டி. சி. லக்ஷ்மணன் (சென்னை)

டி. ஆர். சுந்தரம் இதுவரை எத்தனை படங்களில் நடித்திருக்கிறார்?

இரண்டு படங்களில்—"பர்மாராணி", "சுபத்ரா".

[தொடர்ச்சி 93-ம் பக்கத்தில்]

திரை உலகம்

தலை சிறந்த தமிழ் சினிமா மாதப் பத்திரிகை

ஆசிரியர் — டி. கே. கோவிந்தன்

பிரபல நக்ஷத்திரங்கள் தங்கள் வாழ்க்கை வரலாற்றை எழுதுகிறார்கள். கேள்வி-பதில், இருவர்ணப் படங்கள், மூவர்ண முகப்பு, ஆர்ட் அட்டை

பிரபல பத்திரிகைகள் சொல்லுவதைக் கேளுங்கள்:

......திரை உலகத்தைத் தூய்மைப்படுத்தவும், மேன்மைப்படுத்தவும், "திரை உலகம்" பிரயத்தனப்பட்டு வெற்றியடைவதில் மகிழ்ச்சியடைந்து வாழ்த்துகிறேன். — "கல்கி"

......பாராட்டுவதற்குரிய விஷயங்கள் நிறைந்தது. — "மித்திரன்"

......சினிமா ரஸிகர்களுக்கு நல்ல விருந்து. — "தினசரி"

......புதிய முயற்சி, உபயோகமான பத்திரிகை, யாவும் முதல் தரம். — "தமிழ்நாடு"

தனிப்பிரதி 4 அணா :: வருட சந்தா ரூ. 3.

மாதிரிப் பிரதிகளுக்கு 5 அணா ஸ்டாம்பு அனுப்பவும்.
ஏஜண்டுகள் இல்லாத ஊர்களில் ஏஜண்டுகள் தேவை.

திரை உலகம் ஆபீஸ், 52, ஜாபர்சா தெரு, திருச்சி.

"ராஜ முக்தி"யின் வெற்றிக்கு வி. என். ஜானகியின் உணர்ச்சி மிக்க நடிப்பு ஒரு காரணமாக இருக்குமாம்.

பகுனி பாக்கியம் ஜுபிடரின் புதுப் படமான "மோஹினி" யில் ஹாஸ்ய பாகத்தில் பிர மாதமாய் நடித்திருக்கிறாராம்.

முன்னணிக்கு வந்து கொண்
டிருக்கும் மாதுரி தேவி ஜூபி
டர் பிக்சர்ஸ் "மோஹினி"
படத்தில் நடித்திருக்கிறார்.

சக்ராதாரி.

ராஜமுக்தி.

கிருஷ்ண பக்தி

கோகுல தாஸ

திரன் கம்பெனியின் "கோகுல தாஸி"யில் ஹொன்னப்ப பாகவதரின் பாட்டுகளுடன் நடிப்பும் சிறப்பாக அமைந்திருக்கிறதாம்.



கையில் ஜபமாலை இருந்தாலும் கவனம் வேறு எங்கோ இருக்கிறது, பி. யு. சின்னப்பாவுக்கு — ராயல் டாக்கீஸ் "சுதர்சன்" படத்தில்.



“பிழைக்கும் வழி”யில் ஹாஸ்ய நடி
கர் டி. எஸ். துரைராஜ் ஒரு மைன
ராகத் தோன்றி நடித்திருக்கிருர்.

(84-ம் பக்கத் தொடர்ச்சி)

ஏ. ஷெய்க் பாஷா (விழுப்புரம்)

எம் வி. ராஜம்மா முதன் முதலில் நடித்த படம் எது? தற்போது எந்தப் படத்தில் நடித்து வருகிறார்?

ராஜம்மா முதன் முதலில் நடித்தது "சம்சார நௌகா" கன்னடப்படத்தில். தற்போது அவர் "கோகுல தாஸி", "லைலா மஜ்னு" ஆகிய படங்களில் நடித்து வருகிறார்.

எஸ் வி. ஸ்ரீனிவாஸன் (நாகூர்)

சின்னப்பா, பாலையா, எம். ஜி. ராமச்சந்திரன் ஆகிய மூவருள் கத்திச் சண்டை போடுவதில் யார் தேர்ந்தவர்?

எதற்கய்யா, அபாயகரமான பதிலைக் கூறும்படி வற்புறுத்துகிறீர்?

ஆர். சுப்பையா (சிவ கெங்கை)

வருங்கால வாலிபர்களைத் தட்டி எழுப்பக் கூடிய சமூகப் படங்களை நம் பட முதலாளிகள் தயாரிப்பதற்குப் பதில், ஏன் பழம் புராணப் படங்களையே தயாரித்துக் கொண்டிருக்கிறார்கள்?

தட்டி எழுப்ப வேண்டிய அவசியம் எங்கே ஏற்படுகிறது. அவர்கள்தான் (வாலிபர்கள்) தம் பட முதலாளிகள் தயாரித்து வரும் காமம் நிறைந்த படங்களைக் காண்பதற்காக கண் விழிப்புடன் காத்திருக்கிறார்களே!

டி. பி. நாதன்
பத்துபஹாட், மலேயா

மலேயாவில் தமிழ்ப் படங்களைத் தயாரிக்கப் போகிறார்கள். அவைகளில் நடிப்பதற்கு நடிகைகள் வருவார்களா?

ஏராளமாய் பணம் கிடைப்பதாயிருந்தால் மலேயாவுக்கென்ன, ஜப்பானுக்குக் கூட நம் நக்ஷத்திரங்கள் சென்று நடிக்க பின் வாங்க மாட்டார்கள். ஆனால் இந்த முயற்சி வெற்றிகரமாய் இராது. ஏனெனில் தமிழ்ப் படங்களைத் தயாரிப்பதற்கு தமிழ் நாட்டில் அநேக வசதிகள் இருக்கின்றன. ஆதலால் மலேயாவில் தயாரிக்கக் கூடிய தமிழ்ப் படங்கள் தமிழ் நாட்டில் தயாரிக்கப்படும் தமிழ்ப் படங்களுடன் போட்டி போட முடியாது.

தையல் ஊசி (மூவார், மலேயா)

குண்டூசியாரே! தங்கள் மூளையை பார்சல் செய்து அனுப்பி வையும். நான் அதைப் பெற்றுக் கொண்டு என் மூளையை ரிஜிஸ்டர் செய்து அனுப்புகிறேன்.

என் மூளையை அனுப்புவது கிடக்கட்டும். இந்தக் கடிதத்தை நீர் எழுதியதற்கு முன்பே உம் மூளையைத் தனியாய் எடுத்து விட்டிருப்பீர் என்று நான் ஊகிக்கிறேன்! சரிதானே?

எஸ். பார்த்தசாரதி
(கும்பகோணம்)

தங்கள் வாசகர்கள் உங்களிடம், "சின்னப்பா எந்தக் கடையில் அரிசி வாங்குகிறார்?" "டி. ஆர் ராஜகுமாரி என்னை மணந்து கொள்ளுவாரா?" என்றெல்லாம் அர்த்தமற்ற கேள்விகளைக் கேட்கிறார்கள். அவைகளுக்கு நீங்களும் பதில் அளிக்கிறீர்களே?

குண்டூசிப் பகுதியின் முக்கிய நோக்கம் பொழுது போக்காகும். ஆதலால் வேடிக்கைக்காக கேட்கப்படும் கேள்விகளைக் கண்டு நீர் ஏன் கோபிக்க வேண்

"கிருஷ்ண பக்தி"யில் பி. யு. சின்னப்பா, டி. பாலசுப்ரமண்யம்.

வெளியூர்களில் வெளிவந்துள்ள "ராஜ முக்தி" படத்தில் ஒரு காட்சி.

டும்? ஆனால் வாசகர்கள் இதை விட சாமர்த்தியம் மிகுந்த கேள்விகளைக் கேட்க வேண்டும் என்பதே என் விருப்பமாகும்.

க. பழனிமுத்து (பழைய வத்தலகுண்டு)

என். எஸ். கிருஷ்ணன் தற்போது எந்தப் படங்களில் நடித்துக் கொண்டிருக்கிறார்?

: தம் சொந்தப் படமான "நல்ல தம்பி" யிலும், கிருஷ்ணா பிக்சர்ஸின் "கிருஷ்ண பக்தி" யிலும் அவர் இப்பொழுது நடித்து வருகிறார்.

எம். செல்லம்

சந்திர காந்தாவில் நடித்த ஆயிரம் முகம் ராமகுமார் இப்பொழுது படங்களில் நடிக்கிறாரா?

: இந்த ஆயிரம் முகம் ராம் குமார் 'ஆயிரம் பொய்களைச் சொல்லி' ஒரு "பால்ய விவாஹ"த்தை முடித்து வைத்தார். அதன் பின்னர் இதைத் தயாரித்த கம்பெனியோ ஒரு பால்ய விதவையின் கதியை அடைந்தது. அதன் காரணமாக இந்த ஆயிரம் முகத்தவர் பட்ட கஷ்டங்களை அந்த ஆயிரம் நாவு படைத்த ஆதிசேஷனால் தான் விவரிக்க இயலும். அதன் பின் அவருடைய ஆயிரம் முகத்தில் ஒரு முகம் கூட சினிமா உலகில் தோன்றவில்லை!

எஸ். எஸ். மணி (நாகர்கோவில்)

குண்டூசியாரே! நடிகர் நடிகைகளின் திறமைகளைப் பற்றியும், சினிமா உலக விஷயங்களில் நல்லது கெட்டவைகளைப் பாகுபாடு படுத்தியும் அழகாக எழுதும் நீர் ஏன் ஒரு சினிமா டைரெக்டராகக் கூடாது?

சினிமா பற்றிய விஷய ஞானம் இருந்தால் மட்டுமே ஒருவர் சிறந்த டைரெக்டராகி விட முடியாது. சகல ஊழியர்களையும் அரவணைத்து சாதுரியமாக வேலை வாங்கும் திறமை டைரெக்டருக்கு இன்றியமையாத யோக்கியதாம்சம் ஆகும். இதைத் தெரிந்து கொள்ளாத சில அதிபர்கள் கூட டைரெக்ஷனில் ஈடுபட்டு தோல்வியுற்றுள்ளனர். என்னைப் பொறுத்த வரையில் எனக்கு டைரெக்டராக வேண்டுமென்ற ஆசையே கிடையாது. காரணம், இந்த விஷயத்தில் எனக்கு அதிக 'விஷய ஞானம்' இருப்பதால் தான்!

"விஸ்வாமித்திரன்" (பண்ருட்டி)

தாங்கள் எந்த சினிமா நடிகையை யாவது காதலித்ததுண்டா?

இல்லை. படத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் என்னளவுக்கு எங்கே ஐயா, விட்டு வைக்கிறார்கள்!

ஆர். சுப்பையா (சிவகெங்கை)

நான் எந்தப் புதுப் படம் ரிலீஸ் ஆனாலும் முதலில் கனவிலேயே பார்த்து விடுவது வழக்கம்.

'எந்தப் புதுப் படமானாலும் அதற்கு ஏராளமான வசூல் ஆகும்' என்று அதன் முதலாளி கனவு காணும் போது, நீர் அப் படங்களைப் பார்த்து விட்டதாகவே கனவு காண்பது ஆச்சரியப் படத்தக்க தல்லவே!

ஆனந்தன்

(களர் கோட், திருவாங்கூர்)

சின்னப்பா பெயரில் மட்டுமன்றி வாழ்க்கையிலும் அப்பா ஆகியிருக்கிறாரா?

இல்லை, அப்பா!

எம். தியாகராஜன் (ஆரணி)

ஸி. டி. ராஜகாந்தம் வாயில் எதையோ அடக்கி வைத்துக் கொண்டிருக்கிறாப் போல் காண்கிறதே. அது என்ன? ஏன்?

அதுவா, ஒரு வேளை மட மடவென்று பேசித் தள்ளுவதற்கான வசனங்களாயிருக்கும்!

எம். நடராஜன் (மயிலாடி)

சுந்தரிபாயின் வாழ்க்கை வரலாற்றை இந்த மாத ஊசியில் எழுத முடியுமா?

இந்தக் கேள்வியை கொத்தமங்கலம் சுப்புவிடம் கேட்டிருந்தீரானால் அவர் இந்த வரலாறுகளை பாட்டாகவே எழுதித் தள்ளியிருப்பாரே, ஸ்வாமி!

பி. முகம்மது யூசுப் (கொழும்பு)

ஹரிதாஸிற்குப் பிறகு பி. பி. ரங்காச்சாரி வேறு எந்தப் படத்தில் நடித்திருக்கிறார்? தற்போது எந்தப் படத்தில் நடித்துவருகிறார்?

"ஹரிதாஸி"ற்குப் பிறகு ரங்காச்சாரி "மதனமாலா"வில் திறம் பட நடித்திருக்கிறார். ஆனால் அவர் தற்போது எந்தப் படத்திலும் நடிப்பதாகத் தெரியவில்லை.

வி. ஈசன் (மதுரை)

வேதாள உலகத்தில் நடைபெறும் "பவளக் கொடி" இசை நாடகத்தில் கிருஷ்ணனாகத் தோன்றுபவர் லலிதாவா? பத்மினியா?

இந்த சகோதரிகளில் வழக்கமாய் கிருஷ்ணனாகத் தோன்றிவருபவர் பத்மினிதான்.

பி. என். எஸ். மணி (மதுரை)

மதுரை சித்ரகலா ஸ்டுடியோ இப்பொழுது நடந்து வருகிறதா?

உங்கள் ஊர் விஷயத்தைக் கூட என்னிடம் கேட்டுத்தானா தெரிந்து கொள்ள வேண்டும்? மூடப் பட்டு விட்ட இந்த ஸ்டுடியோவை, கிரீன் பிக்சர்ஸ் கம்பெனியை ஆரம்பித்து மூடிவைத்த சர்மா

இப்பொழுது சென்னையில் வெற்றிகரமாய் ஓடிக் கொண்டிருக்கும் "வேதாள உலக"த்தில் மஹாலிங்கம், மங்களம்.

எடுத்துக் கொண்டு நடத்தப் போவதாக ஒரு செய்தி எட்டுகிறது.

ஆர். ராமையன் (மேல் மூங்கிலடி)

எம். கே. தியாகராஜ பாகவதர், ஹொன்னப்ப பாகவதர், டி. ஆர். மஹாலிங்கம், பி. எஸ். கோவிந்தன், எம். எம். மாரியப்பா, பி. யு. சின்னப்பா இவர்களுள் யாருடைய சங்கீதத்திற்கு முதல் ஸ்தானம் அளிக்கலாம்?

உலகம் பல விதம். ருசியும் பல விதம். உமக்கு யாருடைய பாட்டு அதிகமாகப் பிடிக்கிறதோ அவருக்கு அளியுமே முதல் ஸ்தானத்தை.

ஏ. தாண்டவம் (ஆர்விப்பட்டி)

கே. எல். வி. வஸந்தா தற்போது எந்தப் படத்தில் நடிக்கிறார்?

அவர் கொஞ்சகாலமாய் சினிமா உலகிற்கு ஓய்வு அளித்திருக்கிறார்!

கே. வெங்கடாசலம் (தாமரைகுளம்)

தமிழ்ப் பட உலகில் அழகில் சிறந்த ஆண் நடிகர் யார்?

வெகு அழகு! நம் ஆண் நடிகர்களுக்கு அழகு இருப்பதாகக் கூட நீர் சொல்கிறீரா?

ஜி. ஆர். எஸ். ஆசாரி (மருதானை)

டி. ஆர். ராஜகுமாரிக்கு விவாஹம் ஆனால் தெரிவிக்கவும். என்னிடம் உள்ள ஓர் ஓடாத கெடிகாரத்தை அவருக்கு சந்தோஷமாகப் பரிசளிக்க விரும்புகிறேன்.

நீர் மட்டுமென்ன? அவர்கூட சந்தோஷப்படுவார் இந்தக் கெடிகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு. ஏனென்றால் ஓடாத கெடிகாரத்திற்கு அடிக்கடி ரிப்பேர் செலவு ஏற்படாதல்லவா!

எம். ஆர். சுப்பு (நாகர் கோவில்)

பி. ஏ. பெரிய நாயகிக்கு விவாஹம் ஆகி விட்டதா?

"வீட்டைக் கட்டிப் பார், கலியாணத்தைச் செய்து பார்" என்பது பழமொழி. இப்பொழுது அவரது தயார் புதிதாக ஒரு வீட்டைக் கட்டிப்பார்த்திருக்கிறார். அடுத்தாற்போல் கலியாணத்தையும் செய்து பார்த்து விடுகிறார், என்ன பிரமாதம்!"

மோகினி

திரைக் கதை

மன்னன் சந்தியபாலனுக்கு, மோஹினி என்ருெரு மகள், மோஹன் என்ருெரு மகன். மன்னனுக்கு அதிசயப் பொருள்களின் மீது அலாதியான ஒரு மோஹம். மோஹினி நாட்டின் படை வீரன் விஜய குமாரைக் காதலிக்கிருள்.

ஆண்டுதோறும் அரசனின் பிறந்த தின விழா ஆடம்பரமாக நடக்கும். அது போது அவருக்கு அதிசயப் பொருள்களை பரிசளிப்பதும், பதிலுக்கு அவர் தகுதியான சன்மானங்களை வழங்குவதும் வாடிக்கை. இந்த வருஷ விழாவின் போது கொண்டுவரப் பட்டது உலகத்தின் மிகப் பெரிய அதிசயமான விண்ணிலே பறக்கும் ஒரு மண் குதிரை. அதன் சிருஷ்டி கர்த்தா காளிநாதன் நல்ல மேதை. ஆனுல் நற்குணங்கள் இல்லாதவன்!

'இளவரசி மோஹினியை, அதற்கு முன் அவன் பார்த்திருந்ததால் தன் குதிரைக்கு சன்மானமாக அரசனிடம் அவளையே கேட்கிருன்." காளிநாதன் குதிரைக்குக் கூறிய விலையைக் கேட்டதும் கட்டழகி மோஹினி மூர்ச்சித்து விடுகிருள்.

காதலர் செய்த புண்ணியம் என்றுதான் நினைக்க வேண்டும். வெளியூர் சென்றிருந்த இளவரசன் மோஹன் திரும்பிவிட்டான். தங்கையின் காதலை அவன் ஆசிர்வதித்து ஆமோதிப்பவன். அதற்கு இடையூருக நின்ற பறக்கும் குதிரையையும், அதன் கர்த்தா காளிநாதனையும் ஒழித்துவிடுவது என்ற முடிவிற்கு வந்தான்.

அடுத்த தினம் சபை கூடியபோது, குதிரையைத் தானே பரிக்ஷிக்க வேணுமென்று கூறி குதிரை மீது ஏறிப் பறந்தான் மோஹன். அஸ்வத்தை அதிக தூரம் கொண்டு போய் சுக்கு நூருக நொறுக்கி விடுவது என்பது அவனது திட்டம். ஆனுல் புறப்படுமுன் ஒரு விஷயத்தை தெரிந்து கொள்ள மறந்து

ஜானகி குதிரை சவாரி செய்கிருர்

புது மாதிரியான வேஷங்களில் தோன்றுகிறார்கள் பாலையாவும், மாதுரி தேவியும்.

விட்டான் மோஹன். காளிநாதனும் வேண்டுமென்றே அவனிடம் அதைச் சொல்லவில்லை.

அரண்மனையிலே காத்திருந்து பார்த்தார்கள். மோஹன் திரும்பவில்லை. மகன் திரும்பவில்லையே என்று காவலனுக்குக் கலக்கம். காளிநாதனுக்குக் களிப்பு, ஆத்திரக்காரன் எங்கேயாவது கற்பாறையிலே மோதி அழிந்து போவானென்று அவன் எண்ணினான். காலதாமதமானாலும் கட்டாயம் மோஹன் வந்து விடுவானென்று காதலர்கள் எதிர்பார்க்கின்றனர்.

மோஹனை அணுகி வந்த அபாயம் தெய்வாதீனமாக விலகிற்று. மனோஹரமான ஒரு மாளிகையின் உப்பரிகையிலே அவனைக் கொண்டுவந்து சேர்த்தது குதிரை. உள்ளிருந்து வந்த மதுரகீதம் கேட்டு, மோஹன் கானத்தின் திசை நோக்கிச் சென்றான். ஒரு விநாடி சந்தேகித்தான். தான் காண்பது மனதை மயக்கும் ஸ்வர்க்கமோ என்று. அலங்காரமான மாளிகை, தேவமாதர்கள் போன்ற தோகையர். பிறகுதான் புரிந்தது அங்கே நடம் புரிந்தது அந்நாட்டு மன்னனின் மகள் குமாரியும் அவள் தோழிகளுமென்று.

மோஹனும், குமாரியும் ஒருவரையொருவர் பார்த்த மறுகணம் ஒருவர் உள்ளத்தை மற்றவர் பறித்துக் கொண்டனர். காதலிலே கனிந்து கனிரசமான வார்த்தைகள் பேசிக் கொண்டிருக்கும் போது, குமாரியின் தந்தை அங்கு வருகிறான். ஆடவர்களையே தன் மகள் பார்க்கலாகாதென்ற ஆணித்தரமான ஏற்பாடுகள் செய்திருந்த அவன் குமாரி இருந்த நிலையைக் கண்டு குழறினான். அப்பப்பா! அங்கிருந்து தப்பிப்போவது அரும் பாடாகி விட்டது மோஹனுக்கு.

எதிர்பார்த்ததற்குமேல் நாட்கள் ஆகி விட்டதனால் மோஹினிக்கும், விஜயனுக்கும் மோஹனைப்பற்றி திகில் ஏற்பட்டது. தங்களுடைய காதலுக்காகவே மோஹன் அபாயத்தை ஏற்றுக் கொண்டான் என்பதை நினைக்க நினைக்க அவனைத் தேடிப் போக வேண்டியது தனது தவிர்க்க முடியாத கடமை என்பதை உணர்ந்த விஜயன், மோஹனோடு அல்லாமல் மீண்டும் நாடு திரும்புவதில்லையென்ற சங்கல்பத்தோடு புறப்பட்டு விட்டான்.

சற்றுத் தாமதித்திருந்தால், விஜயன் புறப்பட வேண்டிய அவசியமே இருந்திருக்காது. மோஹன் திரும்பி விட்டான். "பறக்கும் குதிரையல்ல காளிநாதனின் சிருஷ்டி; அது ராஜ குடும்பத்திற்கு படு

நம்பியாரும்; பாக்கியமும் ஹாஸ்ய பாகத்தில் நடிக்கின்றனர்.

மோசம் விளைவிக்க அவன் செய்த ஏற்பாடு" என்று அரசரிடம் சொல்லி, காளிநாதனை நாடு கடத்த வழிசெய்கிறுன் மோஹன்.

குதிரை நொறுக்கப் படவில்லை யென்பதையும், குதிரையின் உதவியால் குமாரியைக் கண்டதையும், குதிரையை ஊருக்கடுத்த மலைக் கோவிலில் யாருக்கும் தெரியாமல் ஒளித்து வைத்திருப்பதையும் ரகசியமாகத் தன் தங்கையிடம் சொன்னதை மறைவிலிருந்து கேட்டுவிட்டாள் காளியம்மா. காளியம்மா ஒரு அரண்மனைத் தோழி. ஜம்புவின் மேல் அவளுக்கு அபாரமான காதல். ஜம்பு காளிநாதனின் நம்பிக்கை மிகுந்த சிஷ்யன். 'குருநாதா, குருநாதா' என்று ஜம்பு காளிநாதனேடு சுற்றுவது அவளுக்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லை. ஜம்பு தன் குருவுடன் நாட்டை விட்டு வெளியேற உறுதி கொண்டு விட்டதால் அவனைத் தடுக்கும் எண்ணத்தோடு குதிரையைப் பற்றி தனக்குத் தெரிந்த ரகசியத்தை அவனிடம் சொல்ல எண்ணிஞள்.

இராப் பொழுதினிலே மோஹனுக்குத் தூக்கம் வரவில்லை. குமாரியைப் பற்றி ஓயாத நினைவுகள் வந்தன. பறக்கும் குதிரையின் உதவி கொண்டு, யாரும் அறியாமல் மீண்டும் அவளைப் பார்த்துத் திரும்புவதென்று புறப்பட்டான். குமாரியைக் கண்டதும், 'பார்த்துத் திரும்புவதென்ற' அவன் எண்ணம் 'அவளோடு பறந்து திரும்புவதென்று' மாறவே தகுந்த காரணம் சொல்லி அவளுடன் தன் தேசம் வந்தான். வந்தவன் அதே மலைக் கோவிலில் குதிரையையும், குமாரியையும் விட்டு விட்டு அரண்மனைக்குப் போஞன், குமாரிக்கு பிரம்மாண்டமான வரவேற்பு அளிக்க வேண்டுமென்ற எண்ணத்தோடு.

குதிரை மலைக் கோயிலில் இருப்பது காளியம்மாள் மூலம் தெரிந்திருக்கவே, நாடு கடத்தப்பட்ட ஜம்புவும், காளிநாதனும் அங்கே வர, குதிரையுடன் குமாரியும் இருப்பது கண்டார்கள். தந்திரமாக அவளிடம் வார்த்தையாடி அவளை அழைத்துக் கொண்டு பறந்து விட்டான் காளிநாதன். ஜம்புவும் கூடவே போய் விட்டான்.

மோஹன் மலைக் கோயிலுக்கு வந்தான் மன்னனேடு, மோஹினியோடு, கல்யாண வைபோவத்தோடு குமாரியுமில்லை, குதிரையுமில்லை. மன மிடிந்து போஞன். குமாரியில்லாமல் வீடு திரும்புவதில்லை என்று ஒரு தீர்மானம் செய்து கொண்டு தங்கை மோஹினியையும்

மாதுரி தேவி நடனம் ஆடுகிறுர்.

காளியம்மாளையும் அழைத்துக் கொண்டு புறப்பட்டு விட்டான். மோஹனைத் தேடச் சென்ற விஜயகுமார் கள்ளர் கூட்டம் ஒன்றில் சிக்கிஞன்.

முற்றிலும் அன்னியமான ஒரு நாட்டிலே, குமாரியுடனும், ஜம்புவுடனும் பறக்கும் குதிரையிலே எந்த விஞடியில் காளிநாதன் வந்து இறங்கிஞனே தெரியவில்லை அது முதல் அவனுக்கு ஆரம்பமாயிற்று அளவில்லாத அவஸ்தைகள். அந்நாட்டு மன்னன் ஜெயசிங்கிடம் அவனும், குமாரியும் பிடித்துச் செல்லப் பட்டார்கள். நல்ல வேளையாக ஜம்பு தப்பித்துக் கொண்டான். வேந்தன் முன் விசித்திரமான விசாரணை நடந்தது-விளைவு. காளிநாதன் காராக்கிரகத்திலும், குமாரி அரண்மனை அந்தப் புரத்திலும் பாதுகாப்பில் வைக்கப் பட்டனர். அவளைத் தன் ஆசை நாயகியாக்க எண்ணியிருப்பதை ஜெயசிங் குமாரியிடம் வெளியிடுகிறுன். அவ்வளவு தான், பைத்தியம் பிடித்து விடுகிறது அவளுக்கு.

ஜம்புவுக்கு குரு பக்திதானே வாழ்க்கை லட்சியம். காளிநாதன் சிறைப் பட்டதிலிருந்து, அவனை விடுவிக்க வேண்டுமென்று ஒரே ஏக்கம். அதற்குத் தேவையாக இருந்தது ஆயிரம் பொன் நாணயங்கள். எங்கே போவான், பாவம்.

'நான் சொல்வதைக் கேள்!' என்கிறார் போலும் பாலையா மாதுரி தேவியிடம்.

அந்த சமயத்தில்தான் அங்கு வந்து சேர்ந்தார்கள் மோஹனும், மோஹினியும், காளிம்மாளும். அவர்களைக் கண்டான் ஜம்பு. காளியம்மாளிடம் குதித்தோட வேண்டுமென்று துடித்தது அவன் மனம். ஆனால் நெருங்க அவனுக்கு தைரியமில்லை. குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கத்தானே செய்யும். மாறு வேடத்தில் மறைந்து கொண்டான். மறுபடியும் அவர்களை வந்து பார்த்தான். குமாரியும், பறக்கும் குதிரையும் அரண்மனையிலே இருக்கும் விபரத்தை மோஹினியிடம் சொன்னது தான் தாமதம் இளவரசனுக்கு இழந்த உயிர் திரும்பியது, போலாயிற்று. மோஹினிக்கு ஏமாற்றம் விஜயனைப் பற்றி ஒன்றும் தெரியவில்லையென்று.

இவர்களுக்காக உணவுப் பொருள் வாங்கிவரப் போன ஜம்புவிற்கு இரண்டு பிரதானமான பிரச்னைகள். குருவை விடுவிப்பது எப்படி? காளியைக் கண் குளிரக் கண்டு அவளுடன் மனம் குளிரப் பேசுவது எப்படி? சிந்தித்துக் கொண்டே சிறிது தூரம் போனவன் காதிலே கேட்டது இப்படி ஒரு பேச்சு. "ஆயிரம் பொன்கள் தானே வாங்கிக் கொள்ளுங்கள்" என்று. சப்தம் வந்த இடத்தை உற்றுக் கவனித்தான்... ஆயிரம் பொன்னுக்காக ஒரு பெண்ணை விற்கும் காக்ஷி அவன் கண்ணிலே பட்டது. உடனே அவனது பேய் மூளை வேலை செய்ய ஆரம்பித்து விட்டது. அதன் விளைவு, மோஹன் அறியாமல், மோஹினியை விற்றுவிடுவது, குருவை விடுதலை செய்து விடுவது, பிறகு, காளியம்மாளுடன் கண்ணுக்கெட்டாத ஒரு திசைக்குப் போய் விடுவது என்ற முடிவிற்கு வந்தான்.

ஜம்பு திரும்பியதும் முதல் வேலையாக மோஹனை அரண்மனைக்கு அனுப்பிவைத்தான். மோஹினியும், காளியம்மாளும் நன்றாகத் தூங்கும் வேளை பார்த்து, காளியை எழுப்பி தனியாக அழைத்துப் போய் தன் திட்டங்களை வெளியிடுகிறான். எஜமானத் துரோகம் செய்ய காளி கண்டிப்பாக மறுத்துவிடவே அவளை ஒரு கம்பத்திலே கட்டி விட்டு மோஹினி

சொன்னதைக் கேட்டதன் பலன் சொகுசாய் உட்கார்ந்திருக்கிறார், பாலையாவுடன் மாதுரிதேவி.

யைக் கொண்டு போய் ஆயிரம் பொன்களுக்கு மாற்றி விடுகிறான். மறுவினாடி தன் குருவையும் விடுதலை செய்கிறான்.

அரண்மனைக்குச் சென்ற மோஹன், பக்கிரி வேஷம் பூண்டு, அரசனை ஏமாற்றி, குமாரியின் பைத்தியம் நீக்க, அவளையும், அவள் பைத்தியத்திற்குக் காரணமாயிருந்த பறக்கும் குதிரையையும் வைத்து பெரிய பூஜை ஒன்றிற்கு ஏற்பாடு செய்கிறான். பூஜையின் போது ஒரு புகை மண்டலம் எழுப்பி, அதன் மறைவிலே குமாரியுடன் தப்பி விடுவதென்பது அவன் திட்டம்.

அவன் நினைத்தது நடக்க வில்லை. வெறி பிடித்தவன் போல மாறு வேடத்தில் வெளியே சுற்றிக் கொண்டிருந்த காளிநாதன் அந்த ஏற்பாட்டிற்கு யமனாக மாறுகிறான்.

எந்தக் காளிநாதன் அவனுடைய எண்ணங்களுக்கு எதிரியாக விளங்கினானே அந்தக் காளிநாதன் ஜெயசிங் அரண்மனையிலே சர்வாதிகாரியானான்.

குமாரி மறுபடியும் அரண்மனையில் அடைக்கப்பட்டாள். மோஹன் குற்றவாளியாக கைது செய்யப்பட்டான். அரண்மனையில் காளிநாதன், மோஹினியையும், தன்னுடைய பறக்கும் குதிரையையும் பார்த்துக் கொண்டதும் சந்தோஷத்திற்கு அளவேயில்லை.

விஜயகுமாரும் காளியம்மாவும், மோஹன், குமாரி, மோஹினி இவர்கள் மூவரையும் விடுவிப்பதற்காக வேண்டிய ஏற்பாடுகள் செய்து வருகின்றனர். ஜெயசிங் குமாரியை மணப்பதற்காக வேண்டி தீர்மானமாய் நாள் குறிப்பிட்டுவிட்டான். இம்முகூர்த்த வேளையில்தான் இம்மூவர்களையும் மீட்டுக் கொள்ள வேண்டுமென்று காளியம்மா குமாரிக்கு ஆடை ஆபரணங்கள் அணிவிப்பவளாகவும் மற்றும் இிலர் சமையல்காரர்களாகவும், பலவித ஏற்பாடுகள் செய்தனர் முகூர்த்த வேளையில் காளியம்மா குமாரிக்கும் மோஹினிக்கும் எச்சரிக்கைசெய்விப்பதற்காகப் போகும் சமயத்தில் ஜம்புவைச் சந்தித்தாள். காளியம்மாவை காதலிக்க வேண்டுமென்ற ஆசையினால் ஜம்பு குருவுக்கு துரோகம் செய்தான். அதுமுதல் ஜம்பு காளிநாதனுக்கு விரோதியானான். கல்யாண காலத்தில் மோஹன், விஜயகுமார் இவர்கள் சண்டை செய்ய தக்க சமயம் பார்த்துக் கொண்டிருந்தார்கள். காளிநாதன் விவரம் அறிந்து மோஹினி இருக்குமிடம் சென்று அவளைத் தன் குதிரையின் மேல் ஏற்றி பறந்து செல்ல முயற்சித்தான். ஆனால் அவனுடைய எண்ணம் பலிதமாகவில்லை, அவனுடைய சிஷ்யன் ஜம்புவே பறக்க விடாமல் செய்தான். விஜயகுமார் காளிநாதனைக் கொன்றான். பிறகு விஜயகுமாரும் மோஹினியும் சந்தித்தார்கள். பிறகு ஜெயசிங் மோஹனை மன்னிப்புக் கேட்டுக் கொண்டான்: ஜம்புவும் காளியம்மாவும் பழைய சம்பவங்களை மறந்து ஒருவரை ஒருவர் நேசித்தனர். அரசன் சத்தியபாலனுக்கு அவன் விரும்பிய குதிரை சன்மானமாகக் கொடுக்கப்பட்டது.

ஜூபிடரின் தீபாவளி வெளியீடான "மோஹினி"யில் பாலையாவின் கத்திச் சண்டை பலே ஜோராய் இருக்குமாம்.

134111

முதல் ஷூட்டிங்

"ஐரா"

நான் சிறியவளா யிருந்தபொழுது சினிமாவில் சேர்ந்து நானும் ஒரு நடிகை ஆகவேண்டும், திறம்பட நடித்து 'நல்ல நடிகை' என்ற பெய ரெடுக்கவேண்டும் என்று பலநாட்கள் எண்ணியதுண்டு. ஒரு நாள் நான் "பாலயோகினி" படத்தைப் பார்த் தேன். அப்பொழுது பேபி சரோஜா விற்கும் எனக்கும் ஏறக்குறைய ஒரே வயதிருக்கும். "எவ்வளவு அழகாகவும், இயற்கையாகவும் அவள் நடிக்கிறாள். எவ்வளவு சுட்டியா யிருக்கிறாள். அதைப்போல் நாமும் ஏன் நடித்துப் புகழ் பெறக்கூடாது. முடியாத காரிய மொன்றுமில்லை. 'முயற்சியுடையோர் இகழ்ச்சி யடையார்' என்று பெரி யார் சொன்ன வாக்கியம் உண்மை யாயிராவிட்டால் இப்பொழுது முன் னணி வகிக்கும் நடிக, நடிகையரெல் லாம் உழைக்காமல், முயற்சிக்காமல் புகழுடைந்தவர்களா? (அதிர்ஷ்டத்தி னால என்று நீங்கள் முணுமுணுப்பது எனக்குக் கேட்கிறது!) ஆனால் பகவா னின்பேரில் பாரத்தைப் போட்டுவிட்டு நாம் அதிர்ஷ்டசாலியா யிருந்தால், அதிர்ஷ்டம் நம்மைத் தேடிக்கொண்டு வரட்டுமே என்று பேசாது இருந்து விட்டால் போதுமா?' என்றெல்லாம் எண்ணினேன். ஒரு நாள் என் தாயை நான் சினிமாவில் சேருவதைப்பற்றி கேட்டேவிட்டேன்.

ஆனால் ஒரு நொடியில் என் மனக் கோட்டையைத் தகர்த்தெறிந்து விட்டாள் என் தாய். சினிமாவில் சேரும் பாக்கியம் எனக்குக் கிட்டாது என்று நினைத்தேன். போதாக் குறைக்கு என் படிப்பில் முழுக் கவனம் செலுத்துமாறு என் பெற்றோர்கள் வற்புறுத்தலாயினர். "குடும்பப் பெண்ணுக்கு என்ன புத்தி இப்படி மாறிவருகிறது? இப்பொழுது சிறியவள். நாளைக்கு

"இது நிஜமா" படத்தில் கதாநாயகியாக நடித்த சரோஜினி (ஐராவதி) இந்தக் கட்டுரையில் தம் முதல் நாள் ஷூட்டிங் அநுபவத்தை அழகாக விவரிக்கிறார் . . .

இதையே பிடியாய்ப் பிடித்தால் நான் என்ன செய்வேன்?" என்று என் தாய் கூறி, அவளைப் பார்க்கவந்த சில பெண்களிடம் அவள் புக்ககத்தின் பெருமையையும், பிறந்தகத்தின் பெருமையையும் சொல்லிக் கொண்டிருப்பாள்.

பள்ளிக்கூட நாட்களில் நான் ஏறக் குறைய எல்லா நாடகங்களிலும் பங்கெடுத்துக் கொண்டு சிறிது திருப்தி அடைந்தேன். குடும்பப் பெண்ணாய் இருந்தாலென்ன? அதற்காகக் கலைமேவிருக்கும் ஆசையைப் பூர்த்தி செய்யக்கூடாதென்ற அர்த்தமா? இருக்கட்டும், இன்றில்லாவிட்டாலும் என்றைக்காவது ஒரு நாள், நான் சினிமாவில் சேர்ந்து நடிக்காமல் இருக்கப் போவதில்லைஎன்று கங்கணம் கட்டிக் கொண்டேன்.

• • •

ஒரு நாள் பின்வருமாறு எழுதியிருந்த ஒரு விளம்பரத்தைத் தற்செயலாகப் பார்த்தேன். 'ஒரு படத்தில் நாட்டியத்திற்காகப் பெண்கள் தேவை. ஒரு குறிப்பிட்ட நேரத்தில் தேவைக்குத் தகுந்த உயரம், வயதுடையவர்கள் ஸ்டுடியோவிற்கு வரவேண்டியது' என்று குறிப்பிட்டிருந்தது. எப்படியாவது சினிமா உலகில் பிரவேசிக்க வேண்டுமென்று கட்டின மனக் கோட்டை வீண் போகவில்லை என்று எண்ணிக் கொண்டேன். இந்த விளம்பரத்தை ஒரு சாக்காக வைத்துக் கொண்டு, ஸ்டுடியோவையும், நடிக, நடிகையரையும் ஒரு முறை பார்த்தாவது ஆசையைத் தீர்த்துக் கொள்ளுவது என்று தீர்மானித்தேன். ஒருவாறு தாயின் சம்மதத்துடன் ஸ்டுடியோவிற்குள் புகுந்தும் விட்டேன்.

என்னை, ஆனந்தம், பிரமிப்பு, வெட்கம், பயம் முதலியன ஒருங்கே சேர்ந்து வாட்ட ஆரம்பித்தன. அங்கிருந்தவர்களில் சிலர் நேரிடையாகவும், மறைமுகமாகவும் எங்களைச் சுட்டிக்காட்டி ஏதோ பேசிக்கொண்டிருந்தனர். சிலர் கூர்ந்து கவனித்துக் கொண்டிருக்கும்பொழுது ஒருவர் எங்களைக் கூப்பிட்டு குறிப்பிட்ட இடத்தில் அமரும்படி சொன்னார். மனம் பயத்தினால் படபடத்துக் கொண்டிருந்தது. மின்சார விசிறி வந்தவர்களுக்கு உபசாரம் செய்யும் பாவனையில் தன் மூன்று கரங்களையும் வேகமாகச் சுற்றி குளிர்ந்த காற்றை வீசிய போதிலும் வியர்வை அரும்பரும்பாக வரத்தான் செய்தது. சில நிமிடங்களுக்குப் பிறகு ஒரு கர்ஜனை கேட்டது. டைரெக்டர் வந்துவிட்டார் என்று, முன்பு எங்களை உபசரித்தவர் சொன்னார்.

பிறகு டைரெக்டர் அந்த அறையில் உட்கார்ந்திருந்த பத்துப் பதினைந்து பெண்களையும் பார்த்தார்.

"நீ எழுந்து இங்கு வா" என்று என்னைச் சுட்டிக் காட்டினார்.

"சார், நான் நடிக்க வரவில்லை. ஸ்டுடியோவைப் பார்க்கத்தான் வந்தேன்" என்று குளறினேன். அவர் விடவில்லை.

"ஆயிரம் தலைவாங்கி அபூர்வ சிந்தாமணி"யில் அபாரப் பெயர் வாங்கிய வாலக்ஷ்மியை அடுத்தபடியாக "தவஜீவன"த்தில் காணலாம்.

"பதில்."

"உனக்குப் பாடத் தெரியுமா?"

"தெரியும், ஸார்."

"ஆடத் தெரியுமா?"

"தெரியாது, ஸார்"

"உயரமென்ன?"

"பதில்"

"வயதென்ன?"

"பதில்"

"இதுதான் முதல் படமா?"

"முதல் படமென்று தான் சொல்ல வேண்டும்."

"விலாஸமென்ன?"

அதற்கும் பதிலளித்து விட்டேன்.

மிகுதியிருந்தவர்களில் சிலரைத் தேர்ந்தெடுத்து அவர்களையும், என்னைக் கேட்டதுபோலவே கேட்டு விலாஸத்தைத்தெரிந்து கொண்டார். ஒரு பாட்டு பாடு பார்க்கலாம் என்று என்னைக் கேட்டார். பாடி முடித்ததும் எல்லோரும் (தேர்ந்தெடுக்கப் பட்டவர்கள்) சென்று நாளை குறிப்பிட்ட நேரத்தில் இங்கு இருக்க வேண்டும் என்று டைரெக்டருக்குரிய அதிகாரத் தொனியில் சொன்னார்.

"பயப்படாதேம்மா உன் பெயரென்ன?"

"இல்லே ஸார், நிஜம்மா......"

"உன் பேர் 'இல்லேயா'?" என்று சிரித்தார்.

அதற்குள் அங்கு வந்த ஒருவர் "டைரெக்டர் ஸார்! ஒரு காரியமாய்ப் பேச வந்தேன்" என்றார்! "இப்பொழுது எனக்கு ஒழிவில்லே" என்று சொல்லி அவரை அனுப்பி விட்டு என்னைப் பார்த்து "உன் பெயரென்ன?" என்று திருப்பவும் கேட்டார்.

மானேஜரிடம் டைரெக்டர் ஸார் பேசிக்கொண்டிருந்தார். "இவளுக்கு ஒரு பாட்டும், சம்பாஷணையும் கொடுக்கப் போகிறீராமே? என்ன இருந்தாலும் படித்த பெண் என்று உபசாரம் பலமாயிருக்கிறது. சும்மா ஸ்டுடியோ பார்க்க வந்த பெண்ணுக்கு நல்ல சான்ஸ், அதிர்ஷ்டசாலி, ஸார்" என்று மானேஜர் கூறினார்.

அன்று இரவு எனக்குத் தூக்கமே வரவில்லை. நாளைய தினம் கையொப்பமிடவேண்டும். நடிக்க ஒத்துக் கொள்வதா, வேண்டாமா? அத்தனை பெண்களில் எனக்கு மாத்திரம் அவ்வளவு சலுகை காட்டியதின் மர்மமென்ன? சினிமா என்றால் எவ்வளவு கெட்ட பேர்? எல்லோரும் சொல்வது போல் இதில் சூழ்ச்சி ஏதாவது இருக்குமோ என்று நினைத்தேன். விதியின் படி நடக்கட்டும் என்றால் மனச்சாட்சி இடமளிக்கவில்லை.

எடுத்த எடுப்பிலேயே, "ஒத்திகைக்குத் தவறாமல் வரவேண்டும். பாட்டு நான்கு நாட்களில் ரிகார்டாகி விட வேண்டும். அப்படியே சம்பாஷணைகளையும் கற்றுக்கொள்ள வேண்டும்" என்று டைரெக்டர் சொன்னார்.

ஒரு வேஷம் தருகிறேன் என்று எடுத்ததும் சொன்னாராதலால் எனக்கு கலையின்மேல் இருந்த ஆர்வம் அதிகரித்தது. தைரியமும் ஏற்பட்டது.

இன்று கடைசி இரவு. மனமே ஒரு முடிவு சொல்ல மாட்டாயா? "எல்லோருக்கும் கிடைக்கும்புகழ்உனக்கும்கிடைக்கவேண்டுமானால் சமூகத்தை மறந்து சினிமாவில் சேர். சமூகம்! சமூகம் என்று சமூகத்திற்கு நீ ஏன் பயப்படுகிறாய்? உலகம் தூற்றினால் தூற்றட்டும்? தூற்றுவதும், புகழ்வதும் உலகத்தின் இயல்பு. இதற்காக நீ உன் கலையை புறக்கணிக்கப் போகிறாயா" என்று மனச்சாட்சி இடித்துக் காட்டியது. உறவினர்களுக்கு இதை இரகசியமாய் வைக்கவேண்டும். முழுப்பூசினிக்காயைச் சோற்றில் மறைக்கப் பார்க்கிறாயா மனமே? அன்று இப்பேர்ப்பட்ட போராட்டத்தின் நடுவில் சிக்கொண்டு அழுவதா, சிரிப்பதா என்று தெரியாமல் விழித்துக்கொண்டிருந்தேன். வரும் காலத்தில் நீ ஒரு மின்னும் நக்ஷத்திரமாக விளங்கினால் இன்று நடக்கும் போராட்டத்தை அப்பொழுது நினைத்துப் பார்ப்பாயா? இதை நினைத்ததும் எனக்கு நிம்மதி ஏற்பட்டது. முன்னுக்கு வரவேண்டும் என்ற அவா மேலோங்கியது. அவ்வளவுதான்.

• • •

படத்தில் ஒப்பந்தம் செய்துகொள்ளப் பட்டேன். மற்றப் புது முகங்களின்

ஆர். பத்மா கடைசியாக நடித்துள்ள "போஜன்" இப்பொழுது வெளியூர்களில் ஓடிக் கொண்டிருக்கிறது.

ஆ. ஆர். ஜீவரத்தினம் நடித்துள்ள "ஸ்ரீ ஆண்டாள்" சீக்கிரமே வெளிவரக் காத்திருக்கிறது.

அறை. அந்த அறையின் ஒரு பக்கத்தில் இன்னும் சில அறைகளும் இருக்கின்றன. தரை வழவழப்பாக இருக்கிறது. ஆண்களுக்கும், பெண்களுக்கும் தனித்தனியான 'மேக்-அப்' அறைகள், டிரெஸ்ஸிங் அறைகள் என்று இருக்கின்றன. முகத்தை அலம்பிக் கொள்ள நல்ல வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன. சுவற்றில் பெரிய, பெரிய கண்ணாடிகள் பதிக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு கண்ணாடியின் இரு பக்கங்களிலும் பிரகாசமுள்ள மின்சார விளக்குகளிருக்கின்றன. மின்சார விசிறிகளும் சுழல்கின்றன. கமகமவென்று மூக்கைத்துளைக்கும்'மேக்-அப்' சாமான்களின்வாசனைகாற்றில் கலந்து நம்மைப் பரவசப்படுத்தும். உயர்ந்த நாற்காலியொன்றில் அமர்ந்தேன். வீட்டில் ஸ்னோ, பவுடர் தடவுவதைப் போலில்லை. எத்தனையோ வகையானவஸ்துக்களைத் தடவ வேண்டும். ஆனால் அவைகளைத் தடவும்பொழுது அருவருப்பாகவும், 'பசூனை'ப் போலும் இருந்தது.மேக்-கப்போட்டு முடிந்ததும் நானே ஆச்சரியப்பட்டுவிட்டேன்.

மனதில் இந்தப் புதுமுகம் (நான்) பொறாமைக் கனலை மூட்டியதில் ஆச்சரியமில்லையே?

"இன்று உனக்கு 'மேக்-அப்' டெஸ்ட்" என்றார் டைரெக்டர் ஒரு நாள். அப்படி யென்றால் என்ன? படித்திருந்தும் அதைப் புரிந்து கொள்ள என்னாலியலவில்லை. கேட்டுத் தெரிந்துகொள்ளுவோமென்றால் வெட்கமாயிருந்தது. அதற்குள் டைரெக்டர் என்னை, 'மேக்-அப்' போடுபவருக்கு அறிமுகப்படுத்தினர். "இவளுக்கு 'ஸ்பெஷல் மேக்-அப்' போடவேண்டும். இன்று வெறும் டெஸ்ட்" என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார்.

மேக்-அப் போடும் அறை மாடியில் இருக்கிறது. ஒரு பெரிய அழகான

பிறகு "டிரெஸ்ஸிங் ரூமிற்குள்" அழைத்துச் செல்லப்பட்டேன். அறை முழுவதும் கண்ணாடி மயமாகவே இருந்தது. உடைகளணிந்த பிறகு "செட்"டிற்குள் அழைப்பதாக ஒரு வேலைக்காரன் சொன்னன். 'செட்' சிறிது தூரத்திலிருந்ததால் நாங்கள் ஒருவரை யொருவர் கேலி செய்து கொண்டே சென்றோம். அப்பப்பா! அந்த இடத்திற்குச் செல்வதற்குள் தான் எத்தனை ஆண்களைக் கடந்து செல்ல வேண்டி யிருந்தது? ஸ்டுடியோவில் எங்கு பார்த்தாலும் ஆண்கள்.

"ஐயோ! இவர்கள் முன்னிலையில் எப்படி நடிப்பது? சங்கோசமாயிருக்

கிறதே" என்றேன். 'டிரஸ் டிபார்ட் மெண்டில்' இருந்த பெண்மணி நல்ல மனதுடையவள். என்னுடனேயே அவள் செட்டிற்கு வந்தாள். அந்த நேரத்தில் என் தாய் என் அருகி லிருந்தபொழுதும் அந்த மாதே எனக்குத் தாயினும் மேலாக ஆறுத லளித்தாள். தைரியமூட்டிக்கொண்டு மிருந்தாள்.

"டேய்! ஆர்டிஸ்டுகளுக்கெல்லாம் காபி, டிபன் கொடுத்தாய்விட்டதா?" என்று கேட்டார் டைரெக்டர். இவர் உதவி டைரெக்டர், இவர் உதவி காமிராமேன், இவர் டான்ஸ் மாஸ்டர், இவர் சௌன்ட் இன்ஜினியர், இவர் மியூஸிக் டைரெக்டர் என்று ஒவ் வொருவரையும் அறிமுகப்படுத்தி "படித்த பெண், கூச்சப்படுகிறுள்" என்று ஒரு நாற்காலியில் என்னை அமரச்சொன்னுர்.

ஒரு இடத்தில் என்னை நிற்கச் செய்து, பல ஆயிரம் "பவர்" உள்ள லைட்டுகளை என்மேல் படும்படிச் செய் தும், கேமராவின் மூலம் பார்த்தும் மும்முரமாக வேலையிலாழ்ந்திருந் தனர். மூச்சு விடாமல் பலர் விரிந்த கண்களுடன் என்னையே பார்த்துக் கொண்டிருந்தார்கள். எந்த நிமிஷ மும் என்மேல் பாய்ந்து விழுங்கிவிடு வார்களோ என்று தோன்றியது எனக்கு. சுற்றிலும் காமிராக்களும், ரிகார்டிங் கருவிகளும், பிரம்மாண்ட மான காட்சி ஜோடனைகளும், காட் சிக்கு வேண்டிய சில சாமான்களும் பயங்கரமாகக் காட்சியளித்தன. காட் டிடையில் எதிர்பாராத விதத்தில் ஒரு மனிதன் பல மிருகங்களால் சூழப் பட்டதைப் போன்ற உணர்ச்சியை அடைந்தேன்.

மேலே வழிந்துகொண்டிருந்த வியர் வையைத் துடைத்துக் கொள்ளவும் முடியாமல், உணர்ச்சி மறத்துப்போய் விட்டதோ எனத் தோன்றியது.

'மைக்' என்று கத்தினுர் டைரெக் டர். என் முன்னுல் ஒரு 'மைக்'

எமது
அபிமானிகளுக்கு
தீபாவளி
வாழ்த்துக்கள்!

★

கைவசமுள்ள படங்கள்:

கோவை & நீலகிரி

நாம் இருவர், ராம் ராஜ்யா, காமவல்லி, வள்ளி, ஸாலி வாஹன், பங்கஜவல்லி, விகட யோகி, லவங்கி, மதுரை வீரன், கடகம், சௌ சௌ.

மற்றும்

மல்லம்மா, ஜங்கிள் க்வீன், ரத்தன், மாயா மச்சீந்திரா, கிரஹப் பிரவேசம், ஸ்வர்க்க ஸீமா.

விரைவில் வெளிவருகிறது:

ஆதித்தன் கனவு
டி. ஆர். மஹாலிங்கம்
அஞ்சலி தேவி

★

கரூர் ஜெய் ஹிந்த் பிக்சர்ஸ்
18-322, சுக்கிரவார் பேட்டை
கோயமுத்தூர்.

கொண்டுவந்து நிறுத்தினார்கள். "இதைப் பார்த்து பயந்துவிடாதே. இதோ, நான் சொல்லுவதைப் போலவே சொல் பார்க்கலாம்" என்று ஒரு வாக்கியத்தைச் சொன்னார். நானும் அப்படியே சொல்லி முடித்தேன்.

"பயப்படுகிறாயே. எல்லாம் சரியாகிவிடும். இனி நீ வீட்டிற்குப் போகலாம். மேக்-அப் கலைத்துவிடு. கார் ரெடியாயிருக்கும்" என்று முடித்தார்.

அன்று வேலை முடிந்தது.

மறு நாள் ஷூட்டிங்! முந்தினநாள் படியே யாவும் நடந்தன. என் நிலையிலும் ஒரு மாறுதலும் கிடையாது. எல்லோரும் தயாராகிவிட்டனர்! 'கிளாப்-ஸ்டிக்' என்ற வஸ்து எங்களைப் பயங்கரமாகப் பார்த்துக்கொண்டிருந்தது. அதைத் தட்டவேண்டியதுதான்! நாங்களெல்லோரும் நடிக்கத் தொடங்க வேண்டும். பயங்கரமான முதலை (தோற்றத்திலில்லை) எங்களை விழுங்கக் காத்திருப்பது போல் தோன்றியது.

'டப்' என்ற ஓசை, கேமிரா ஓசையும் கேட்டுக்கொண்டுதானிருந்தது. நான் முதல்முதலாக சினிமாவில் நடிக்கத் தொடங்கினேன். என்ன ஆச்சரியம்! என் பயம், நடுக்கம் யாவும் எங்கோ போய்விட்டன.

'ஓ-கே' என்று டைரெக்டர் கத்தின பிறகுதான் என் சுய நினைவு வந்தது. பழைய பயமும் என்னை வந்தடைந்தது.

"ஸ்ரீ வள்ளி"யில் ரஸிகர்களின் கவனத்தைப் பெரிதும் கவர்ந்த சௌதாமினிக்கு "ஸ்ரீ ஆண்டாளி"ல் நிறைய சந்தர்ப்பம் அளிக்கப்பட்டிருக்கிறதாம்.

* *

இப்பொழுதெல்லாம் கூட கூச்சம் போகவில்லைதான். சுற்றிலும் பார்க்கும்பொழுது நடுக்கம் ஏற்படத்தான் செய்கிறது. வசனங்கள் மறந்துபோய்விட்டன போல் பிரமை ஏற்படுகிறது. என்ன பாத்திரம் ஏற்றோம் என்பதும் நினைவுக்கு வர மாட்டேன் என்கிறது. இன்னும் சில நேரங்களில் அந்த பயம் இருக்கத் தான் செய்கிறது

ஆனால் 'கிளாப்-ஸ்டிக்' 'டப்' என்று ஒலிக்கும்போது நான் நடிகையாக மாறிவிடுகிறேன். 'ஓ-கே!' என்ற டைரெக்டரின் குரல் என்னை மறுபடியும் சாதாரணப் பெண்ணாக்குகிறது.

விரைவில்
வருகிறது
கிருஷ்ண பிக்சர்ஸ்
கிருஷ்ண பக்தி
நடிகர்கள்
T.R.ராஜகுமாரி
M.L.வசந்தகுமாரி
P.A.பெரியநாயகி
A.R.சகுந்தலா
T.A.மதுரம்
P.U.சின்னப்பா
K.R.ராமசாமி
D.பாலசுப்ரமண்யம்
S.P.L.தனலக்ஷ்மி
N.S.கிருஷ்ணன்
சென்னை உரிமை:
ஸ்ரீ ரத்னா பிக்சர்ஸ்
83, பூனமல்லி ஹைரோடு,
அமிஞ்சிக்கரை சென்னை.10. போன்:3236.
டைரெக்ஷன்:
ஆர். எஸ். மணி
VENDHAN
EP.

டி. ஆர். ராஜகுமாரி

வாழ்க்கை வர்ணனை

நம் பட முதலாளிகள் மீது உங்களுக்கு எவ்வளவோ குறைகள் இருக்கலாம். "பணக் கொள்ளைக்காக அவர்கள் எதை வேண்டுமானாலும் செய்யத் துணிவார்கள்" என்று கூறுங்கள். அவர்களுக்கு "நல்ல படங்களைத் தயாரிக்கத் தெரியவே தெரியாது" என்று கூறுங்கள். இன்னும் என்ன வேண்டுமானாலும் கூறுங்கள். பேசாமல் ஒப்புக் கொள்ளுகிறேன். ஆனால், அவர்கள் லக்ஷ லக்ஷமாக முதலைப் போட்டு விட்டு நம் முன்னணி நக்ஷத்திரங்களிடம் பட்டு வரும் அவஸ்தை இருக்கிறதே, அது அநேகருக்கு தெரியாது. பாவம், உண்மையில் இந்த விஷயத்தில் நாம் அவர்களுக்கு அநுதாபம் செலுத்தக் கடமைப் பட்டிருக்கிறோம்.

மூலைக் கொருவராய் அலைந்து கொண்டிருக்கும், கர்வம் தலைக்கேறிய நக்ஷத்திரங்களை ஒன்று சேர்த்து அவர்கள் படம் தயாரிக்கும் விஷயம் இருக்கிறதே, அது அவர்களது தனிப்பட்ட சாமர்த்தியத்திற்கு அத்தாட்சியாகும். தம் நக்ஷத்திரங்களின் சௌகரியங்களையெல்லாம் முதலில் கேட்டுத் தெரிந்து கொண்டு, அதற்கிணங்க ஒரு குறிப்பிட்ட காட்சிக்கு 'ஸெட்' அமைக்கும்படி ஸ்டுடியோவில் ஏற்பாடு செய்வார் படமுதலாளி. இந்த 'ஸெட்' தயாராவதற்குள் எவ்வளவோ சங்கடங்கள் தோன்றிவிடும். ஒரு நடிகை 'உடம்பு சரியில்லை' என்பாள். இன்னொரு நடிகர் 'தொண்டை கட்டி யிருக்கிறது' என்பார். வேறொரு நக்ஷத்திரமோ இன்னொரு படத்தின் 'அர்ஜென்ட்' ஷூட்டிங்குக்குப் போய் விடுவாள். இதற்கிடையில் போட்ட 'ஸெட்'டை கலைத்துவிடப் போவதாக ஸ்டுடியோக்காரர் நெருக்குவார். சில சமயம் கலைத்தும் விடுவார். இப்படிக் கலைத்த பின் நக்ஷத்திரங்கள் ஒவ்வொருவராய் ஒன்று கூடுவர். இவர்கள் ஒன்று சேரும் போது மீண்டும் அந்த 'ஸெட்'டை அமைப்பதற்கு ஸ்டுடியோவில் வசதியிராது.

காலையில் 8 மணிக்கு ஷூட்டிங்கிற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும். மற்றவர்களெல்லோரும் விடியற் காலை முதலே தயாராக இருப்பார்கள். ஆனால் பிரதான நக்ஷத்திர மென்னவோ சாவதானமாய் பனிரண்டு மணிக்கு வருவார். அதன் பிறகு மேக்கப் போட்டு பிற்பகல் 4 மணிக்கே ஷூட்டிங் ஆரம்பமாகும். ஒரு நாளில் முக்கால் பாகம் வீணாக்

கண்டீசி

கப் படுவதனல் பட முதலாளி நஷ்டம் அடைகிறுர். ஊழியர்களுக்கோ சகிக்க முடியாத கஷ்டம் ஏற்படுகிறது.

இதுபோல நக்ஷத்திரங்கள் குறித்த காலம் தவறுவதாலும், மற்றவர்களின் செளகரியங்களேயும், நஷ்டத்தையும் பொருட் படுத்தாது பொறுப்பற்ற தன்மையில் நடந்து கொள்ளுவதாலும், படத் தயாரிப்பில் தாமதமும், நஷ்டமும் ஏற்படுகிறது. நக்ஷத்திரங்கள் தாங்கள் பெறும் பணத்திற்கு சரியானபடி உழைக்க வேண்டுமென்ற கடமையை மறந்து விடுவதாக, அடிக்கடி புகார்கள் காதில் விழுகின்றன. ஆனல், டி. ஆர். ராஜகுமாரியைப் பற்றி இது மாதிரியான

பங்கஜவல்லி

புகார்கள் என் காதில் விழவேயில்லை. அதற்குப் பதில் அவர் படத் தயாரிப்பு சம்பந்தமாக மனமுவந்து ஒத்துழைப்பதைப் பற்றி நிறையக் கேள்விப்பட்டிருக்கிறேன்.

ராஜகுமாரி குறித்ததேதியிலும்,குறித்த மணியிலும் ஷூட்டிங்கிற்கு ஆஜராகி விடுவார். ஆஜரான பின்னரோ, அங்குள்ள நிலைமைகளுக்கேற்க அநுசரணையாக நடந்து கொள்ளுவார். என்னைக் கேட்டால் ராஜகுமாரி சென்ற ஒரு மஹா பஹ காலமாய் மங்கா நக்ஷத்திரமாய் விளங்கி வருவதற்கு அவருடைய திறமைகளை விட இந்த ஒத்துழைப்பு மனப்பான்மை தான் முக்கிய காரணமாகும் நக்ஷத்திரங்கள் எவ்வளவு லக்ஷத்தை வேண்டுமானாலும் வாய் கூசாமல் கேட்கலாம் அது அவர்கள் இஷ்டம். ஆனால் அதைக் கொடுக்க பட முதலாளி இணங்கிய பின் நக்ஷத்திரங்கள் கடமை தவறுவது மிகவும் கண்டிக்கத் தக்கதாகும்.

ராஜகுமாரி முதன் முதலில் நடித்த படம் 1939 ம் வருஷம் தயாரான குமார குலோத்துங்கன் ஆகும். இப்படத்தில் அவர் நடித்தது அநேகருக்குத் தெரிந்திருக்காது. இப்பொழுது வெற்றி நக்ஷத்திரமாய் விளக்கும் டி. ஆர். ராஜகுமாரி அப்படத்தில் தோல்வியுற்றது போலவே அப் படமும் படுதோல்வியுற்றது. ஆனால் "முதல் தோல்வி; முற்றும் தோல்வி" என்ற பழமொழி அவர் விஷயத்தில் பொய்யாகி விட்டதல்லவா?

அடுத்தபடியாக ராஜகுமாரி நடித்த படம் மந்தாரவதி. இப் படம் தயாராகிக் கொண்டிருக்கும் போதே அதன் டைரெக்டரான இத்தாலியர் மார்கோனி யுத்தக் கைதியாக்கப்பட்டார். பிறகு இப்படம் ஸ்ரீ. பாபுவால் டைரெக்ட்செய்யப்பட்டுவெளிவந்தது.

பின்னர், ராஜகுமாரி சூர்ய புத்ரி படத்தில் நடித்தார். முந்திய இரண்டு படங்களுக்கும் ஏற்பட்ட கதிதான் இப் படத்திற்கும் ஏற்பட்டது.

இந்த மூன்று படங்களும் தோல்வியடைந்தன வென்றாலும் அதில்

சந்திரலே

நடித்த ராஜகுமாரியைப் பற்றி சினிமா வட்டாரத்தில் ஒரு நல்ல அபிப்பிராயம் ஏற்பட்டு விட்டது. அவரிடம் எதிர் காலத்தில் முன்னுக்கு வரக்கூடிய அம்சங்கள், தென்பட்டதை சூக்ஷ்மக் கண்ணுடைய சிலர் தெரிந்து கொண்டனர். அப்படித் தெரிந்து கொண்டவர்களில் ஒருவரே டைரெக்டர் கே. சுப்ரமண்யம்.

ராஜகுமாரியை எந்த விதமாய் நடிக்கச் செய்தால் பிரபலம் அடைவார் என்பதை நன்கு தெரிந்து கொண்டு, சுப்ரமண்யம் அவரை கச்சதேவயானியில் நடிக்க வைத்தார். இப்படம் சுப்ரமண்யத்திற்கும், ராஜகுமாரிக்கும் நல்ல வெற்றியை அளித்தது. படத்திற்கு ஏராளமான வசூல் ஆகியது; ராஜகுமாரிக்கோ எதிர்காலம் நிச்சயமாகி விட்டது.

கச்சதேவயானி படத்தின் மீது பட ரஸிகர்கள் கொண்ட காதல் இவ்வளவு அவ்வளவு என்று சொல்ல முடியாது. ராஜகுமாரியோ அவர்களது 'ஸ்வப்பன மோஹனி'யாகத் திகழ்ந்தார். அந்தப் படத்தை 'முப்பது தடவை', 'நாற்பது தடவை' என்று பார்த்து மகிழ்ந்த வாலிபர்களோ பலர். சுருக்கச் சொல்ல வேண்டுமானால் கச்சதேவயானி தமிழ் படத் தயாரிப்பிலேயே ஒரு புதுப்போக்கை நிர்ணயித்து வைத்தது. "ஸெக்ஸ் அப்பீல்" என்ற பதம் தமிழ்ப் பட உலகில் முதன் முதலில் அடிபட ஆரம்பித்தது இப்படத்தின் மூலம்தான். "படங்களுக்கு 'ஸெக்ஸ் அப்பீல்' (இனக் கவர்ச்சி) அவசியமா இல்லையா?" என்ற வாதப் பிரதிவாத யுத்தம் பத்திரிகைகளில் ஆரம்பமாயிற்று.

கச்சதேவயானியின் வெற்றி ராஜகுமாரியை உடனே ஒரு நக்ஷத்திரமாக்கி, நல்ல கிராக்கியையும் ஏற்படுத்தி வைத்தது. மாடர்ன் தியேட்டர்ஸார் அவரை இரண்டு படங்களுக்கு சேர்ந்தாற்போல் ஒப்பந்தம் செய்து கொண்டனர். அவர்களது சதிசுகன்யா, மனோன்மணி ஆகிய இரண்டு படங்களிலும் ராஜகுமாரி நடித்தார். இவ்விரண்டு படங்களிலும் அவர் சாதாரண வெற்றி பெற்றார்.

பிறகு அவர் நடித்த படம் சிவகவி. இப்படத்தில் அவர் நடிப்பின் மூலமும் நாட்டியத்தின் மூலமும், பாட்டின் மூலமும் நல்ல பெயர் பெற்றார். பின்னர் அவர் குபேர குசேலாவில் நடித்தார். இப்படத்தில் அவரது நாட்டியமும் வெகு அழகாக அமைந்திருந்தது. நடிப்பிலும் நல்ல 'நகாஸ்' ஏறியிருந்தது ஆதலால் அவருக்கு ரஸிகர்களின் அபரிமிதமான ஆதரவு ஏற்பட்டது.

இதற்கு நேர்மாறாய் முடிந்தது அவரது சாலிவாஹனன். அதன் பட முதலாளிகள் ஒரு படத்திலேயே இரு பெரிய நக்ஷத்திரங்களைப் போட்டுக் கொண்டு பணம் சம்பாதிக்க வேண்டும் என்று திட்டம் போட்டனர். ஆனால் அதில் பங்கெடுத்துக் கொண்ட

ராஜகுமாரிக்கும் சரி, வஸந்தாவுக்கும் சரி நல்ல பெயர் ஏற்படவில்லை.

ஆனல் இப படங்களில் அவர் இழந்த நல்ல பெயரை பிரபாவதியும், ஹரிதாஸும் சம்பாதித்துக் கொடுத்து விட்டன.

ராஜகுமாரி தொடர்ந்து வெற்றி பெற்றது சற்சாக யாராவது "கண் போட்டார்களோ," இல்லையோ எனக்குத் தெரியாது. ஆனல் ஹரிதாஸில் நடித்த பின்னர் அவரது கண்ணுக்கு ஆபத்து ஏற்பட்டதென்னவோ எனக்குத் தெரியும். இதனல் சில மாதங்கள் வரை அவர் படங்களில் நடிக்க முடியாமலும் போய்விட்டது. அதன் பின் அவர் நடித்த வால்மீகியில் அவரது தோற்றம் கவர்ச்சிகரமாய் இல்லாதிருந்ததோடு, நடிப்பும் சப்பென்றிருந்தது. விஸ்வாமித்ரா, பங்கஜவல்லி ஆகிய படங்களில் கூட அவரது பாகம் சாதாரணமாகவே தானிருந்தது.

ராஜகுமாரி முதன் முதலாக விகட யோகி சமூகப் படத்தில் நடித்தார். இப் படத்தின் மூலம் தன்னாலும் சமூகப் படங்களில் நடிக்க முடியும் என்பதை நிரூபித்து விட்டார். ஆனல் அவரை மேலும் சமூகப் படங்களில் நடிக்கச் செய்யாது இருக்கின்றனர் பட முதலாளிகள்.

விஸ்வாமித்ரா.

ராஜகுமாரி இதுவரையில் நடித்துள்ள படங்கள் எல்லாவற்றிலுமே சந்திரலேகாவில் தான் அவருடைய பாட்டுகள் அதிஷ்டமாகப் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. அதோடு கூட அவருடைய நடிப்பும் இப்படத்தில் மிக அழகாய் அமைந்திருக்கிறது.

ராஜகுமாரி இப்பொழுது ஹிந்தி சந்திரலேகாவில் நடித்து வருகிறார். ஹிந்தி சம்பாஷணைகளை அவருடைய பாகத்திற்கு அவரே பேசி ஒட்டவைக்கப்படுகின்றனவாம். ஹிந்தி படத்திற்காக அவரது பாகங்களில் சில பகுதிகள் மறுபடியுமே தயாரிக்கப்பட்டு வருகின்றனவாம். ஆதலால் இவ்வளவு நாள் தென்னாட்டுடன் நின்றிருந்த ராஜகுமாரியின் புகழ் வடநாட்டிலும் பரவக்கூடும்.

ராஜகுமாரி தாம் நடித்துள்ள படங்கள் எல்லாவற்றிலும் அநேகமாக நாட்டியம் ஆடியிருக்கிறார். சில படங்களில் அவரது நாட்டியம் மிக அழகாயும் அமைந்திருக்கின்றது. எனினும் வரப்போகும் கிருஷ்ண பக்தியில் அவர் பிரமாதமாக நடனம் ஆடியிருப்பதாகச் செய்தி கிடைத்திருக்கிறது.

ஒன்பது வருஷங்களுக்கு முன் சினிமா உலகில் பிரவேசித்த ராஜகுமாரி இதுவரை 16 படங்களில் நடித்துள்ளார்.

ஹிந்தி சந்திரலேகாவோடு கூட அவர் இப்பொழுது ஜூபிடரின் **விஜயகுமாரி**, பக்ஷிராஜாவின் **பவளக்கொடி**, ஸ்ரீ கிருஷ்ண பிக்சர்ஸின் **கிருஷ்ண பக்தி** ஆகிய நான்கு படங்களிலும் நடித்துக் கொண்டிருக்கிருர்.

ராஜகுமாரி சுமாரான குரலும், பாட்டுத் திறமையும் உடையவர். அவர் சினிமாவுக்கு வந்த பின்னரே நாட்டியமாடக் கற்றுக் கொண்டார். எனினும் படங்களில் அழகாக ஆடி வருகிருர். சம்பாஷணைகளை கனகச்சிதமாகப் பேசவும், காதல் கட்டங்களில் ரஸமாக நடிக்கவும் கூடியவர். அதற்கேற்ற கவர்ச்சி மிக்க உடலமைப்பையும், எந்தக் கோணங்களிலிருந்து எடுத்தாலும் அழகாகவே தோற்றமளிக்கும் முகத் தோற்றத்தையும், வசீகரக் கண்களையும் பெற்றிருக்கிருர். ராஜகுமாரி ஒரு முன்னணி நக்ஷத்திரமாகி, அந்த ஸ்தானத்தை ஸ்திரமாய் காப்பாற்றிக் கொண்டு வருவதற்கும் இந்த அம்சங்களே உதவியாய் நிற்கின்றன.

நடுத்தர உயரமும், கருப்பு நிறமும், கலகலப்பற்ற சுபாவமும் உடைய ராஜகுமாரி ஸ்டுடியோவில் நடிக்கும் போது தம் வேலையுண்டு தாமுண்டு என்றிருப்பார். அனாவசியமாகப் பேசி தம் கௌரவத்தை இழக்கமாட்டார்.

சங்கீதம், நாட்டியம், நடிப்பு ஆகிய கலைகளில் ராஜகுமாரிக்கு நல்ல திறமை இருப்பதை பரம்பரை விசேஷம் என்றே சொல்லவேண்டும். சங்கீதத்தில் பல வருஷங்களுக்கு முன் பிரசித்தி பெற்று விளங்கிய தஞ்சை குஜலாம்பாளின் இரண்டாவது பெண்ணின் புத்ரிதான் ராஜகுமாரி. அவரது தாயாரும், மூன்று தம்பிகளும் (ராமச்சந்திரன், சக்ரவர்த்தி, பார்த்தசாரதி), இரண்டு தங்கைகளும் (சேதுலக்ஷ்மி, ரங்கநாயகி) ராஜகுமாரியுடன் தியாகராய நகரில் அவரது சொந்த மாளிகையான "கன்னிகா குமாரி பவனத்"தில் வசித்து வருகின்றனர். தம்பிகளில் மூத்தவரான ராமச்சந்திரன் இப்பொழுது நெப்டியூன் ஸ்டுடியோவில் ஒலிப்பதிவாளராக இருந்து வருகிருர். மற்ற இரு தம்பிகளும் படித்து வருகின்றனர்.

நடிகை எஸ். பி. எல். தனலக்ஷ்மி, ராஜகுமாரியின் தாயாருடன் பிறந்த கடைசித் தங்கை ஆவார். "விகடயோகி"யில் நடித்த டி. எஸ். தமயந்தி ராஜகுமாரியின் பெரியம்மாவின் பெண்ணாவார். தன

லக்ஷ்மியும், தமயந்தியும் முதலில் சினிமாவில் நடிக்க முற்பட்டனர். அதன் பிறகே ராஜகுமாரியும் நடிக்க ஆரம்பித்தார். சில வருஷங்களுக்குப் பிறகு இந்தக் குடும்பம் பூராவுமே சென்னைக்கு வந்து குடியேறி விட்டது.

ராஜகுமாரியின் அசல் பெயர் ராஜாயி; அவருக்கு இப்பொழுது இருபத்தி ஏழாவது வயது நடந்துகொண்டிருக்கிறது. 1922-ம் வருஷம் மே மாதம் 5-ந் தேதி வெள்ளிக்கிழமையன்று தஞ்சையில் பிறந்தவர் அவர்.

ராஜகுமாரியின் தாய்மாமன் ஐவரில் இருவரே இப்பொழுது உயிருடன் இருக்கின்றனர். இவர்களில் மூத்தவரான ஸ்ரீ டி. கே. ராஜகோபால் சென்னையில் ரிஜிஸ்திரார் ஆபீஸில் உத்தியோகம் பார்த்து வருகிறார். கடைசி மாமனை ராமராஜன் (மாம்பு) ராஜகுமாரியுடனேயே வசித்து வருகிறார். அவருடைய திருமணத்தை சென்ற வருஷம் ஏப்ரல் மாதம் ராஜகுமாரியும், தனலக்ஷ்மியும தடபுடலாய் நடத்தி வைத்தனர்.

இந்தக் குடும்பத்தை சென்

னக்கு மாற்றி, கூடவே இருந்து, இந்த மூவரையும் சினிமா உலகில் பிரபலப் படுத்தி வைத்த நம் நண்பர் பாலு மூன்று வருஷங்களுக்கு முன் காலமாகியது இக்குடும்பத்திற்கு வலக் கரம் ஒடிந்தது மாதிரியாகும்.

ராஜகுமாரி சிக்கனமாகவே வாழ்க்கை நடத்தி வருகிறாராம். அவரது சம்பாத்தியம், செலவு, வாழ்க்கை, தொழில் எல்லாமே ஒரு நல்ல திட்டப்படி நடந்து வருகிறது. தியாகராய நகரில் மையமான இடத்தில் ஒரு நல்ல தியேட்டர் இல்லை யென்ற குறை அநேகருக்கு உண்டு. இந்தக் குறையைப் போக்கி வைக்க வேண்டுமென்ற நோக்கத்துடனும், தாம் கஷ்டப்பட்டு சம்பாதித்த பணம் ஒரு அழியா சொத்தாய் இருக்க வேண்டுமென்ற எண்ணத்துடனும் அவர் புதிதாக ஒரு தியேட்டரை நவீன சாதனங்களுடன் கட்டிக் கொண்டிருக்கிறார். "ஸ்வதந்திரா தியேட்டர்" என்று பெயர் பெறப் போகும் இத் தியேட்டர் அநேகமாகக் கட்டி முடிந்தாய் விட்டது, அடுத்த பொங்கல் தினத்தன்று திறந்து வைக்க ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருக்கிறார்.

சமீபத்தில் வெளியூர்களில் வெளிவந்திருக்கும் "ராஜ முக்தி"யில் எம். ஜி. சக்ரபாணியும், எம். ஆர். சாமிநாதனும்.

FAMOUS SHOP, நெ. 111, நயினியப்ப நாய்க்கன் தெரு

கியாதி பெற்ற ஜவுளிக் கடை

கலியாண காலத்திற்கு

எமது சொந்தத் தறியில் நெய்த

முதல் தரம் பட்டுப் புடவைகள்

கொல்லேகால் முறுக்கு பட்டில் தயார் செய்யப்பட்டவை. இவை நீண்ட உழைப்பிற்கும், கெட்டிச் சாயத்திற்கும் உத்திரவாதமுள்ளவை

12, 16, 18, 19, முழங்களில் ஏராளமான ஸ்டாக் இருக்கிறது.

S. R. B. முத்துகிருஷ்ண அய்யர்

(Formerly S. R. Baluswamy Iyer & Sons)

111, நயினியப்ப நாய்க்கன் தெரு, பி. டி. மதருஸ்.

போன் : 2314 தந்தி : BALMO

235, கீழமாரெட் வீதி, மதுரை.

போன் : 320 தந்தி : MUTHUCO

போதும் 11000 அடி

டைரக்டர் சௌந்தரராஜன்

முன்பெல்லாம் சர்க்கார் ஏதாவது ஒரு சட்டம் பிறப்பித்தால, பிறப்பிக்கப் போவதாகப் பிரஸ்தாபித்தால் உடனே அதற்குக் கண்டனக் கூட்டங்கள் போட்டு அதை எதிர்ப்பது வழக்கம். அச் சட்டம் நல்லதாக இருந்தாலும் கெட்டதாக இருந்தாலும் அப்பொழுது கண்டனம் செய்ய வேண்டிய சமயமாக இருந்து வந்தது. இதனுல் முன்பு எதிர்த்தவர்களெல்லாம உண்மையாக அச் சட்டத்தை எதிர்த்தார்கள் என்றும் சொல்லி விட முடியாது. மேலும் அக் காலத்தில் நம் கையில் அரசாங்கமும் இல்லை. நமக்கு அரசாங்கத்தில் அதிகாரமும் இல்லை. நம்மை ஆள்பவன் அன்னியன் என்ற காரணத்தால், அவன் கீழ் நாம் இருக்க விரும்பவில்லை என்ற மனப்பான்மையில் அப்படி எதிர்த்து வந்தோம். ஆனல் இன்றோ அரசாங்கம் நமது, நாடு நமது, அதில் விளையும், உற்பத்தி செய்யப்படும்—லாபம் நஷ்டம்—எல்லாம் நம்முடையது. இப்படியிருக்கும்போது நமது அரசாங்கம் ஏதாவது நல்லதாகச் செய்யப் புகும் காரியங்களுக்கு எதிர்ப்பைக் காட்டுவது என்பது வியக்கத் தக்க செய்கையாகும்.

பம்பாய் அஜிட் பிக்சர்ஸ் "குணசுந்தரி" ஸ்டேட் ப்ரொடக்ஷன் "கனகாங்கி" யிலும் நடித்து வரும் வி. செல்லம்.

நான் மேலே கூறி வந்தவை, சமீபத்தில் இந்திய சர்க்கார் சினிமா படங்கள் இத்தனை அடிக்குள் தான் தயாரிக்கப் படவேண்டும் என்று சட்டம் கொண்டு வரப் போவதாக ஒரு அறிக்கை வெளியிட்டதையும், அதைத் தொடர்ந்து தமிழ் நாட்டில் பலர் அதை ஆதரித்தும், சிலர் அதை எதிர்த்தும் வருவதைச் சுட்டிக் காட்டத்தான்.

இப்பொழுது இருக்கும் சர்க்கார் நம்முடையது. அதற்கு பொருப்புகள் அதிகம். சர்க்காரில் உள்ளவர்கள் நம்முடையவர்கள். அவர்களுக்கு பொது ஜனங்களாகிய நம்மிடத்தில் அதிக அக்கரை உண்டு. நம்முடைய வாழ்விலும் தாழ்விலும் தான் அவர்களுடைய வாழ்வும் தாழ்வும் இருக்கிறது. அப்படியிருக்க பொது ஜனங்களுக்கு அசௌகரியமாக உள்ளவைகளைக் கண்டு, அதற்குப் பரிகாரம் தேட வேண்டியதும் அவர்களின் கடமைதானே! அதனல் அவர்கள் பொது ஜனங்களின் சுகாதாரத்தை பாதிக்கும் முறையில் உள்ள நீளமான படங்கள் வேண்டாம் என்ற எண்ணத்துடனேயே படத்தின் நீளத்தைக் குறைக்க வேண்டும் என ஒரு சட்டம் பிறப்பிக்க வேண்டியதாக அறிக்கை

வெளியிட்டனர். இன்னும் சட்டம் அமலுக்கும் வந்து விடவில்லை. அதற்குள் வாதப் பிரதிவாதங்கள் அதிகரித்து விட்டன. அதெல்லாவற்றையும் விட ஒரு சாரார் கூறும் காரணம் அதிக ஆச்சரியத்தைக் கொடுக்கிறது.

'தமிழ் நாட்டு சினிமா ரஸிகர்களின் போக்கே தனி ரகம். அவர்களுக்கு பாட்டு, நடனம், ஹாஸ்யம் எல்லாம் வேண்டும். இவைகள் எல்லாம் கொடுக்க வேண்டுமானால் நீளக் கட்டுப்பாடு கூடாது. அப்படியே கட்டுப்பாடு கொண்டு வந்தாலும் தமிழ் நாட்டிற்குத் தனி சலுகை வேண்டும்' என்கின்றனர். இது ஆச்சரியத்தை மாத்திரம் உண்டாக்க வில்லை. அதிசயிக்கவும் செய்கிறது. எந்த நாட்டினருவது ஹாஸ்யத்தையோ, பாட்டையோ, நடனத்தையோ விரும்பாமல் இருப்பானு? அப்படி இவைகளை விரும்ப வில்லை என்றால் அவன் ஏன் சினிமாவுக்கு வரப் போகிறுன்? அல்லது மற்ற நாட்டவர்கள் தயாரிக்கும் படம் தான் இந்தலை அம்சங்களையும் கொண்டதாக இல்லையா? உதாரணத்திற்கு பல ஆங்கிலப் படங்களைச் சொல்லலாம். ஹிந்திப் படங்களைச் சொல்லலாம் ஆனுல் அவர்கள் எல்லோரும் அநேகமாக பன்னிரண்டாயிரம் அடிக்குள்ளாகவே தான் படம் தயாரிக்கின்றனர். இன்னும் சொல்லப் போனுல் பல நல்ல ஆங்கிலப் படங்கள் பத்தாயிரம் எட்டாயிரம் அடிகளுக்குள்ளாகவே தயாரிக்கப்பட்டிருக்கின்றன. பல நல்ல ஹிந்திப் படங்கள் பதினேராயிரத்திற்கும் குறைவான அடிகளிலேயே படம் பிடிக்கப்பட்டிருக்கின்றன. அவைகளுக்கு பொது ஜனங்களின் ஆதரவு அமோகமாக இருக்கின்றன. தமிழ் நாட்டில் அமோக ஆதரவு காட்டப் பட்டிருக்கின்றன. அப்படியிருக்க தமிழ்ப் படங்களுக்கு மட்டிலும் ஏன் பதினெட்டாயிரம் இருபதினுயிரம் அடி நீளம் வேண்டும்? தமிழ்ப் படம் என்ற காரணத்திற்காகவா?

யுத்த காலத்தில் பதினேருயிரம் அடிக்குள் தான் படம் தயாரிக்க வேண்டும் என்று சர்க்கார் சட்டம் இயற்றிற்று: அது காரணமாகச் சில படங்கள் அந்த அளவில் தயாரிக்கப் பட்டன. அவைகள் வெற்றி பெறவில்லையா? உதாரணமாக பதினேராயிரம் அடியே உள்ள "ஹரிதாஸ்" பொது ஜனங்களின் ரஞ்சகமான படமாகத் திகழவில்லையா? இப்படத்தில் பாட்டிற்கும், ஹாஸ்யம், நடனம் முதலியவைகளுக்குத் தான் குறைவா? பன்னிரண்டாயிரம் அடிப் படமான நாம் இருவர் தான் பொது ஜனங்களின் ஆதர



குமாரி சத்யபாமா பல இடங்களில் நாட்டிய மாடி வருகிறார்.

வைப் பெறவில்லையா? கவிச் சக்ரவர்த்தி பாரதியாரின் பாடல்கள் பலவற்றையும் கேட்டு மகிழ்ந்து அழகான நடனத்தையும் இதில் பார்க்க வில்லையா? இவைகளைக் கண்ட பிறகும் ஏன் இந்த விவாதம்என்றுதான் எனக்குப் புரிய வில்லை

தமிழ் நாட்டில் பலர் நினைத்துக் கொண்டிருப்பது இதுதான். பாட்டை பொது ஜனங்கள் விருப்புகிறார்கள். சரி போடு நிறையப் பாட்டுகளை! ஹாஸ்யத்தை விரும்புகிறார்கள். சரி போடு கதைக்குச் சம்பந்தமில்லாத ஒரு ஹாஸ்யத்தை. நடனமும் அப்படியே. இப்படியாக ஏதோ தாம் சாதித்து விட்டதாக நினைத்து பல அம்சங்களை எல்லையின்றி புகுத்தி படத்தின் நீளத்தை அதிகரித்து விடுகிறார்கள். இவர்கள் செய்யும் காரியத்திற்குப் பொது ஜனங்களின் மீது பழியையும் போட்டு விடுகிறார்கள். ஆனால் பொது ஜனங்கள் இவர்கள் சொல்வது போல் இருந்திருப்பார்களானால் சர்க்கார் பட நீளக் கட்டுப்பாட்டை குறித்து அறிக்கை விட்டதும் அதை ஆதரித்திருக்கவே மாட்டார்கள். அதற்காகத் தங்கள் நேரத்தை விரயம் செய்து!கொண்டு கூட்டம் கூடி, தீர்மானங்களை நிறைவேற்றி சர்க்காருக்கும் அதை அனுப்பியே இருக்க மாட்டார்கள்.

ஒரு படம் வெற்றி பெற வேண்டும் என்பதற்கு எனக்குத் தெரிந்தவரை இதுதான். படக்கதை, வசனம் நன்றாக இருக்க வேண்டும். ரசிகர்கள் விரும்புகிறார்கள் என்பதற்காக நல்லதாக சில பாட்டுகள் இருக்கலாம். பொழுது போக்கிற்காக ஓரிரு நடனங்கள், ஹாஸ்யத்தைக் கதையுடன் சேர்ந்ததாக அல்லது வசனங்கள் மூலமாகவும் சேர்க்கலாம். இத்துடன் ரஸிகர்கள் விரும்பும் நடிகர்களைப் போட்டு, நல்ல முறையில் படம் தயாரித்தால் கட்டாயம் படம் வெற்றி பெறும். படம் வெற்றி பெற படத்தின் கதையும் நடிகர்களின் நடிப்புமே முக்கியம். இதை விடுத்து வீணாக இவ்வளவு அடி நீளத்தில் பாடாவதியான படங்களைத் தயாரித்தாலதான் ரஸிகர்கள் ஆதரவு கொடுப்பார்கள் என்று வாதிப்பது வீணே. இவ்வாதங்கள் சுயநலனை உத்தேசித்தே அல்லாது உண்மையாக பொது ஜனங்களின் நன்மையை உத்தேசித்தோ அல்ல. அப்படி இவர்கள் வாதிப்பதாக இருந்தால் தமிழ் நாட்டில் பதினெட்டாயிரம், இருபதினாயிரம் அடி நீளத்தில் தயாரிக்கப்பட்டு தோல்வி கண்ட படங்களைப்பற்றி என்ன காரணம் சொல்வார்கள்? அல்லது ரசிகர்கள் நீளப் படங்களையே விருப்புகிறார்கள் என்றால் அதே ரசிகர்கள் ஒரு கதை நடைபெறும் காலத்தோடு ஏன் அப்படியே படமாக்கக் கூடாது என்று கேட்பதாக வைத்துக் கொள்வோம். கதை பத்து வருஷங்களில் நடப்பதாக இருந்தால் பத்து வருஷம்வரை படம் பார்க்கும் அளவிலல்லவா தயாரிக்க வேண்டும்? பாரத யுத்தம் பதினெட்டு நாட்களானால் பதினெட்டு நாட்கள் பூராவும் ஓடும் படங்களைத்தானே தயாரிக்க வேண்டும்? இது சாத்தியமா என்றுதான் கேட்கிறேன்!

எதற்கும் ஒரு அளவு உண்டு, அதற்கு மிஞ்சி விட்டால் அது ரஸிக்காது. ஆகவே, கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு அதற்குள்ளாகவே எவ்வளவு நல்ல முறையில் ரசிகர்கள் விருப்பும் வண்ணம் படம் தயாரிக்கிறோமோ அவ்வளவும் நன்மை. முதலாளி தாம் தயாரிக்கும் படம் பொது ஜனங்களுக் காகத்தான் என்பதை முதலில் படத் தயாரிப்பாளர்கள் உணரவேண்டும். அப்படி உணர்ந்து விட்டால் பொதுஜனங்களுக்குப் பாதகமான காரியத்தைச் செய்ய மாட்டார்கள். வீண்வாதம் செய்வதாக இருந்தால் அவர்களை கடவுள்தான் காப்பாற்ற வேண்டும். பதிலையும் அவன் தான் சொல்லவேண்டும்.



திரையிடத் தயார்
T.S.துரைராஜ்
T.S.பாலையா
காளி N.ரத்னம்
M.R.சுவாமிநாதன்
K.K.பெருமாள்
குளத்துமணி
P.G.வெங்கடேசன்
N.S.நாராயண பிள்ளை
T.A.ஜெயலக்ஷ்மி
C.T.ராஜகாந்தம்
P.R.மங்களம்
P.S.ஞானம்
M.S.கண்ணுபாய்
MARAKATHA PICTURES
EXTENSION SALEM
பிழைக்கும் வழி
A.மித்ரதாஸ்
D.V.பட்டம்மாள்
A.P.கோமளம்
கதை. வசனம். பாட்டு
மதுரை T.A.சுந்தர வாத்தியார்
மாடர்ன் தியேட்டர்ஸ். சேலம்
மரகதா பிக்சர்ஸ்
எக்ஸ்டென்ஷன் சேலம்
E.P.
VENDHAN

இது செய்தி

செய்திப் படத்திற்குத் தடை

ஹைதராபாத்தில் சூடுவதை நிறுத்து என்ற செய்திப் படத்தை அதில் ஆதாரமில்லாத சில காட்சிகள் இருப்பதால், மாகாணம் எங்கும் திரையிடக் கூடாதெனை மத்திய மாகாண சர்க்கார் தடை செய்திருக்கின்றனர்.

சாபுவின் திருமணம்

பல ஆங்கிலப் படங்களில் நடித்துள்ள, மைசூரைச் சேர்ந்த யானைப் பையன் சாபுவின் திருமணம் இம் மாதம் 20ம் தேதி ஹாலிவுட்டில் நடைபெற்றது. சாபு தற்பொழுது நடித்து வரும் இந்தியாவின் கீதம் என்ற படத்தில் நடிக்கும் மேரிலின் கூப்பர் என்ற நடிகையை மணந்து கொண்டிருக்கிறார்.

வேதாள உலகம் இசைத் தட்டுகள்

வேதாள உலகம் தமிழ்ப் படத்தின் சில பாட்டுக்களை சரஸ்வதி ஸ்டோர்ஸார் ஏழு கொலம்பியா இசைத் தட்டுகளில் வெளியிட்டுள்ளார்கள். டி. கே. பட்டம்மாள் பாடியுள்ள 'தீராத விளையாட்டுப் பிள்ளை', 'பாம்பாட்டி பாட்டு' முதலிய பல இனிய பாட்டுகள் அவைகளில் அடங்கியுள்ளன.

உதவி நாடகம்

எழுத்தாளர் ஸ்ரீ. வ. ரா. வின் நிதிக்கு, டி. கே. எஸ். சகோதரர்கள் இம் மாதம் 20ம்தேதி தங்கள் ஔவையார் நாடகத்தின் வசூலைக் கொடுத்து உதவினார்கள். அன்றைய நாடகத்திற்கு 'சுதேசமித்திரன்' ஆசிரியர் ஸ்ரீ. ஸி. ஆர். ஸ்ரீனிவாஸன் தலைமை வகித்தார்.

சினிமாத் தொழிலாளர் கூட்டம்

தென்னிந்திய சினிமாத் தொழிலாளர் சங்கத்தின் சார்பில் இம் மாதம் 17ம் தேதி ஒரு கூட்டம் நடைபெற்றது.

சென்னை அரசாங்கத்தின் அபிவிருத்தி இலாகா கூட்டுக் காரியதரிசி ஸ்ரீ. கே. ஜி. மேனன் அவ்வமயம் பேசுகையில், சமீபத்தில் ஸான் பிரான்ஸிஸ்கோவில் நடைபெற்ற சர்வதேச தொழிலாளர் சங்க மகாநாட்டு நடவடிக்கைகளைப் பற்றி சுருக்கமாக எடுத்துக் கூறி உற்பத்தியைப் பெருக்குவதில் தொழிலாளர் நாட்டம் செலுத்த வேண்டும் என்றும், இதர

பாலாஜி பிக்சர்ஸின் லைலா மஜ்னு தமிழ்ப் படத்தில் நடிக்கும் ஜி. எம். பஷீர்.

நாடுகளில் இருப்பதைவிட, இந் நாட்டு தொழிலாளரின் நிலைமை அதிக மோசமாக இல்லை என்றும் கூறினர்.

சோவியத்-அமெரிக்க ஒப்பந்தம்

இம்மாதம் 19ம் தேதி, சோவியித்துடன் செய்து கொண்டுள்ள ஒரு புதிய சினிமாப் பட ஒப்பந்தத்தை, அமெரிக்க சலனப் பட சங்கத் தலைவர் எரிக் ஜான்ஸ்டன், வெளியிட்டுள்ளார். அந்த ஒப்பந்தத்தின்படி ரஷ்யா வாங்கும் அமெரிக்கப் படங்களின் மொழி பெயர்ப்பில் ரஷ்யா எதையும் சேர்க்க முடியாது. ஆனல் அவைகளில் தனக்கு விருப்பமில்லாத பாகங்களை ரஷ்யா நீக்கிக் கொள்ளலாம்.

நேரு நாடகங்கள் பார்த்தார்.

இம் மாதம் 18ம் தேதி லண்டனில், அன்னு லூகாஸ்டா என்ற நீக்ரோ நாடகத்திற்கு நேரு விஜயம் செய்தார். நீக்கிரோக்களின் வாழ்க்கையைச் சித்தரிக்கும் இந்த நாடகத்தில் நடித்தவர்கள் அனைவரும் நீக்ரோக்கள் தான். நாடகத்தின் இடை வேளையில் நேரு நடிகர்களை சந்தித்துப் பேசினர்.

மறு நாளும் நேரு, மெடியா என்ற ஒரு சோக நாடகத்திற்கு விஜயம் செய்தார்.

ஸ்டுடியோவில் தீவிபத்து

பூந்தமல்லி ஹைரோட்டில் உள்ள 'ஸதரன் ஸ்டுடியோ',வில் இம் மாதம் 20ம்தேதி ஒருபெரிய தீவிபத்து ஏற்பட்டது. தீயணைக்கும் என்ஜின்களின் உதவியால் மூன்று மணி நேரத்திற்குப் பிறகு தீ அணைக்கப் பட்டது. நெருப்புப் பிடித்த காரணம் தெரியவில்லை. ஸ்டுடியோ கட்டிடம் பூராவும் சேத மடைந்து விட்டதாகவும், பிலிம் சுருள்கள், காமிராக்கள் முதலியவைகள் சேதமடைந்திருப்பதாகவும் தெரிகிறது, நஷ்டம் ஒரு லக்ஷம் ரூபாய் இருக்குமெனச் சொல்லப்படுகிறது.

''கீத காந்தி''யில் நடனமாடியிருக்கும் குமாரி டி. கே. பட்டம்மாள்.

முத்தமிழ் நாடக சபா

நடிகர் கே. ஆர். ராம்சிங்கின் முயற்சியினல் சென்னையில் புதிதாக 'முத்தமிழ் நாடக சபா' ஆரம்பிக்கப் பட்டிருக்கிறது. இவர்களின் நாடகம் சீக்கிரமே சென்னை சௌந்தர்ய மஹாலில் ஆரம்பமாகும். முதல் நாடகம் இரத்த வேட்டை என்றும் கே. ஆர். ராம்சிங் பிரதம பாகத்தில் நடிப்பாரென்றும் தெரிகிறது.

பட்டம்மாளின் பரத நாட்டியம்

இம் மாதம் 24ம் தேதி பம்பாயில், ''கீத காந்தி''யில் நடனமாடியிருக்கும் குமாரி டி. கே. பட்டம்மாளின் பரத நாட்டியக் கச்சேரி நடை பெற்றது. ஸ்ரீ தியாகராஜ சபாவின் ஆதரவில் மேற்படி சபாவின் சங்கித வகுப்புக்கு நிதி சேர்க்க நடைபெற்ற மேற்படி கச்சேரி வெகு சிறப்பாக இருந்ததாம்.

அனைவருக்கும் எமது

தீபாவளி வாழ்த்துக்கள் !

அழகிய தங்கம், வைர
ஆபரணங்களுக்கும்,
உத்திரவாதமுள்ள
வெள்ளிப் பாத்திரங்
களுக்கும் நம்பிக்கை
யான இடம்

★

கே. ஆர். அண்டு சன்ஸ்

பெரியகடைவிதி :: கோயமுத்தூர்

தந்தி : BULLION

டெலிபோன் : 226

சினிமா ரஸிகர்கள் சங்கக் கூட்டம்

இம் மாதம் 20-ம் தேதி சினிமா ரஸிகர்கள் சங்கத்தின் ஆதரவில் ஒரு கூட்டம் நடைபெற்றது. 'ப்ரொஜக்ஷன் ஆப் இந்தியா பிக்சர்ஸை'ச் சேர்ந்த ஸ்ரீ. எஸ். எஸ். ஐயர் தலைமை வகித்தார். அவர் தெருக்களை சுத்தம் செய்தல் போன்ற சமூக சேவைகளை விளக்கும் செய்திப் படங்களின் மூலம் தேசத்தின் ஆரோக்கியத்திற்கு உதவ முடியுமென்று கூறினார்.

மீண்டும் நாட்டிய ராணி

ஜெமினி ஸ்டுடியோவில் தயாரித்து வந்த, பாஸ்கர் பிக்சர்ஸின் நாட்டிய ராணி படப்பிடிப்பு, வசுந்தராவுக்கும் முதலாளிக்கும் ஏற்பட்ட தகராறு காரணமாக பாதியில் நின்று போய் இருந்தது. மேற்படி படத்தை ஜெமினி ஸ்டுடியோஸார் தயாரித்து முடிக்கப் போவதாகவும், மேற்கொண்டு படம் ஆசாரியாவின் டைரெக்ஷனில் தயாராகும் என்றும் தெரிகிறது.

மது விலக்குக் கொண்டாட்டம்

இம்மாதம் 2-ம் தேதி மாகாணம் எங்கும் பூரண மது விலக்கு அமுலுக்கு வந்ததைக் கொண்டாட பிரதமர் ரெட்டியார் தலைமையில் சென்னையில் ஒரு கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தின் ஆரம்பத்தில் சூர்யகுமாரி தேசிய கீதம் பாடினார். பின்னர் ஹாஸ்ய நடிகர் என். எஸ். கிருஷ்ணன் மதுவிலக்கு சம்பந்தமான ஹாஸ்யப் பாட்டுகளை, நூதனமான பின்னணி வாத்தியங்களுடன் பாடினார்.

மந்திரி தலைமை வகித்தார்

பல வாரங்களாக வெற்றியுடன் நடைபெற்று வரும் டி. கே. எஸ். சகோதரர்களின் ஔவையார் நாடகம், இம்மாதம் 15ம் தேதி மந்திரி கனம் டி. எஸ். எஸ். ராஜன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. நாடகத்தை மந்திரி மிகவும் பாராட்டினார்.

அந்தமான் கைதி

டி. கே. எஸ். சகோதரர்கள் அடுத்தபடி இம்மாதம் 31-ம் தேதி முதல் அந்தமான் கைதியை நாடகமாக நடிக்கப் போகிறார்களாம். இந்த நாடகம் கு. ச. கிருஷ்ணமூர்த்தி எழுதியதாகும்.

ஆண்டு விழா

இம்மாதம் 11-ம் தேதி மாடர்ன் தியேட்டர்ஸின் 13-வது ஆண்டு விழா டைரெக்டர் ஸ்ரீ. டி. ஆர். சுந்தரம் அவர்கள் முன்னிலையில் நடை பெற்றது.

பிற்பகலில் விளையாட்டுப் போட்டிகள் நடந்தன. மாலையில் சரஸ்வதி பூஜையும் அதை அடுத்து தேநீர் விருந்தும் நடை பெற்றன. அது முடிந்ததும் காமினி குமார் சின்ஹா கோஷ்டியாரின் நாட்டியமும், 'கண்ணதாஸன்' எழுதிய உலகம் உருண்டை என்ற ஹாஸ்ய நாடகமும் நடை பெற்றன. வேல்சாமி கவி நன்றி கூற விழா இனிது முடிவடைந்தது.

'கலை' ஆசிரியர்களான பாசு தம்பதிகளின் புத்ரி சௌதாமினி "கீத காந்தி"யில் நடிக்கிறாள்.

படத்திற்குத் தடை

நேரு இந்தியாவைப் பாதுகாக்கிறார் என்ற செய்திப் படத்திற்கு பம்பாய் தணிக்கை போர்டார் அளித்திருந்த அனுமதியை, மேற்படி படத்தைத் திரையிடுவது விரும்பத் தக்கதல்ல என்ற காரணத்திற்காக, பம்பாய் சர்க்கார் ரத்து செய்து விட்டார்கள். இந்தச் செய்திப் படம் சமீபத்தில் ஹைதராபாத்தில் நடைபெற்ற போலீஸாரின் நடவடிக்கைகளைப் பற்றியதாகும்.

ஸினி டெக்னீஷியன்கள் சங்கக் கூட்டம்

இம்மாதம் 10-ம் தேதி நடைபெற்ற மேற்படி சங்கத்தின் கூட்டத்தில், பிரிட்டிஷ் செய்தி ஸ்தாபனத்தைச் சேர்ந்த எச். ஹ 'படவிமர்சனம்' என்பது பற்றிப் பேசினர்.

'ஜனகணமன' கூடாது

இந்தியாவின் தேசிய கீதான 'ஜன கண மன' என்று தொடங்கும் கீதத்தை எல்லோரும் ஏற்கக் கூடிய வகையில் அதற்கொரு மெட்டு அமைக்கும் வரை மேற்படி கீதத்தை சந்தர்ப்பா சந்தர்ப்பமின்றி எல்லோரும் உபயோகிக்கும் படி விடக் கூடாது என்று சென்னை சர்க்கார் உத்தேசித்திருக்கிறார்கள். ஆகவே கொட்டகைகளில் காட்சி முடிவில் 'ஜன கண மன'வைப் பாடக்கூடாதென சென்னை சர்க்கார் தீர்மானித்திருக்கிறது. அதற்குப் பதிலாக செங்கோட்டை மீது தேசியக் கொடி பறப்பதைக் காட்டலாம் என்றும், அந்த சமயம் எல்லோரும் எழுந்து நின்று மரியாதை காட்ட வேண்டும் என்றும் சர்க்கார் ஒரு அறிக்கை வெளியிட்டுள்ளார்கள்.

நீங்கள் விரும்பும்
சினிமா ஸ்டைலில் போட்டோ
எடுத்துக்கொள்ளத் தகுதியான இடம்
பாரத் ஸ்டுடியோ
மவுண்ட் ரோட் போஸ்ட் ஆபீஸ் எதிரில்
போன் - 8172 மதராஸ் 2
சினிமா நக்ஷத்திரங்களுக்கு
பிடித்தமான இடமும் இதுவே!
நீங்களும் குறைந்த செலவில் சினிமா
நக்ஷத்திரங்களைப்போல் போட்டோ
எடுத்துக்கொள்ளுங்கள்.

குமாரி ருக்மணியின் பரத நாட்டியம்

இம்மாதம் 10-ம் தேதி தியாகராய நகர் வாணி மஹாலில் குமாரி ருக்மணியின் பரதநாட்டியக் கச்சேரி ஒன்று நடை பெற்றது.

நவாபின் உதவி

சமீபத்தில் மதுரையில் ஏற்பட்ட ஒரு தீ விபத்தில், தீயினால் கஷ்டப்பட்டவர்களுக்கு நவாப் ராஜமாணிக்கம் தம்முடைய இரு நாளைய நாடகங்களின் வசூலைக் கொடுத்து உதவினாராம்.

புஷ்பாஞ்சலி

பெங்களூரில் ஆரம்பமாகியிருக்கும் ஸாய் ப்ரொடக்ஷன்ஸ் என்ற கம்பெனியார் புஷ்பாஞ்சலி என்ற தமிழ்ப் படத்தைத் தயாரிக்கப் போவதாக அறிவித்திருக்கிறார்கள்.

சேம்பரின் வேண்டுகோள்

இம்மாதம் 17-ம் தேதி நடைபெற்ற தென்னிந்திய பிலிம் சேம்பரின் பொதுக் கூட்டத்தில், படத்தின் நீளத்தை ஒரே அடியாகக் குறைக்க வேண்டாமென இந்திய சர்க்காரைக் கேட்டுக் கொள்வதாக ஒரு தீர்மானம் நிறைவேற்றப் பட்டது. படங்களின் நீளத்தை ஓரளவாவது குறைத்துத் தான் ஆகவேண்டும் என்ற அவசியம் ஏற்பட்டாலும் தென்னிந்தியப் படங்களுக்கு மட்டும் குறைந்தது 13,500 அடி வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டது.

மின்மினி
திறமையும், புரட்சியும் கொண்ட ஒரு
ஆசிரியரின் வாழ்க்கைச் சித்திரம்.
மேனகா, விஜய குமார், கிருஷ்ணசாமி,
யோக மங்களம்
முதலியோர் நடிப்பது
ப்ரகதி, பாரதி பிக்சர்ஸ் கூட்டுத் தயாரிப்பு

நாய்களும் நக்ஷத்திரங்களும்

"டைரிகீபர்"

இந்தத் தலைப்பைப் பார்த்ததும் ஆச்சரியப் படுவீர்கள்! நக்ஷத்திரங்களுக்கும் நாய்களுக்கும் என்ன சம்பந்தம்? அப்படி யிருந்தாலும் இந்த 'ஆசாமி' எதை எழுதப் போகிறார்? என்றெல்லாம் உங்கள் மனது எண்ணத் தொடங்கி விடும். ஆனால் என்னுடன் பழகியவர்களுக்கு ஒரு விஷயம் எளிதில் புலப்பட்டு விடும். அதாவது நக்ஷத்திரங்களுக்கும் நாய்களுக்கும் சபபந்தம் இருக்கிறதோ, இல்லையோ, எனக்கும் நாய்களுக்கும் ஒரு வித 'சம்பந்தம்' இருக்கிறது என்று தான் சொல்கிறேன்.

பேபி மோஹனாவின் பரத நாட்டிய அரங்கேற்றம் இந்த மாதம் 14-ந் தேதி கோகலே ஹாலில் நடைபெறும்.

என் ராசிக்கும் இந்த நாய்களின் ஜாதகத்துக்கும் ஆகாது போல் இருக்கிறது. அனுபவ பூர்வமாக எனக்குத் தெரிந்திருந்தாலும், இப்பொழுது தான் பத்திரிகைகளில் ஜோதிடப் பகுதி வருகிறதே, அதுவும் இந்த உண்மையை ஊர்ஜிதப் படுத்திற்று.

என்னிடம் முதலாக சினேகிதத்தைப் பெற்ற நபர் ஒருவர், 'என்ன மிஸ்டர்! இந்த நாய்களையும் எருமை மாட்டையும் கண்டால் பயந்து ஓடுகிறீர்?' என்பார். நான், பள்ளியில் படித்த நாள் முதல் பத்திரிகையில் பேனா பிடித்து எழுதிய நாட்கள் வரை (இன்னமும் தான்) நாய்களுடன் பழகியாக வேண்டியிருக்கிறது. அந்த ஆத்மாவுக்கு நான் மனதால் கூட தீங்கிழைக்க நினைத்ததில்லை. ஆனால் அந்த 'பைரவ' வம்சத்தாருக்கு என்னிடம் இவ்வளவு விசேஷ 'அனுதாபம்' ஏற்பட்டு விட்டது! எல்லாம் நான் கொடுத்து வைத்தது.

அன்று முதன் முதல் பள்ளிக்கூடம் போகும் வழியில் உள்ள ஒரு கருப்பு நிற நாயை தெரியாது மிதித்து விட்டதின் பலன், இன்றைய வரை அதன் 'சாபக் குரல்' என்னை சூழ்ந்து கொண்டு தான் வருகிறது. இது தான் போகட்டும். பள்ளிப் படிப்பு முடியும் வரை எத்தனையோ வித (பைரவர்களின்' மிரட்டல்களையும் அதிகா

க்யூவில் நில்லுங்கள்
சினிமா டிக்கட் வேண்டுமா சார்!
டிக்கட் வேண்டுமானால் 'க்யூ'விலே நில்லுங்க

ரத்வனிகளையும்கேட்டுக் கீழ்ப்படிந்து) வழிவிட்டு, சுவரேறிக் குதித்து, ரோட்டையெல்லாம் சுற்றிக் கொண்டு, ஒரு பர்லாங் தூரத்தில் கடந்து விடும் பாதையை விட்டு, மூன்று பர்லாங் தூரம் வரை, அந்த 'பைரவர்களுக்காக'ச் சென்றிருக்கிறேன். இந்த பரிதாபங்களை யெல்லாம் பார்த்தாவது, என் 'காலக்ஷேப வாழ்க்கை'யில் அவை குறுக்கிடாமல் இருக்கலாமல்லவா? அது தான் இல்லை. அப்படியிருந்தால இந்தக் கட்டுரையை எழுத வேண்டிய அவசியமே ஏற்பட்டிராதல்லவா?

எங்கோ ஆரம்பித்து எங்கோ போகிறேனே என்று நினைக்கிறீர்களல்லவா? ஆமாம்! இந்த 'நாய்கள்' சமாச்சாரத்தை ஆரம்பித்தாலே இந்த சுற்று வழி தான்.

அப்பப்ப! அவைகள் பார்க்கும் பார்வையின் அர்த்தம் எனக்குத் தான் விளங்கும். அவைகளின் பலவித உறுமல்களின் சப்தத்தின் அர்த்தமும் என் போன்றவர்களுக்குத் தான் விளங்கும். சில நாய்களுக்கு தங்கள் வீட்டு வாசற்படியோரமாகக் கூடப் போகக் கூடாது. சர்க்கார் 'என்குரோச்மெண்ட்' என்று குற்றப் பத்திரிகை சாட்டுவார்களே! அது போல அவைகள் வாழும் வீட்டு வாசற்படி ஓரமாகக் கூட நான் போகக் கூடாதாம். மற்றொரு ரகம் உண்டு. அதன் பார்வையும் நம் பார்வையும் சந்திக்க நேரிட்ட போது ஒரு தினுசாக உறுமும். இது 'அபாய அறிவிப்பின்' அறிகுறி. அதை நாம் பார்க்கவும் கூடாது. வீட்டுக்குள்ளே வரவும் கூடாது என்பதற்கு அடையாளம். மற்றொரு ரகம் உண்டு. இது ஸி ஐ. டி. போலீஸ் ஆசாமி மாதிரி. இருக்குமிடம் தெரியாமல் படுத்திருக்கும். அது இருப்பதாகவே நமக்குத் தெரியாது. ஒரு சில வேளைகளில் அதன் பக்கத்திலேயே கூட நாம் நின்று கொண்டிருப்போம். திடீரென குரைக்கும் சப்தம் கேட்டு திடுக்கிட்டு விடுவோம்! இத்யாதி கைங்கர்யங்களை யெல்லாம் நான் வெளி வாழ்க்கையில் அனுபவித்து, அலுத்து விட்டு, (பயப்பட்டு என்றே கூறலாம்) சினிமாப் பத்திரிகைத் தொழிலில் இறங்கினேன். நல்ல வேளையாக நான் இத்தொழிலில் இறங்கிய புதிதில் ஒரு நக்ஷத்திரமும் நாய்களை வளர்க்கவில்லை. இந்த நிலைமை நீடித்திருக்கக் கூடாதா என்று சில சமயம் நான் எண்ணியதுண்டு. இப்போது அல்ல. இப்பொழுது தான் பண்பட்ட பைரவ குணம் அறிவோனாகி விட்டேனே! இப்பொழுது நாய்களை வளர்க்காத நக்ஷத்திரங்களே இல்லை எனலாம். நக்ஷத்திரங்களை நாம் பார்[illegible]ருமோ இல்லையோ, அவர்களது [illegible]க்காப்பாளராகிய இந்த [illegible] நக்ஷத்திர பைரவர்களை தரிசிக்காமல் இருக்க மாட்டோம். இதில் விசேஷமென்னவென்றால் நக்ஷத்திரங்களுக் கேற்றாற் போல அவர்கள் வளர்க்கும் நாய்

கோவையில்

அழகிய போட்டோ

பிடிக்குமிடம்

நேரு ஸ்டுடியோ

(Prop. C. A. ராகவன்)

மில் ரோடு,

கோயம்புத்தூர்

ஜெமினி
ஸ்டுடி
யோவில்

அதிவேக
மாக தயா
ராகிறது

ஸ்ரீ ராஜராஜேஸ்வரி பிலிம் கம்பெனியின்

நவ ஜீவனம்

நீங்கள் பார்த்து களிக்க விரும்பும் சிறந்த
தமிழ் சமூக சித்திரம்

நடிகர்கள்

நாகய்யா
ஸ்ரீராம்
T. R. ராமச்சந்திரன்
L. நாராயண ராவ்
C. V. V. பந்துலு

கண்ணாம்பா
வரலக்ஷ்மி
T. A. ஜெயலக்ஷ்மி
பேபி ராஜாமணி

மற்றும் பலர்

டைரெக்ஷன்:
K. B. நாகபூஷணம்

வசனம்:
"உதயகுமார்"

சங்கீதம்:
S. V. வெங்கட்ராமன்

இது ஒரு ஜெமினி வெளியீடு.

களும் அமைந்து விடுகிறது. சில உதாரணங்களைப் பார்ப்போம்.

சினிமா உலகத்தில் சின்னப்பா வெகு கரெக்டான நபர். அனாவசியமாக யாருடனும் வலுச் சண்டைக்குப் போக மாட்டார். வந்த சண்டையை விடமாட்டார். அதே போல அவரது நாயும், அனாவசியமாக உள்ளே நுழைபவர்களை விடமாட்டேனென்கிறது. பலே 'கரெக்டாக' தன் வேலையைச் செய்து வருகிறது. அந்த நாய் இன்னும் இருக்கிறதோ இல்லையோ எனக்குத் தெரியாது.

எம். வி. ராஜம்மா மிகவும் அடக்க ஒடுக்கமாக எப்பொழுதுமே உள்ளே இருப்பவர். அவசியமிருந்தால்தான் வந்து போவார். அதே போல அவரது நாய்களும் அடக்க ஒடுக்கமாக இருந்த இடம் தெரியாமல் பதுங்கி இருக்கின்றன. யாராவது வந்தால் தான் தனது 'வரவேற்பை' அவைகளில் ஒன்று தெரிவிக்கும்.

பானுமதி, மிகவும் சுறுசுறுப்புடனும், குஷியாகவும் இருக்கிறார் அல்லவா? இதே போல அவர் வீட்டு நாயும், ஒரு இடத்தில் உட்காராமல் சுற்றிச்சுற்றி வந்துகொண்டு 'ஓஹோ ஹோ' (லொள் லொள்) தெரிவித்த வண்ணமே இருக்கிறது.

நடிகர் ஹொன்னப்பா பரம சாது. இவரைப் போலவே இவர் வீட்டு ஜானியும் பரம சாது. அதிகமாக குரைக்கக் கூடத் தெரியாமல், யார் வந்தாலும், கம்மென்று வரவேற்றவண்ணமிருக்கிறது.

எம். கே. ராதா எப்பொழுதுமே, 'பார்த்தால் பசு, பாய்ந்தால் புலி' என்ற உதாரணத்துக்குள்ளாகிற மனுஷ்யர். இவருக்கேற்றாற் போல அவர் வீட்டிலுள்ள இரண்டு பெரிய நாய்களும் பார்ப்பதற்குச் சாது போல தோன்றினாலும், அவர்கள் பண்ணுகிற ஆர்ப்பாட்டமும், அன்னியரைக் கண்டால் உறுமுவதையும் சொல்லவே முடியாது. என்ன பொருத்தம் பார்த்தீர்களா?

நடிகை புஷ்பவல்லி, மிகவும் நாசூக்காக இருப்பவர். இவரைப் போலவே இவர் வளர்க்கும் நாயும் நாசூக்காக மாடியிலிருந்தே தனது வேலைகளைக் கவனித்து வருகிறது.

இதெல்லாவற்றையும் விட, கே. எல். வி. வசந்தா, முன்பு சென்னையிலிருந்த போது வளர்த்து வந்த நாய் இருக்கிறதே! அதை நினைத்தால்தான் பரிதாபமாக இருக்கிறது. முன்பு வஸந்தா சென்னையிலிருந்த பொழுது எவ்வளவு செல்வாக்குடனும் புகழுடனும் இருந்தாரோ அத்தனை மதிப்புடன் அதுவும் இருந்து வந்தது. படங்களில் கூட நடித்தது. அவர் சென்னையை விட்டு சென்ற பின், அவரது புகழ் சிறிது சிறிதாக மறைந்தது போல அந்த நாயின் கதியும் அதோ கதியாகி விட்டது!

முன்பு டி. ஏ. மதுரம் ஒரு நாய் வளர்த்து வந்தார். அவர் எல்லோரிடமும் எவ்வளவு சகஜமாகவும் அன்புடனும் பேசுவாரோ அது போலவே அவரது நாயும் இருந்ததாம். என். எஸ். கிருஷ்ணன் கூறுவது போல அன்பு அதிகமாகப் போனால் ஆபத்து என்கிற மாதிரி அந்த நாய்க்கு ஸ்ரீமதி மதுரத்தின் பேரிலுள்ள அன்பு அதிகமாகி அவரையே கடித்து விட்டது. பொல்லாத நாய்!

இது மட்டுமல்ல! என். எஸ். கே. சிறை சென்றவுடன் அவரது அத்யந்த நண்பர்கள் எத்தனையோ நபர்கள் வருத்தப் பட்டார்கள். ஆனால் அவர் வளர்த்த (கோயம்புத்தூரிலோ அல்லது ஸ்ரீரங்கத்திலோ என்று ஞாபகம்) நாய் அழுத மாதிரி யாரும் வருந்தப் பட்டிருக்க மாட்டார்கள் என்று ஒருவர் கூறினார்.

ஏக காலத்தில் 25 தியேட்டர்களில்
வெளிவருகிறது.

பில்ஹணை அல்லது கவியின் காதல்

ஸ்டுடியோ :
ப்ரகதி

டைரெக்ஷன் :
B. N. ராவ்

நடிகர்கள் :
K. R. ராமசாமி, A. R. சகுந்தலா, R. பாலசரஸ்வதி, M. ஜயஸ்ரீ,
G. சகுந்தலா, S. M. ஷெயிகப்பா, புளிமூட்டை, அங்கமுத்து &
கவிமண்ணு

பிரதேச உரிமைகளுக்கு :
மைசூர், குட்கு, தென்கன்னடம் K. V. ஆதிநாராயணன் செட்டி,
S. R. திவாகர செட்டி, கொள்ளேகாலம், N. R. வட, தென் ஆற்காடு,
பாண்டிச்சேரி, சித்தூர் உள்பட.

விஜயஸ்ரீ பில்ம்ஸ், பிராடீஸ் ரோடு, மைலாப்பூர், சென்னை-4.
சிலோன் எண்டர்டெயின்ட்மெண்ட்ஸ் பிக்சர்ஸ் லிமிடெட், கொழும்பு.

இதர உரிமைகளுக்கு :
R. M. பாஷா, மானேஜிங் டைரக்டர்
முபாரக் பிக்சர்ஸ், 47, லாங்ஸ் கார்டன் ரோடு, சென்னை-2.

ஸ்வர்ண பில்ம்ஸாரின்

நவம்பர் வெளியீடு



ஹொன்னப்ப பாகவதர், லக்ஷ்மிபாய்,
ராகவேந்திரராவ் முதலியோர் நடித்தது.

கதை, வசனம் : "சுரபி"

சங்கீதம் : ஸி. எச். பாகவதர்

பாட்டுகள் :—கே ஆர். எஸ். சாஸ்திரி.

டைரெக்ஷன் :—பொமன். டி. இரானி, பி. புல்லய்யா.

ஸ்டுடியோ—பிரகதி.

—விவரங்களுக்கு—

ஸ்வர்ண பில்ம்ஸ்,

C/o பிக்சர் போஸ்ட், சென்னை. 17

பிரம்மலோகம்

ஔவையார்

ஜெமினி ஸ்டுடியோவில் "ஔவையார்" படப்பிடிப்பு வெகு துரிதமாக நடைபெற்று வருகிறது. கே. பி. சுந்தராம்பாள் ஔவையாக நடிக்கும் இப்படத்தை கொத்தமங்கலம் சுப்பு டைரெக்ட் செய்து வருகிறார்.

சக்ரதாரி

ஜெமினியின் மற்றொரு படமான "சக்ரதாரி" விரைவில் வெளிவந்து விடுமாம். நாகையா பாடியுள்ள சில பாடல்கள் மெய் மறக்கச் செய்யும் முறையில் அமைந்திருக்கின்றனவாம். புஷ்பவல்லி, நாகர்கோவில் மகாதேவன், கே. என். கமலம், எல். நாராயணராவ் மற்றும் ஜெமினி நடிகர்கள் பலர் நடிக்கும் இப்படத்தை கே. எஸ். கோபாலகிருஷ்ணன் டைரெக்ட் செய்துள்ளார்.

நவஜீவனம்

ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரி பிக்சர்ஸின் "நவஜீவனம்" படப் பிடிப்பு ஜெமினி ஸ்டுடியோவில் நடந்து வருகிறது. நாகையா, கண்ணாம்பா, ஸ்ரீராம், வரலக்ஷ்மி, பேபி ராஜாமணி, டி ஆர். ராமச்சந்திரன் முதலியோர் நடிக்கும் இப்படத்தை நாகபூஷணம் டைரெக்ட் செய்து வருகிறா. இப்படத்திற்கான, வசனத்தை 'உதயகுமா'ரும், பாடல்களை கம்பதாஸனும் இயற்றியுள்ளார்கள்.

கல்பனா

ஜெமினி ஸ்டுடியோவில் தயாரான "கல்பனா" என்ற நாட்டியப் படத்தின் தமிழ் நாட்டின் வினியோக உரிமைகளை ஜெமினி பிக்சர்ஸார் வாங்கியுள்ளனர்.

சீக்கிரமே இப்படம் தமிழ் நாடெங்கும் திரையிடப் பட இருக்கிறது. உதயசங்கர், மற்றும் தற்பொழுது பிரபலமாக உள்ள திருவனந்தபுரம் சகோதரிகள் முதலியோர் இப்படத்தில் நாட்டியமாடி இருக்கிறார்கள்.

நல்ல தம்பி

சீக்கிரமே திரையிடப் படவிருக்கும் படங்களில் என்னெஸ்கே பிலிம்ஸின் "நல்ல தம்பி"யும் ஒன்றாகும் இப்படத்தின் கதை தற்காலத்திய பலபிரச்னைகளை அடிப்படையாகக் கொண்டதாக இருக்குமாம். ஒரு ஜமீன்தார். பணத்தாசை பிடித்தவன். குடிகளிடம் அதிகமாக வரிவிதித்து வசூலிக்கிறான். அவனுக்கு ஒரு மகள். முற்போக்குக் கொண்டவள். அதே கிராமத்தில் சீர்திருத்த யுவன் ஒருவன் இருக்கிறான் ஜமீந்தார் மகளும் சீர்திருத்த யுவனும் காதலிக்கின்றனர். இருவரும் குடிகளின் குறைகளையும், அவர்களுடைய மூடக் கொள்கைகளையும் போக்க அரும்பாடு படுகின்றனர். இப்படியாகப் பல நல்ல கருத்துக்களுடன் கூடியது நல்ல தம்பி. இக் கதையை ஸி. என். அண்ணாதுரை எழுதியிருக்கிறார். டைரெக்ஷன் கிருஷ்ணன், பஞ்சு. பானுமதி, ஸகஸ்ரநாமம், கிருஷ்ணன், மதுரம் மற்றும் பலர் இப்படத்தில் நடிக்கின்றனர். நியூடோன் ஸ்டுடியோவில் மும்முறமாக தயாராகி வருகிறது.

கிருஷ்ண பக்தி

கிருஷ்ணா பிக்சர்ஸின் "கிருஷ்ண பக்தி" அநேகமாக தயாராகி முடிவடைந்து விட்டதாம். டி. ஆர். ராஜகுமாரி, பி. யு. சின்னப்பா, பி. ஏ. பெரியநாயகி உள்ளிட்ட பல நக்ஷத்திரங்கள் நடிக்கும் இப்படத்தை டைரெக்டர் ஆர். எஸ். மணி வெகு சிறந்த முறையில் தயாரித்து முடித்திருக்கிறாராம். இப்படம் அதிவிரைவில் திரையிடப்பட இருக்கிறது.

லைலா மஜ்னு

பாலாஜி பிக்சர்ஸாரின் "லைலா மஜ்னு" படத்திற்காக டி. ஆர். மஹாலிங்கத்தின் சில பாடல்கள் பதிவு செய்யப்பட்டனவாம். நாகூர் டைரெக்ட் செய்கிறார் படப்பிடிப்பும் சீக்கிரமே நியூடோன் ஸ்டுடியோவில் ஆரம்பமாகும்.

பில்ஹணா

முபராக் பிக்சர்ஸின் "பில்ஹணா" இம்மாதம் முதல் தேதி இலங்கையில் திரையிடப்பட்டு வெற்றிகரமாக நடைபெற்று வருகிறதாம். கே. ஆர். ராமசாமி, ஏ. ஆர். சகுந்தலா,

பால சரஸ்வதி, ஜயஸ்ரீ, புளிமூட்டை, களிமண்ணு ஆகியோர் நடிக்கும் இப்படத்தை பி. என். ராவ் டைரெக்ட் செய்துள்ளார். தமிழ் நாட்டில் தாங்களே இப்படத்தைத் திரையிட முபராக் பிக்சர்ஸார் ஏற்பாடு செய்து வருகிறார்கள்.

தேவமனோஹரி

ஆர். கே. எஸ். பிக்சர்ஸாரின் "தேவமனோஹரி"யின் படப்பிடிப்பு பிரகதி ஸ்டுடியோவில் ஏ. டி. கிருஷ்ணசாமியின் டைரெக்ஷனில் நடைபெற்று வருகிறது. பி. எஸ். சரோஜா, ஹொன்னப்ப பாகவதர், வி. ஆர். லக்ஷ்மி, காளி என். ரத்னம் ஆகியோர் முக்கிய நடிகர்கள்.

ரக்ஷரேகா

டைரெக்டர் ஆர், பத்மநாபன் 'ரக்ஷரேகா" என்ற தெலுங்குப் படத்தை நெப்டியூனிலும், பிரகதியிலுமாகத் தயாரித்து வருகிறார்.

மின்மினி

பாரத் பிக்சரஸ் பிரகதி ஸ்டுடியோ கூட்டுத் தயாரிப்பான "மின்மினி" முக்கால் பாகம் முடிவடைந்து விட்டதாம், மேனகா, யோக மங்களம் விஜயகுமார் பிரதம பாகங்களில் நடிக்கும் இப்படத்தின் கதை, வசனங்களை, "சிரஞ்சிவி" எழுதியிருக்கிறார்.

தேவ குமாரி

ஸ்டார் கம்பைன்ஸ் ஸ்டுடியோவில் "தேவ குமாரி" படத்திற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன ஹரிபாய் தேசாய் டைரெக்ஷனில் தயாராகும் இப்படத்தில் மேனகா, துளசி முதலியோர் நடிக்கின்றனர்.

பிழைக்கும் வழி

மரகதா பிக்சர்ஸாரின் "பிழைக்கும் வழி" இம்மாதம் 22-ம் தேதி சேலத்தில் திரையிடப்பட்டு விட்டது. மற்றும் பல நகரங்களில் தீபாவளியன்று திரையிடப்பட இருக்கிறது. டி. எஸ். துரைராஜ், டி. ஏ. ஜெயலக்ஷ்மி, டி. எஸ். பாலையா, முதலியோர் நடித்துள்ள இப்படத்தை மித்ரதாஸ் டைரெக்ட் செய்திருக்கிறார்.

ஆதித்தன் கனவு

மாடர்ன் தியேட்டர்ஸின் 'ஆதித்தன் கனவு' மள மள வென்று தயாராகி வருகிறதாம். டி. ஆர். மஹாலிங்கம், ரஜனி, அஞ்சலி தேவி முதலியோர் நடிக்கும் இப்படத்தை டைரெக்டர் டி. ஆர். சுந்தரம் ஒரு சிறந்த படமாகத் தயாரிக்க முயற்சித்து வருகிறார்.

மோஹினி

தீபாவளி அன்று திரையிடப்பட இருக்கும் படங்களில் ஒன்றான ஜுபிடர் பிக்சர்ஸின் "மோஹினி" பல அற்புதங்கள்—நிறைந்த கதை. மாயாஜாலக் காட்சியும், மயக்கும் குதிரையும் பார்ப்பவர்களை பிரமிக்கச் செய்யுமாம். வி. என். ஜானகி, மாதுரி தேவி, டி. எஸ் பாலையா, எம். ஜி ராமச்சந்திரன் முதலியோர் நடிக்கும் இப்படத்தில் லலிதா-பத்மினி சகோதரியரின் நேர்த்தியான நடனமும் இருக்கிறதாம்.

கிருஷ்ண விஜயம்

என். ஸி. வஸந்தகோகிலம் நாரதராக நடிக்கும் ஜுபிடரின் "கிருஷ்ண விஜயம்" சுந்தர் ராவ் நட்கர்னியின் டைரெக்ஷனில் கோவை சென்ட்ரல் ஸ்டுடியோவில் தயாராகி வருகிறது.

வேலைக்காரி

ஜுபிடரின் அடுத்த வெளியீடாக இருக்குமாம் 'வேலைக்காரி.' கே. ஆர். ராமசாமியும், எம். வி. ராஜம்மாவும் பிரதம பாகங்களில் நடிக்கும் இப்படத்தை ஏ. எஸ். ஏ. சாமி டைரெக்ட் செய்கிறார். கதை, வசனம் ஸி. என். அண்ணாத்துரையுடையது.

பவளக் கொடி

கோவை பக்ஷிராஜா ஸ்டுடியோவில் ஸ்ரீராமுலு நாயுடுவின் டைரெக்ஷனில் "பவளக்கொடி" மள மள வென்று தயாராகி வருகிறது. ராஜகுமாரி, சரோஜினி, வரதன், மஹாலிங்கம், கிருஷ்ணன், மதுரம் முக்ய நடிகர்கள்.

ராஜமுக்தி

நரேந்திரா பிக்சர்ஸின் "ராஜமுக்தி" இம்மாதம் 2வது வாரத்தில் பல இடங்களில் திரையிடப்பட்டு விட்டது. ஆந்திர நடிகை பானுமதி நடிக்கும் முதல் தமிழ்ப் படம் இது. பாகவதரின் பாட்டுகளும், சாமாவின் உன்னத நடிப்பும் ரஸிகர்கள் மனதைக் கவரலாம்.

மஹா ராணி

ஈஸ்வரி பிக்சர்ஸாரின் "மஹா ராணி" சம்மந்தமான பூர்வாங்க வேலைகள் முடிந்து விட்டனவாம். பானுமதி, பாலையா பிரதம பாகங்களில் நடிக்கும் இப்படத்தை வி எஸ். நாராயணன் டைரெக்ட் செய்வார் கதை, வசனம், பாட்டுகள் இவைகளுக்கு பொறுப்பாளி "கவியின் கனவு" எஸ். டி. சுந்தரம். சீக்கிரமே மைசூர் நவஜோதி ஸ்டுடியோவில் படப் பிடிப்பு ஆரம்பமாகும்.

குணசுந்தரி

பாலச்சந்தரின் பொறுப்பில் "குணசுந்தரி" பம்

பாய் ரஞ்சித் மூவிடோனில் தயாராகி வருகிறது. பாலச்சந்திரே இப்படத்தை டைரெக்ட் செய்வதுடன் பிரதம பாகத்தில் நடித்து வருகிருர். மற்றும் டி. கே. பட்டம்மாள், வி. சிதாராம் முதலியவர்களும் நடிக்கிருர்கள்.

நம் நாடு

பம்பாய் ராஜ்கமால் கலாமந்திர் ஸ்டுடியோவில் டைரெக்டர் சாந்தாராம் ஒரு தமிழ்ப் படத்தைத் தமது டைரெக்ஷனில் தயாரித்து வருகிருர். அவருக்கு உதவிசெய்ய சென்னையிலிருந்து, சில படங்களுக்கு வசனம் எழுதியுள்ள எஸ். ஏ. துரை போயிருக்கிருர்.

பாரிஜாதம்

லாவண்யா பிக்சர்ஸாரது "பாரிஜாதம்" சோபனுசலா ஸ்டுடியோவில் ஏ. டி. கிருஷ்ணஸ்வாமியின் டைரெக்ஷனில் உருவாகி வருகிறது. பி. எஸ். சரோஜா, டி. ஆர். மஹாலிங்கம். டி. ஏ. ஜெயலக்ஷ்மி, நாகர் கோவில் மஹாதேவன், கிருஷ்ணன், மதுரம் முதலியோர் நடிக்கும் இப்படத்தில் தாராசௌத்ரியின் நாட்டியமும் இருக்குமாம்.

ஸ்ரீ ஆண்டாள்

திரையிடத் தயாராக இருக்கும் படங்களில் "ஸ்ரீ ஆண்டாள்" ஒன்ருகும். பி. எஸ். கோவிந்தன், யூ. ஆர். ஜீவரத்னம், பிரதம பாகங்களில் நடிக்கும் இப்படத்தை மிகவும் சிரத்தையுடன் வேல்சாமிக் கவி டைரெக்ட் செய்திருக்கிருராம். பி. எஸ். கோவிந்தன் இப்படத்தில், கிழவன், வளையல்காரன் இப்படியாகப் பல வேஷங்களில் தோன்றி வெகு இனிமையாகப் பாடியிருக்கிருராம்..

இன்ப வல்லி

சியாமளா பிக்சர்ஸாரின் "இன்ப வல்லி" படப்பிடிப்பிற்கு ஆரம்ப வேலைகள் சேலம் ரத்ன ஸ்டுடியோவில் நடைபெற்று வருகின்றன. இப்படத்தில் மஹாலிங்கமும், பி. எஸ். சரோஜாவும் பிரதம பாகங்களில் நடிக்கிருர்கள். என். எஸ். கிருஷ்ணன், மதுரம் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ள இப்படத்தை எஸ். நோடாணி டைரெக்ட் செய்கிருர்.

ரத்ன குமார்

பி. யு. சின்னப்பா, பானுமதி பிரதம பாகங்களில் நடிக்கும் முருகன் டாக்கிஸாரின் "ரத்ன குமார்" படப் பிடிப்பு நியூடோன் ஸ்டுடியோவில் வேகமாக வளர்ந்து வருகிறது. இப்படத்தை கிருஷ்ணன் பஞ்சு டைரெக்ட் செய்கிருர்கள்.

கீத காந்தி

டைரெக்டர் கே. சுப்ரமண்யத்தின் தயாரிப்பான "கீத காந்தி" முடிவடைய இன்னும் இரண்டொரு காக்ஷிகளே பாக்கியிருக்கின்றதாம். காந்திஜியின் உபதேச சாரத்தை அடிப்படையாகக் கொண்ட இப்படத்தில் பி. எஸ். சரோஜா, பி. ஏ. பெரியநாயகி, வி. குமார், டி. கே. பட்டம்மாள் முதலியோர் நடிக்கின்றனர்.

கோகுலதாஸி

திரன் கம்பெனியாரின் "கோகுலதாஸி" திரையிடத் தேதியை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் [illegible] எம். வி. ராஜம்மாவும், ஹொன்னப்பாவும் நடிக்கிருர்கள்

நமது அன்பர்களுக்கு தீபாவளி வாழ்த்துக்கள்

ஸ்கூல் வ்யூ ஸ்டோர்ஸ்

எங்களிடம், குழந்தைகளுக்கு கிளாக்ஸோ, லக்டோஜன், ஹார்லிக்ஸ் முதலிய உணவு பொருள்களும், மாணவர்களுக்கு நோட் புஸ்தகம், பென்ஸில், பேனு, மை, எழுதும் காகிதம் முதலிய சாமான்களும்; பெண்மணிகளுக்கு, பௌடர் தினுசுகள், ஸோப்புகள், ஸ்நோ, ரிப்பன், ஹேர் ஆயில், வளையல்கள் முதலிய அழகு சாதனங்களும் மிட்டாய் தினுசுகள், பிஸ்கெட் வகைகள், இன்னும் எல்லாவிதமான ஷாப்பு சாமான்களும், மலிவான விலையில் நம்பிக்கையாக கிடைக்கும்.

96, தம்புசெட்டி தெரு, சென்னை-1.

(முத்தியாலுபேட்டை உயர்தரப்பள்ளிக்கு எதிரில்)

சினிமா டைரி



தேதி **செப்டம்பர், 1947**

4. நிருஷ்டி போதனுமுறைத் திட்டத்தைக் கார்ப்பொரேஷன் கமிஷனர் ஸ்ரீ. வி. நரசிம்மன் எழும்பூர் கார்பொரேஷன் பள்ளியில் ஆரம்பித்து வைத்தார்.

10. சாந்தாராமின் ஆங்கிலத் தயாரிப்பான "கோட்னிஸ்", "சகுந்தலா" ஆகிய இரு படங்களும், தென்னிந்தியாவிலிருந்து ஜெமினி "மங்கம்மா" (தமிழ்) வாஹினி "ஸ்வர்க்கசிமா" (தெலுங்கு) ஆகிய இரு படங்களும் வேனிஸ் படக்கண் காட்சிக்கு அனுப்பப்பட்டன.

19. நிருஷ்டி போதனுமுறைத் திட்டத்தை சர்க்கார் அங்கீகரித்தனர்.

அக்டோபர், 1947

10. வங்க கவர்னராக இருந்த ராஜாஜிக்கு நடந்த வரவேற்புக் கூட்டத்தில் [illegible] எஸ். கிருஷ்ணன், புளிமூட்டை ராமஸ்வாமி ஆகியோரின் "கிந்தனர்" காலக்ஷேபம் நடைபெற்றது.

20. பிரபல வட இந்திய நடிகர்களான சாஹூ மோதக்கும், லீலா சிட்னிஸும் சென்னைக்கு விஜயம் செய்தனர்.

24. விடுதலைக்குப் பின் எம். கே. டி. பாகவதர் நடிக்கும் முதல் படமான "ராஜ முக்தி"யின் ஆரம்ப விழா புனா பிரபாத் ஸ்டுடியோவில் நடந்தது.

நவம்பர், 1947

12. சென்னை சர்க்கார், சினிமோடோகிராப் சட்டத்தின் ஏழாவது விதியில் உள்ள கட்டண விகிதத்தை திருத்தம் செய்தனர்.

25. ஸ்ரீ. எஸ். எஸ். வாஸன், தமாஷா வரி சம்பந்தமாக விவாதிப்பதற்காக சட்டசபையின் செலக்ட் கமிட்டியினரால் அழைக்கப்பட்டார்.

29. சென்னை சட்டசபையில் தமாஷா வரி உயர்வு மசோதா சட்டமாக்கப்பட்டது.

டிஸம்பர், 1947

8. சென்னை சினிமா தணிக்கை போர்டு திருத்தி அமைக்கப்பட்டது

11. எம். எஸ். சுப்புலக்ஷ்மி (பம்பாயில்) தம் ஒரு கச்சேரி மூலம் ரூ. 98,000 வசூலித்து தென்னிந்தியக் கழகத்தின் கட்டிட நிதிக்கு உதவினர்.

14. இந்திய செய்திப்பட இலாகாவை புனருத்தாரணம் செய்வது பற்றிய திட்டத்தை, இந்திய சர்க்காரின் நிரந்தரப் பொருளாதாரக் கமிட்டி அங்கீகரித்தது.

ஜனவரி, 1948

1. புதிய தமாஷா வரி விகிதம் அமுலுக்கு வந்தது.

22. தமிழ் நாடு டாக்கீஸ் விநியோகிக்கும் "இது நிஜமா" தமிழ்ப் படத்தின் பிரத்யேகக் காக்ஷி, தொழிலில் உள்ள நண்பர்களுக்கும், பத்திரிகைக்காரர்களுக்கும் பிரபாத்தில் நடைபெற்றது.

30. நமது அரும் பெரும் தலைவர் மஹாத்மா காந்தி அமரத்வம் அடைந்தார்.

பிப்ரவரி, 1948

10. காந்திஜியின் ஈமக் கிரியைகளைக் காட்டும் ஒரு செய்திப் படம் லண்டனில் திரையிடப்பட்டது.

12. மஹாத்மாவின் அஸ்தி கரைப்பு விழா சம்பந்தமாக சென்னை தியேட்டர்கள் மூடப்பட்டன.

14. இந்திய தேசிய கீதம்பற்றி கே. சுப்ரமண்யம் இந்தியப் பிரதமருக்கு ஒரு தந்தியை அனுப்பினர்.

மார்ச்சு, 1948

2. சென்னையில் எல்லா தியேட்டர்களும், வாராந்திர விடுமுறையை அனுசரித்து, மூடப்பட்டன.

20. சேலம் மாடர்ன் தியேட்டர்ஸின் "ஆயிரம் தலைவாங்கி அபூர்வ சிந்தாமணி"யின் நூறுவது நாள் விழா

134111

சென்னை பிராட்வே டாக்கிஸில் ராவ்பகதூர் வி. நரசிம்மன் தலைமையில் நடைபெற்றது.

11. மத்திய தணிக்கை போர்டு ஒன்று அமைப்பது பற்றி பண்டித நேரு பார்லிமெண்டில் பேசினர்.

ஏப்ரல், 1948

4. சினிமா தியேட்டர் தொழிலாளிகள் ஏப்ரல் 9-ம் தேதிமுதல் வேலை நிறுத்தம் செய்யத் தீர்மானித்தனர்.

9. ஜெமினி "சந்திரலேகா" சென்னை கிரௌன், ஸ்டார், வெல்லிங்டன் ஆகிய மூன்று தியேட்டர்களிலும், மாகாணத்தில் மற்றும் முப்பத்தாறு தியேட்டர்களிலும் திரையிடப் பட்டது.

29. சென்னையில், ஜெமினி ஸ்டுடியோ தவிர, மற்ற எல்லா ஸ்டுடியோ தொழிலாளிகளும் வேலை நிறுத்தம் செய்தனர். இரு தொழிலாளிகள் உண்ணாவிரதமும் ஆரம்பித்தனர்.

மே, 1948

1. ஸ்டுடியோ 'ஸ்டிரைக்' முடிவடைந்தது.

11. சர்வதேச பொருளாதார சமூக கலா ஸ்தாபனத்தைச் சேர்ந்த அலெக்ஸாண்டர் ஷா சென்னைக்கு விஜயம் செய்தார்.

29. ஸெகரட்டரியேட்டில் நடைபெற்ற பிலிம் தணிக்கை போர்டு கூட்டத்தில் மந்திரி கனம் டி. எஸ். அவினாசிலிங்கம் பேசினர்.

ஜூன், 1948

9. சேலம் ரத்னா ஸ்டுடியோவை மந்திரி கனம் பி. கோபால் ரெட்டி ஆரம்பித்து வைத்தார்.

20. சினி டெக்னிஷ்யன்கள் சங்க வருஷாந்திரக் கூட்டம் நடந்தது.

26. பாரகன் டாக்கீஸுக்கு நிரந்தர லைசென்ஸ் கொடுக்க போலீஸ் கமிஷனர் மறுத்து விட்டார்.

ஜூலை, 1948

15. ஸ்டார் கம்பைன்ஸ் ஸ்டுடியோவின் ஆரம்ப விழா நடைபெற்றது.

பால போஷகா

பால போஷகா மாத்திரைகள், குழந்தைகளுக்கு, ஈரல் குலைக்கட்டி, மாந்தம், முதலிய நோய்கள் வரவொட்டாமல் தடுத்து போஷிக்கும்.

புட்டி ஒன்றுக்கு விலை ரூ. 1—0—0.

பண்டிட். S. S. மணி அய்யர்

சித்தமணி வைத்திய சாலை

சாதுல்லா தெருவு :: சென்னை 17.

20. தியேட்டர்களில் புகை பிடிக்கக் கூடாதென பம்பாய் மகாண சர்க்கார் உத்திரவு பிறப்பித்தது.

28. சினிமா தணிக்கை விஷயத்தில் தேசம் முழுமைக்கும் ஒரே கொள்கையை நிர்ணயிப்பதென தீர்மானிக்கப் பட்டது.

30. ஸ்டுடியோ தொழிலாளர்களின் சம்பள விகிதத்தைப் பற்றி தொழில் கமிஷனர் ஒரு சிபாரிசை வெளியிட்டார்.

8. சினி டெக்னிஷ்யன்கள் கூட்டத்தில் தொழில் கமிஷனரின் சிபாரிசைக் கண்டித்துப் பேசினுர்கள்.

21. சென்னையில் டி. கே. எஸ். சகோதரர்களுக்கு நாடக அபிமானிகள் ஒரு விருந்தளித்தனர்.

31. நாடகக் கலையை அபிவிருத்தி செய்ய ஒரு கமிட்டியை ஏற்படுத்துவதென சென்னை சர்க்கார் தீர்மானித்தது.

செப்டம்பர்

1948

தேதி

2. திருச்சிராப்பள்ளி ரத்னவேலுத் தேவர் ஹாலில் கிருஷ்ணன் கான நாடக சபாவினரின் "அணையா விளக்கு" நாடகம் ஆரம்பிக்கப்பட்டது.

6. ராசிபுரத்தில் 'நாடகக் கலை மன்றம்' என்ற நாடக சபை ஆரம்பமாகியது.

9. சென்னை ஒற்றைவாடைத் தியேட்டரில் டி. கே. எஸ். சகோதரர்களின் "ஒளவையார்" நாடகம் ஸ்ரீ. ரூ. கிருஷ்ணு ராவ் தலைமையில் ஆரம்பமாயிற்று.

[redacted] நாயகி 'ஸாயின் நிலையம்' என்ற தன் வீட்டின் கிரஹப் பிரவேசத்தை நடத்தினுர்.

12. சினி டெக்னிஷ்யன்கள் கூட்டத்தில் பதினுருயிரம் அடிக் கட்டுப்பாட்டை ஆதரித்துத் தீர்மானம் நிறைவேறியது.

விஜயா—ஹேமா இவர்களின் பரத நாட்டிய அரங்கேற்றம் மியூஸியம் தியேட்டரில் நடைபெற்றது.

14. "பிழைக்கும் வழி" தணிக்கைக் காட்சி நடைபெற்றது.

18. தென்னிந்திய பிலிம் சேம்பரில் நடைபெற்ற கூட்டத்தில் பதினுருயிரம் அடிக் கட்டுப்பாட்டைக் கண்டித்துப் பேசினுர்கள்.

22. "ராஜ முக்தி" படத்தின் தணிக்கைக் காட்சி நடைபெற்றது.

24. முபாரக் "பில்ஹணு"வின் தணிக்கைக் காட்சி மினர்வாவில் நடைபெற்றது.

25. ஏ. வி. எம். "வேதாள உலகம்" சென்னை பிரபாத்தில் திரையிடப்பட்டது.



நல்லதம்பி
விரைவில் வருகிறது!
நடிகர்கள்
கிருஷ்ணன்
மதுரம்
பானுமதி
சகஸ்ரநாமம்
மற்றும் பல N.S.K. நாடக சபா நடிகர்கள் நடித்தது.
டைரக்ஷன்
கிருஷ்ணன் பஞ்சு
கதை
C.N. அண்ணாதுரை M.A.
பாடல்கள்
நரராயண கவி
VENDHAN
ஸ்டூடியோ
நியூடோன்
விவரங்களுக்கு:
எனெஸ்கே பிலிம்ஸ் 6, வெங்கட்ராமய்யர் தெரு. தியாகராய நகர்.
உமா பிக்சர்ஸ் கீழ்பாக்கம், சென்னை.

அழகுக்கு அழகு செய்யும் ஆபரணங்கள்

P.A. ராஜு செட்டியார் & பிரதர்

தந்தி "ராஜா" கோயமுத்தூர் போன்: 268

Commercial Printing & Publishing House, Madras 1.